நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

முன்னிலை– திருமதி. ஞா. லிசி, B.A.B.L, (Hons), M.L.,

நீதித்துறை நடுவர், திருவாரூர்

2026–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 20–ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.25/2020

CNR No: TNTV02–000546–2020

அரசுக்காக :

காவல் ஆய்வாளர்,
மாவட்ட குற்ற பிரிவு,
திருவாரூர்.
குற்ற எண்.01/2019
U/s. 120–B, 406, 420 IPC

குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

A1.சக்திவேல், வயது 45/2020,
த.பெ. நாகராஜன்,
31 துர்காலயாரோடு,
திருவாரூர்.

A2.கோவிந்தலெட்சுமி, வயது 43/2020,
க/பெ. பாலகிருஷ்ணன்,
31 காலணி 3வது வீடு,
துர்காலயாரோடு,
திருவாரூர்.

குற்றம்சாட்டப்பட்டவர்கள்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020/F1(P.DIS). No.36/2021) உத்தரவின்படி CASE SUMMERY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

SL. NO.	The Period of remand	Name of the accused	Date of Remand	Release on

(i)	of accused	A1.Sakthivel A2.Govindhalakshmi	08.04.2019	11.06.2019

(ii)	Date of filling of the complainant/ final report in the court	Filing of complainant	Filing of Final report
		08.04.2019	18.08.2020

(iii)	Date of committal of the cases to the court of sessions	:	Nil
(iv)	Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 of the code of criminal procedure 1973 as the case may be	:	23.10.2020

(v)	**Date of Examination in Chief and Cross**		**Name of the Examination**	**Date of Chief**	**Date of Cross**
		PW1	Suresh	03.11.2020	03.11.2020
		PW2	Dhasan	03.11.2020	04.07.2023
		PW3	Azhagar	03.11.2020	08.06.2023
		PW4	Dharmaraj	04.11.2020	04.11.2020
		PW5	Suresh	04.11.2020	04.11.2020
		PW6	Sakthivel	19.11.2020	19.11.2020
		PW7	Dinesh	10.12.2020	10.12.2020
		PW8	Rajendran	10.12.2020	10.12.2020
		PW9	Murugadass	10.12.2020	10.12.2020
		PW10	Elavazhagan	29.12.2020	29.12.2020
		PW11	Devibala	29.12.2020	29.12.2020
		PW12	Jayageetha	29.12.2020	29.12.2020
		PW13	Nagulan	29.12.2020	29.12.2020

		PW14	Kamatchi	29.12.2020	29.12.2020
		PW15	Kalaiyarasan	29.12.2020	29.12.2020
		PW16	Latha	11.01.2021	25.04.2023
		PW17	Shanmugasundaram	11.01.2021	04.05.2023
		PW18	Sai Vignesh	25.02.2021	25.02.2021
		PW19	Iyyappan	25.02.2021	25.02.2021
		PW20	Kumarappan	25.02.2021	25.02.2021
		PW21	Kaliyamoorthi	31.03.2021	31.03.2021
		PW22	Shanmugapriya	31.03.2021	31.03.2021
		PW23	Ashokraj	21.04.2021	21.04.2021
		PW24	Gunaseelan	21.04.2021	21.04.2021
		PW25	Yogalakshmi	21.04.2021	21.04.2021
		PW26	Anandhanayaki	21.04.2021	21.04.2021
		PW27	Balachandar	28.04.2021	28.04.2021
		PW28	Muhil	28.04.2021	28.04.2021
		PW29	Ishwariya	25.02.2022	17.05.2022
		PW30	Radhika	25.02.2022	17.05.2022
		PW31	Iyyappan	25.02.2022	25.02.2022
		PW32	Uma Maheshwari	18.03.2022	18.03.2022
		PW33	Appas	01.04.2022	01.04.2022
		PW34	Muthupandi	01.04.2022	01.04.2022
		PW35	Sivaranjani	01.04.2022	01.04.2022
		PW36	Jaishankar	08.04.2022	08.04.2022
		PW37	Veerarajan	08.04.2022	08.04.2022

		PW38	Jai Marteen	08.04.2022	08.04.2022
		PW39	Arjunan	08.04.2022	08.04.2022
		PW40	Ananthbabu	24.05.2022	24.05.2022
		PW41	Sugabrammam	24.05.2022	24.05.2022
		PW42	Velmurugan	24.05.2022	24.05.2022
		PW43	Pushpavalli	24.05.2022	04.05.2023
		PW44	Premkumar	26.05.2022	26.05.2022
		PW45	Ramachadran	26.05.2022	26.05.2022
		PW46	Margerete shanthi	26.05.2022	26.05.2022
		PW47	Rajan	31.05.2022	31.05.2022
		PW48	Sangeetha	06.06.2022	06.06.2022
		PW49	Ragini	06.06.2022	06.06.2022
		PW50	Packirisamy	14.06.2022	14.06.2022
		PW51	Maheswari	14.06.2022	14.06.2022
		PW52	Dhinesh	14.06.2022	14.06.2022
		PW53	Sivathiyagarajan	21.06.2022	21.06.2022
		PW54	Senthil	21.06.2022	21.06.2022
		PW55	Agilarasan	21.06.2022	21.06.2022
		PW56	Balakumar	27.06.2022	27.06.2022
		PW57	Barameshwari	27.06.20222	27.06.2022
		PW58	Rajeshkumar	07.07.2022	07.07.2022
		PW59	Swaminathan	07.07.2022	07.07.2022
		PW60	Raja	14.07.2022	14.07.2022
		PW61	Puzhalenthiran	14.07.2022	14.07.2022

		PW62	Sasi	21.07.2022	21.07.2022
		PW63	Shanthi	04.08.2022	04.08.2022
		PW64	Ramesh	27.09.2022	27.09.2022
		PW65	Aravinthkumar	03.11.2022	03.11.2020
		PW66	Ramesh	13.12.2022	28.02.2023
		PW67	Mahalakshmi	10.07.2023	10.07.2023
		PW68	Karthika	31.07.2023	31.07.2023
		PW69	Durga	22.08.2023	05.08.2024
		PW70	Rani	12.12.2023	06.02.2024

(vi)	Date of examination of the accused U/s. 313 of the Code	20.05.2024
(vii)	Details of abscondance of an accused and his appearance/Production as the case may be:	Nil

(viii)	Grant of stay by superior courts and the results thereof	Sessions Court CMP No.	High /court No. and Date of stay	Result
	Nil	Nil	Nil	Nil

வணையப்பட்ட குற்றச்சாட்டு	சட்டப்பிரிவுகள் 120(B), 420, 406 இ.த.ச. –ன் படி சாட்சிகள் 1 முதல் 7 மற்றும் சாட்சிகள் 15 முதல் 66 ஆகியோர்களிடம் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை, நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர், நாகப்பட்டிணம் ஆகிய நீதிமன்றங்களில் உள்ள காலிபணியிடங்களில் வேலை வாங்கி தருவதாக நம்ப வைத்து, மேற்கண்ட நபர்களை ஏமாற்றி கெட்ட எண்ணத்துடன் ஒரு வேலைக்கு ரூ.2,50,000/–வீதம் நிச்சயித்து அதில் முன் பணமாக ரூ.1,00,000/– வீதம் 83 பேரிடம் மொத்தம் ரூ.83,00,000/– பணத்தை கெட்ட எண்ணத்துடன்

	வாங்கி கொண்டு வேலை வாங்கி தராமல் 1, 2 எதிரிகள் இருவரும் பணத்தையும் திருப்பி கொடுக்காமல் கூட்டு சதி செய்து நம்பிக்கை மோசடி மற்றும் பண மோசடி செய்த குற்றம்.
எதிரிகளின் பதில்	குற்றவாளி இல்லை.
நீதிபதியின் தீர்மானம்	எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 120(B), 420, 406 இ.த.ச. –ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது
தண்டனை அல்லது உத்தரவு	எதிரிகள் மீதான இ.த.ச சட்டப்பிரிவுகள் 120(பி), 420, 406–ன் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச.பிரிவு 248(2)–ன் கீழ் முடிவு செய்து, 1. எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 120(பி) ன் கீழ் 6 மாதங்கள் மெய்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.10,000/–மும் விதித்தும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 30 நாட்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுப்பவிக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகின்றது. 2. எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 420–ன் கீழ் 3 வருட மெய்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.10,000/–மும் விதித்தும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 30 நாட்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுப்பவிக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகின்றது. 3. எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 406 ன் கீழ் கீழ் 3 வருட மெய்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.10,000/– மும் விதித்தும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 30 நாட்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுப்பவிக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகின்றது. 4. எதிரிகள் தங்களுக்கு ஆறு மாதங்கள்

	மற்றும் 3 வருடங்கள் மற்றும் 3 வருடங்கள் என விதிக்கப்பட்ட மெய்க்காவல் சிறைதண்டனைகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து அனுபவிக்க வேண்டுமென கு.வி.மு.ச பிரிவு 31–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. 5. 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரிகள் தனித்தனியாக முறையே நீதிமன்ற காவலில் இருந்த 08.04.2019 முதல் 11.06.2019 வரையிலான மொத்தம் 64 நாட்களை கு.வி.மு.ச பிரிவு 428 ன் கீழ் கழிக்க உத்தரவிடப்படுகின்றது. 6.எதிரி வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி ரத்து செய்யப்படுகிறது. இந்த வழக்கில் தடயப் பொருட்கள் ஏதும் நீதிமன்ற பொருட்களாக தாக்கல் செய்யப்படவில்லை. மொத்த அபராதம் ரூ.60,000/–

இந்த வழக்கு 20.07.2025ஆம் நாளன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசின் சார்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திரு. இளஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் 1–வது எதிரி தரப்பில் திருமதி.ஆர்.சுதா அவர்களும், 2–வது எதிரி தரப்பில் திரு. பி.ஸ்ரீதர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினரும் வாதிட்டதைக் கேட்டறிந்தும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை என்னுடைய பரிசீலனையில் இருந்தும் வந்த இந்த வழக்கில் இன்று **(20.04.2026)** இந்நீதிமன்றம் பிறப்பித்த...

தீர்ப்புரை

1. அரசுத் தரப்பு வழக்கு :

இவ்வழக்கின் புகார்தாரர் சுரேஷ், த/பெ. பக்கிரிசாமி என்பவர் திருவாரூர்

மாவட்டம் மாங்குடி அஞ்சல், கடுவங்குடி காலணியில் வசித்து வருகிறார். இவர் பிளஸ்டூ வரை படித்து விட்டு விவசாய கூலி வேலை செய்து வந்துள்ளார். இவ்வழக்கின் 1வது எதிரி திருவாரூர் துர்க்காலயா ரோடு கதவு இலக்கம் 3 என்ற முகவரிலயில் வசித்து வருகிறார். 2வது எதிரியான கோவிந்தலட்சுமி, க/ப. பாலகிருஷ்ணன் என்பவர் 1வது எதிரிக்கு சொந்தமான கதவிலக்கம் 31/3 வது தெருவில் உள்ள காலணியில் வாடகைக்கு வீடு எடுத்து குடியிருந்து வருகிறார். இவர் திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். மேலும் 1வது எதிரியான சக்திவேல் திருவாரூர் துர்காலயா ரோட்டில் சக்தி இயற்கை பொருள் அங்காடி என்ற கடை வைத்து வியாபாரம் செய்து வந்துள்ளார். அந்த கடையில் புகார்தாரர் சுரேஷ் அடிக்கடி மேற்படி கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கும்போது 1வது எதிரிக்கும் சுரேசுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த பழக்கத்தில் கடந்த 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சுரேஷ் எதிரி–1 ன் கடைக்கு பொருட்கள் வாங்க சென்றபோது எதிரியானவர் சுரேஷிடம் தாங்கள் எதுவும் வேலை பார்க்கிறீரா என கேட்டுள்ளார். அதற்கு அவர் வேலை பார்க்கவில்லை வேலைக்குதான் முயற்சி செய்து கொண்டுள்ளேன் என கூறியுள்ளார். அதற்கு 1வது எதிரி தற்போது திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய நீதிமன்றங்களில் காலி பணியிடங்கள் நிறைய உள்ளது எனக்கு தெரிந்த இதே திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் வேலை பார்த்து வரும் கோவிந்தலெட்சுமி (2வது எதிரி) என்பவர் தன்னுடைய காலணியில்தான் குடியிருந்து வருகிறார் அவர் மூலமாக வேலைக்கு ஏற்பாடு செய்கிறேன். வேலைக்கு செல்வதற்கு விருப்பமா என சுரேஷிடம் கேட்டு அவரை தூண்டிவிட்டு வேலை வாங்கி தருவதாக நம்பவைத்து அவரை சம்மதிக்க செய்து அதன் பேரில் வேலைக்கு ரூ.2,50,000/– என நிச்சயித்து அதில் முன் பணமாக ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்றும், மீதி பணத்தை வேலைக்கான உத்தரவு வந்தவுடன் தரவேண்டும் என்று நிபந்தனை வைத்தும், மேலும் உங்களுக்கு தெரிந்த நண்பர்கள் யாராவது இருந்தால்

அவர்களுக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்வதாக கூறியதன் பேரில் சுரேஷ் தனது தம்பிகளான அழகர், தாசன் மற்றும் சுரேஷ், தர்மராஜ், தினேஷ், சக்திவேல் ஆகியோர்களையும் 1–வது எதிரியிடம் அறிமுகப்படுத்தி, அவர்களுடைய கல்வி சான்றிதழ், பயோடேட்டா, போட்டோ, பணத்தையும் தயார் செய்து சீக்கிரம் கொடுங்கள் என எதிரி கூறியுள்ளார். அதன் தொடர்ச்சியாக 1–வது எதிரி கொடுத்த நம்பிக்கையின் பேரில் சுரேஷ் தனது இருதம்பிகளுக்கு, மற்ற நால்வரும் சேர்ந்து அவர்களது பயோடேட்டா, போட்டோ, கல்வி சான்றிதழ், பணம் 7 லட்சம், ஆகியவற்றை 13.02.2018 ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு 1–வது எதிரியின் வீட்டிற்கு சென்று 7லட்சம் பணத்தையும், அவர்களுடைய பயோடேட்டாவையும் கொடுத்துள்ளார். அதை எதிரி பெற்றுக் கொண்டு உங்களுக்கெல்லாம் ஒரு மாதத்திற்குள் வேலை வந்துவிடும் மீதி பணத்தை வேலைக்கான உத்தரவு வந்தவுடன் கொடுக்க வேண்டும் என கூறி உள்ளார், பிறகு ஒரு மாதம் கடந்தும் வேலைக்கான உத்தரவு வராததால் 1வது எதிரியிடம் சுரேஷ் நேரில் கேட்டுள்ளார். அதற்கு எதிரி 28.04.2018 ஆம் தேதிக்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் போங்கள் என கூறியுள்ளார். பிறகு ஏப்ரல் மே 2018 மாதம் முடிந்ததும், வேலைக்கான உத்தரவு வராததால் சுரேசும் பணம் கொடுத்தவர்களும் 1–வது எதிரியிடம் கேட்ட போது மே மாதம் கோர்ட் லீவு, ஜுன், ஜூலை 2018 ல் வேலைக்கு உத்தரவு வந்துவிடும் என கூறியுள்ளார். பிறகு ஜூலை மாதம் முடிந்து 1–வது எதிரியிடம் பணம் கொடுத்தவர்கள் கேட்டபோது 2018 டிசம்பருக்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என பலமுறை ஏமாற்றி வந்துள்ளார். அதன் தொடர்ச்சியாக 2019 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகை முடித்து 1–வது எதிரியிடம் பணம் கொடுத்த 7 பேரும் நேரில் சென்று பணம் கொடுத்து இவ்வளவு நாள் ஆகிறது. வேலை வாங்கி தராமல் தொடர்ந்து பொய் சொல்லி ஏமாற்றி வருகிறீர்கள் ஒன்று வேலை வாங்கி கொடுங்கள். அல்லது கொடுத்த பணத்தை திரும்பி கொடுங்கள் என கேட்டபோது நீங்கள் கொடுத்த பணத்தை எல்லாம் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்க்கும்

கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டேன். நீங்களே அவரிடம் பேசுங்கள் என தனது கைபேசியை சுரேஷிடம் கொடுத்து கேட்க. அதற்கு கோவிந்தலெட்சுமி சக்திவேலிடமிருந்து பணம் வாங்கியது உண்மைதான், உங்கள் அனைவருக்கும் 28.02.2019 ஆம் தேதிக்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என்று சொல்லி சமாதானபடுத்தியுள்ளார். அதன் பிறகும் வேலைக்கான உத்தரவு ஏதுவும் கிடைக்காததால் 04.03.2019 ஆம் தேதிக்குள் வேலை வந்துவிடும். அப்படி வரவில்லை என்றால் சக்திவேல் என்னிடம் வேலைக்காக கொடுத்த பணத்தை நானே திருப்பி கொடுத்து விடுகிறேன் என கூறி இருவரும் வேலையும் வாங்கி தராமல் பணத்தையும் திருப்பி கொடுக்காமல் கூட்டுசதி செய்து நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றி வந்துள்ளனர். பிறகு 1, 2 வது எதிரிகள் இருவரும் 7 பேரிடமும் 7 லட்சத்தை பெற்றுக் கொண்டு வேலையும் வாங்கி தராமல் பணத்தையும் திருப்பி கொடுக்காமல் ஒரு வருடமாக இழுத்தடித்து வந்த நிலையில் பணத்திற்கு உத்திரவாதம் கேட்டபோது சக்திவேல் வீட்டிலிருந்த 2வது எதிரி மற்றும் 1வது எதிரி இருவரும் பணம் பெற்றுக் கொண்டதற்காக 20 ரூபாய் பத்திரத்தில் எழுதி கையொப்பமிட்டு கொடுத்துள்ளனர். பிறகு சுரேஷ் 1வது எதிரி வீட்டிற்கு நேரில் சென்று வேலை சம்மந்தமாக கேட்டபோது பணத்திற்கான உத்தரவு பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு வேலை வாங்கி தராமல் நீங்களும் 2வது எதிரியும் ஏமாற்றி வருகிறீர்கள் என கேட்டபோது, 2வது எதிரி திருவாரூர் கோர்ட்டில் வேலை செய்கிறார். போய் கேட்டு பார்த்துக் கொள்ளுங்கள் என கூறியதன் பேரில் பணம் கொடுத்து ஏமாந்த தர்மராஜும், தாசும் போய் கோவிந்தலெட்சுமியிடம் கேட்டபோது வெளியில் நில்லுங்கள் எனது வேலையை முடித்துவிட்டு வருகிறேன் என கூறிவிட்டு சென்றவர் நீண்ட நேரமாகியும் வராமல் தலைமறைவாகி அங்கிருந்து சென்றுவிட்டார். இந்நிலையில் 1, 2 வது எதிரிகள் இருவரும் கூட்டு சதி செய்து திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை போன்ற நீதிமன்றங்களில் உள்ள காலிபணியிடங்கள் (அலுவலக

உதவியாளர் தனியரின் கல்வி தகுதிக்கேற்ப) வேலை வாங்கி தருவதாக மோசடி செய்து ஏமாற்றி பிறரை துாண்டி கெட்ட எண்ணத்தோடு(with malafide intention dishonesty induced a person by deceiving of fradulent manner) 1 முதல் 7 வரையுள்ள சாட்சிகளிடம் (பணம் கொடுத்து ஏமாந்தவர்கள்) 7 லட்சம் பெற்றுக் கொண்டு வேலை வாங்கி தருவதாக ஏமாற்றி குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து (criminal breach of trust and cheating) குற்றம் புரிந்ததோடு இதே போல் இறுதி அறிக்கையில் கண்ட சாட்சிகள் 8 முதல் 42 வரையிலான நபர்களிடமும் திருவாரூர் மன்னார்குடி, கும்பகோணம், சென்னை, ஆகிய நீதிமன்றங்களில் உள்ள காலிபணியிடங்களில் வேலை வாங்கி தருவதாக நம்ப வைத்து, மேற்கண்ட நபர்களை ஏமாற்றி கெட்ட எண்ணத்துடன் ஒரு வேலைக்கு ரூ2,50,000/- வீதம் நிச்சயித்து அதில் முன் பணமாக ரூ.1,00,000/- வீதம் 83 பேரிடம் 83 லட்சம் பெற்றுக் கொண்டும், மோசடி செய்ததோடு மொத்தமாக 83 பேரிடமும் 83 லட்சம் பணத்தை வேலை வாங்கி தராமல் 1, 2 எதிரிகள் இருவரும் பணத்தையும் திருப்பி கொடுக்காமல் கூட்டு சதி செய்து நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதோடு 1, 2 எதிரிகள் இருவரும் Wrong full Gain ம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு Wrong full Loss-யும் செய்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1-வது எதிரி மற்றும் 2-வது எதிரி மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 120-B, 406, 420-ன் கீழ் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களால் Cr.P.C 173கீழ் -ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:</u>

குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களால் கடந்த 10.06.2020 -ம் தேதியன்று 1-வது எதிரி மற்றும் 2-வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 120-B, 420, 406-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 18.08.2020 ம் தேதி இந்நீதிமன்றக் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குவிமுச

பிரிவு 204–ன் கீழ் எதிரிகளுக்கு சம்மன் அனுப்பட்டது.

3. **<u>எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207–ன் கீழ் நகல் வழங்கப்பட்டத்தின் விவரம் :</u>**

எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவர்களுக்கு குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. **<u>எதிரிகளின் மீது வணைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>**

4. 1. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலணை செய்து, இந்நீதிமன்றத்தால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120-B, 420, 406- கீழ் எதிரிகளின் மீது கு.வி.மு.ச பிரிவு 240(1)–ன் படி குற்றச்சாட்டு வணையப்பட்டது.

4. 2. மேற்படி குற்றச்சாட்டுகளை எதிரிகளிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார்கள். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டது.

5. **<u>அரசுத்தரப்பு சாட்சியம்:</u>**

5.1.அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.70வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.26 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

5.2.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக கருதப்பட்ட சாட்சியங்களை தொகுத்து **கு.வி.மு.ச .பிரிவு 313 (1) (பி)** பிரிவின் கீழ் விளக்கி வினவிய போது எதிரிகள் அவற்றை பொய் என மறுத்துரைத்துள்ளார்கள். எதிரிகள் தமது தரப்பில் சாட்சி இல்லை என தெரிவித்துள்ளார்கள்.

6. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,

எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 120-B, 420, 406–ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரிகள் இக்குற்றத்தை செய்தாரா? என்பது அரசு தரப்பில்

நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

7.தீர்வு:

முதல்நிலை புகார்தாரரான சுரேஷ், த/பெ. பக்கிரிசாமி தனது புகாரில் தான் +2 வரை படித்துள்ளதாகவும், தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், தனக்கு துர்காயலா ரோட்டில் சக்தி இயற்கை அங்காடி நடத்தி வரும் அதன் உரிமையாளர் சக்திவேல் என்பவர் தான் அந்த கடையில் பொருள் வாங்கும் போது பழக்கம் ஏற்பட்டுள்ளது என்றும், தான் கடந்த 2018–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பொருள் வாங்கச் சென்ற போது அவர் தன்னிடம் நீங்கள் ஏதாவது வேலை பார்த்து வருகிறீர்களா என கேட்டார் தான் தற்சமயம் வேலை எதுவும் பார்க்கவில்லை, தற்பொழுது வேலைக்கு முயற்சி செய்து வருகிறேன் என கூறியதாகவும், அதற்கு சக்திவேல் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய நீதிமன்றங்களில் காலி இடங்கள் உள்ளது, அந்த வேலைக்கு செல்வதற்கு விருப்பமா என கேட்டதாகவும், தானும் வேலை தேடிக் கொண்டிருந்ததால் தான் சரி என கூறினேன், அதற்கு அவர் ரூ.2,50,000/–ம் பணம் கொடுக்க வேண்டும், அதற்கு முன்பணமாக ரூ.1,00,000/–த்தை உடனே கொடுக்க வேண்டும் என்றும், மீதி பணத்தை வேலைக்கான உத்தரவு வந்த பிறகு தர வேண்டும் என கூறினார் என்றும், மேலும் உங்களுக்கு தெரிந்த நபர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்வதாக கூறினார் என்றும், தானும் சரியென கூறி வந்து விட்டதாகவும், தான் தனது தம்பி அழகர் மற்றும் தாஸனிடம் இதைப்பற்றி சொன்னேன், அவர்களும் அரசு வேலை என்பதால் ஒப்புக் கொண்டார்கள் என்றும், மேலும் தனது நண்பர்களான சுரேஷ், தர்மராஜ், தினேஷ் மற்றும் சக்திவேல் ஆகியோரிடமும் இதைப்பற்றி சொன்னேன், அவர்களும் அரசு வேலை என்பதால் ஒப்புக் கொணடார்கள் என்றும், பின்னர் சக்திவேலிடம் தன் தம்பிகள் இருவர் மற்றும் நண்பர்கள் நான்கு பேர் உட்பட ஆறு பேருக்கு வேலை கிடைக்குமா எனக் கேட்டேன், **அவர் பணத்தை உடனே கொடுத்தால் வேலை கிடைக்கும் என சொன்னார்** என்றும்,

அவர் ஆறு நபர்களுக்கும் உரிய கல்வி சான்றிதழ் நகல் பயோடேட்டா, போட்டோ ஆகியவைகளையும் பணத்தை தயார் செய்தவுடன் சீக்கிரமாக வந்து தருமாறு கூறினார் என்றும், தானும் தனது தம்பிகள் மற்றும் நண்பர்களிடம் இது பற்றி கூறினேன், அவர்களும் சரியென ஒப்புக் கொண்டார்கள் என்றும், **தானும் தனது தம்பிகளும் மற்றும் தனது நண்பர்களும் கடன் வாங்கியும் நகைகளை அடமானம் வைத்தும் பணத்தை தயார் செய்தோம், அந்த பணத்தை எடுத்துக் கொண்டு தான் தனது தம்பிகள் தனது நண்பர்கள் ஆகிய ஏழு பேரும் 13.02.2018ம் தேதி இரவு 8.30 மணிக்கு சக்திவேல் வீட்டிற்கு சென்று அவரிடம் ரூ.7,00,000/- பணத்தையும், போட்டோ, பயோடேட்டா, சான்றிதழ்களையும் கொடுத்தோம்** என்றும், பணத்தை பெற்றுக் கொண்ட சக்திவேல் ஒரு மாதத்தில் வேலைக்கான உத்தரவு வந்து விடும் உத்தரவு வந்த உடன் மீதிப்பணத்தை உடனே கொடுக்க வேண்டும் என கூறினார் என்றும், தாங்களும் சரி என ஒப்புக் கொண்டு வந்து விட்டோம், ஆனால் அவர் கூறியபடி ஒரு மாதத்தில் உத்தரவு வராததால் சக்திவேலிடம் நேரில் சென்று தான் கேட்ட போது 28.04.2018-க்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என கூறினார், ஆனால் ஏப்ரல் மாதம் முடிந்தும் உத்தரவு வராததால் தனது தம்பிகளுடன் சென்று கேட்டபோது மே மாதம் எல்லா கோர்ட்டும் லீவு என்பதால் ஜூன், ஜூலைக்குள் வேலைக்கான உத்தரவு வந்து விடும் என கூறியதாகவும், ஜூலை மாதம் சென்று கேட்ட போது தற்சமயம் வேலைக்கான உத்தரவு வருவதற்கு வாய்ப்பில்லை இந்த வருடம் கடைசிக்குள் வேலைக்கான உத்தரவு வந்து விடும் அதனை நானே உங்களிடம் வந்து தருகிறேன் என சக்திவேல் கூறியதாகவும், **2019-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகை முடிந்து சக்திவேலிடம் சென்று நாங்கள் ஏழு பேரும் பணம் கொடுத்து இவ்வளவு நாள் ஆகிவிட்டது, வேலை வாங்கித் தராமல் தொடர்ந்து ஏமாற்றி வருகிறீர்கள், நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி கொடுத்து விடுங்கள் எனக் கேட்டோம், அதற்கு சக்திவேல் நீங்கள் கொடுத்த பணத்தையெல்லாம் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்க்கும் கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துள்ளேன் என**

சொல்லி நீங்களே அவரிடம் பேசுங்கள் என தனது செல்போனில் இருந்து கால் செய்து அவரிடம் பேசி தன்னிடம் கொடுத்தார், அப்பொழுது கோவிந்தலெட்சுமி பேசுவதாகவும் தான் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்ப்பதாகவும் நீங்கள் கொடுத்த பணம் என்னிடம் வந்து விட்டது, உங்கள் அனைவருக்கும் 28.02.2019–க்குள் வேலைக்கான உத்தரவு வந்து விடும் என கூறினார் என்றும், அவ்வாறு வேலைக்கான உத்தரவு வரவில்லை என்றால் 04.03.2019–க்குள் அனைவருக்கும் நானே பணத்தை கொடுத்து விடுகிறேன் என கூறினார் என்றும், தாங்களும் ஒப்பு கொண்டு வந்து விட்டோம், பின்னர் தங்களுக்கு அவர்கள் மீது சிறு சந்தேகம் ஏற்பட்டதால் 04.02.2019ம் தேதி தனது தம்பி தாசனும் சக்திவேல் வீட்டிற்கு சென்றோம், அங்கு சக்திவேல் இருந்தார் அவரிடம் சென்று தாங்கள் பணம் கொடுத்ததற்கான சான்றாக எழுதி கொடுக்குமாறு கேட்டோம், அப்போது சக்திவேல் தங்களிடம் பத்திரத்தை வாங்கி வர சொன்னார், தானும் ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தை வாங்கிக் கொண்டு **சக்திவேல் வீட்டிற்கு வந்தோம் அப்போது சக்திவேலுடன் ஒரு பெண் இருந்தார் அவரை காண்பித்து இவர்தான் கோவிந்தலெட்சுமி என்றும் நீங்கள் கொடுத்த பணத்தையெல்லாம் இவரிடம் தான் கொடுத்தேன் என சக்திவேல் கூறியதாகவும், அதற்கு கோவிந்தலெட்சுமி நீங்கள் கொடுத்த பணம் உரியவர்களிடம் கொடுத்து விட்டேன் என்று சொன்னதாகவும், அதற்கு தாங்கள் பணம் கொடுத்ததற்கான சான்று எழுதிக் கொடுக்குமாறு கேட்டோம், அதற்கு சக்திவேல் நீங்கள் வாங்கி வந்த பத்திரத்தில் வேலைக்காக நான் பணம் பெற்று கொண்டதற்கு நானும் கோவிந்தலெட்சுமியும் கையெழுத்திட்டு தருகிறோம் என கூறினார் என்றும், பின்பு தனது தம்பி தாசன் சக்திவேல் வீட்டிலேயே அந்த பத்திரத்தில் தனது தம்பிகள் மற்றும் நண்பர்கள் உட்பட ஏழுபேருக்கும் பணம் பெற்றுக் கொண்டதற்காக அந்த பத்திரத்தில் எழுதினார், அதில் சக்திவேலும், கோவிந்தலெட்சுமியும் கையெழுத்திட்டார்கள்,** பின்பு அவர் கூறியபடி உண்மை என நம்பி வந்து விட்டோம், தனது நண்பன் சக்திவேல் என்பவருக்கு பிப்ரவரி

மாதம் TNCSC–யில் வேலை கிடைத்ததால் அவர் கொடுத்த பணத்தை திருப்பி தருமாறு சக்திவேலுவிடம் சென்று கேட்டோம், அவர் ஒரு வாரத்தில் தருவதாக கூறி 15 நாட்கள் கழித்து ரூ.1,00,000/– பணத்தை கொடுத்தார் என்றும், **சக்திவேல் கூறியபடி 28.02.2019 வேலை வாங்கி தராததால் 01.03.2019–ம் தேதி சக்திவேலிடம் சென்று கேட்ட போது சக்திவேல் பணத்தை பெற்றுக் கொண்டு கோவிந்தலெட்சுமி ஏமாற்றி வருவதாக கூறினார்**, அதற்கு தாங்கள் பணத்தை உங்களிடம் தான் கொடுத்தோம் அதற்கு நீங்கள் தான் பொறுப்பு என சொன்னேன், அதற்கு **சக்திவேல் உங்கள் அனைவருக்கும் தனித்தனியாக எழுதி தருகிறேன் என கூறி ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாக கையெழுத்திட்டு கொடுத்தார்**, மேலும் சக்திவேல் திருவாரூர் கோர்ட்டிற்கு சென்று கோவிந்தலெட்சுமியிடம் கேட்போம் என கூறினார் தனக்கு அவசர வேலை இருந்ததால் தான் தனது தம்பி தாசன் தர்மராஜும் கோர்ட் சென்று பார்க்குமாறு கூறி சென்று விட்டேன் **தனது தம்பி தாசனும், தர்மராஜ் ஆகிய இருவரும் சக்திவேலுடன் சென்று திருவாரூர் கோர்ட்டில் கோவிந்தலெட்சுமியிடம் சென்று கேட்டபோது வெளியில் இருங்கள் என்று கூறிச் சென்றவர் திரும்பி வரவில்லை**, தனது தம்பியும், தர்மராஜும் சக்திவேலிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டதாக தன்னிடம் கூறினார்கள் என்றும், பின்பு **மறுநாள் தன்னை போல் வேலைக்கு பணம் கொடுத்த திருவாரூரைச் சேர்ந்த சசி என்பவர் செல்போனில் தன்னிடம் நேற்று கோர்ட்டில் கோவிந்தலெட்சுமி தன் மீது மண்ணென்ணெய் ஊற்றி கொண்டு தற்கொலைக்கு முயற்சித்ததாக தன்னிடம் சொன்னார்**, பின் சக்திவேலிடம் சென்று பணம் சம்பந்தமாக கேட்டோம், அதற்கு இந்த வேலை சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும் தற்சமயம் பணம் தர இயலாது எனவும் விரைவில் கொடுத்து விடுவதாகவும் கூறினார் என்றும், **சக்திவேல் தங்களைப் போல் சுமார் 83 பேரிடம் 83 லட்சம் பணம் பெற்றுக் கொண்டு வேலை வாங்கி தராமல் ஏமாற்றி இருப்பது தங்களுக்கு இப்பொழுது**

தெரிய வந்தது என்றும், எனவே தனக்கும் தனது தம்பிகள் மற்றும் நண்பர்கள் ஆறு பேருக்கு வேலை வாங்கி தருவதாக ரூ.6,00,000/–பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றி சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமி ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுதருமாறு புகார் கொடுத்துள்ளார்.

08.அரசுத்தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்:

அ.சா.1 சுரேஷ்– முதல்நிலை புகார்தாரர்/ அரசு தரப்பு விசாரணையில், எதிரி–1 நடத்தி வரும் இயற்கை அங்காடியில் குழந்தைகளுக்கு இயற்கை உணவு வாங்குவதற்கு அடிக்கடி செல்வது மூலம் பழக்கமானவர் என்றும், அந்த பழக்கத்தை எதிரி–1 பயன்படுத்தி தாங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்ன படித்துள்ளீர்கள் என கேட்டார் அதற்கு அ.சா.1 தான் +2 முடித்து வேலை தேடி வருகிறேன் என்று சொன்னதற்கு உங்களுக்கு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர் பணி வேண்டுமா 7, 8 வேக்கன்ஸி இருக்கு உனக்கு தெரிந்தவர்கள் இருந்தாலும் சொல்லும் படி சொன்னார் என்றும், அதற்கு ரூ.2,50,000/– செலவாகும், முன்பணம் ரூ.1,00,000/–ம் கொடுத்தால் நீதிமன்றத்தில் வேலைக்கான உத்தரவு வந்தவிடும், உத்தரவு வந்தவுடன் மீதி தொகை ரூ.1,50,000/–த்தை கொடுக்க வேண்டும் என்று சொன்னார் என்றும், **தனக்காக ஒரு லட்சமும், இரண்டாவதாக அழகர், மூன்றாவதாக தாசன், நான்காவதாக தர்மராஜ், ஐந்தாவதாக சக்திவேல், ஆறவதாக தீனேஷ் ஆகியோருக்கு தனித்தனியே ரூ.1,00,000/– கொடுத்தோம்**, பணம் கொடுத்து வேலைக்கான உத்தரவு வராததால் பிப்ரவரி மாதம் 2018ல் சென்று இன்னும் வேலை வரவில்லை என்று கேட்டோம், மூன்று மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னீர்களே அப்பொழுது எதிரி–1 சக்திவேல் ஜுன் மாதத்தில் வேலை கிடைத்து விடும் என்று சொன்னார், ஜுன் மாதமும் வேலை கிடைக்கவில்லை, அதனால் மீண்டும் சென்று கேட்டேன், மே மாதம் கோர்ட் லீவு என்றும், அதன்பிறகு 6 மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்றும் இல்லை என்றால்

வாங்கிய பணத்தை திருப்பி தந்துவிடுவதாக சொன்னார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். **அவர் சொன்னபடி வேலை வாங்கி தரவில்லை தான் மீண்டும் சென்று கேட்டேன் அப்பொழுது அவர் பணத்தை வாங்கி தான் வைத்துக் கொள்ளவில்லை இவரிடம் கொடுத்துவிட்டேன் என்று எதிரி–2 கோவிந்தலெட்சுமியை தன்னிடம் காட்டினார்** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். யார் இவர் என்று அ.சா.1 கேட்டபோது, அதற்கு எதிரி–1 சக்திவேல், எதிரி–2 கோவிந்தலெட்சுமியை அவருடைய சொந்த காலணியில் குடியிருப்பதாகவும் கூறியுள்ளார் என்றும், அவரது வீட்டுக்கு கோவிந்தலெட்சுமியை அழைத்து வந்துதான் அ.சா.1க்கு அறிமுகம் செய்தார் என்றும், **அ.சா.1யிடம் எதிரி–1 வாங்கிய பணத்திற்கு நான் உத்தரவாதம் என்று கோவிந்தலெட்சுமி தன்னிடம் சொன்னார்** என்றும், அதன்பிறகு அ.சா.1 சக்திவேலிடம் நேரடியாகவும், அவர் தன்னிடம் கொடுத்த போன் மூலமாகவும் தொடர்பு கொண்டு கேட்டேன் அவர் பதில் சொல்லவில்லை அதனால் மீண்டும் நேரடியாக சென்று சக்திவேலிடம் கேட்ட போது அ.சா.1ஐ ஒரு பத்திரம் வாங்கி வரும்படியும் அதில் பணத்திற்கு உத்திரவாதம் செய்து எழுதி தருவதாகவும் சொன்னார் என்றும், தான் பத்திரம் வாங்கி வந்து அவர்களிடம் கொடுத்தேன் **எதிரிகள் இருவரும் அதில் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தார்கள் என்றும், அதில் மேற்படி பத்திரத்தை 5 பேருக்காக அதாவது தனக்காவும், அழகர், தாசன், சுரேஷ், தர்மாராஜ், தினேஷ் ஆகிய 5 பேருகளுக்காகவும் எழுதி கொடுத்தார் என்றும், மேற்படி, 5 நபர்களுக்காகவும், தனித்தனியாக உத்தரவாதம் கேட்டதால் அவர்களுக்கும் தனித்தனியாகவும் சக்திவேல் கையொப்பம் போட்டுக் கொடுத்தார்** என்றும், ஆனால் தங்களுக்கு வேலையோ பணமோ கொடுக்கவில்லை, இந்த நிலையில் சக்திவேல் போலீஸ் புகார் கொடுத்தார் அதில் பணத்தை வாங்கி அவர் வைத்துக் கொள்ளவில்லை என்றும், கோவிந்தலெட்சிமியிடம் கொடுத்துவிட்டதாக கூறியிருந்தார் என்றும், போலீஸ்சார் அவர் கொடுத்த புகாரின் பேரில் தன்னையும் விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரித்த போது தான் சக்திவேலிடம் பணம்

கொடுத்து ஏமாந்துவிட்டதாக கூறியிருந்தேன் என்றும், அதில் சக்திவேல் என்பவருக்கு TNCSC வேலை கிடைத்து விட்டதால் அவரது பணத்தை எதிரி சக்திவேலிடமிருந்து வாங்கி கொடுத்து விட்டேன் அந்த தொகை ரூ.1,00,000/– ஆகும். மீதி ரூ.6,00,000/– இது வரை பெற முடியவில்லை, வேலைக்கான உத்தரவும் வரவில்லை, இது சம்பந்தமாக தான் மாவடட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** எதிரி ஆஜரில் இருந்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் நீதிமன்றம் கேட்டுக் கொண்டும் குறுக்கு விசாரணைய செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்கு விசாரணையில் முடிக்கப்படுகிறது.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1வது எதிரி 2வது எதிரியை 1வது எதிரியின் வீட்டில் குடியிருப்பதாக சொல்லிதான் தனக்கு அறிமுகம் செய்தார் என்றும், **1வது எதிரி சொன்னதன் பேரில்தான் 2வது எதிரி 1வது எதிரியின் காலணியில் குடியிருப்பதாக தெரிந்துக் கொண்டேன் அ.சா.ஆ.3 2வது எதிரியால் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல என்றும், அதிலுள்ள கையெழுத்து 2வது எதிரியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல** என்றும், நான் பணம் கொடுத்தது 1வது எதிரியிடம் மட்டுமே என்றால் சரிதான் என்றும், அ.சா.ஆ.3 2வது எதிரியும் பணம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் 1வது எதிரி சொன்னதன்படிதான் 2வது எதிரி எழுதி கொடுத்தார் என்றும், **அ.சா.ஆ.3 யாரால் எழுதப்பட்டது என்றால் 1வது எதிரி சொல்ல சொல்ல என் தம்பி தாசன் எழுதினார் என்றும் பதில் அளித்துள்ளார்.**

அ.சா.2 தாசன் அரசு தரப்பு முதல் விசாரணையில் 1வது எதிரி துர்காலாயா ரோட்டில் இயற்கை அங்காடி நடத்தி வருகிறார் என்றும், **அ.சா.1 1வது எதிரியின் கடைக்கு பொருள் வாங்க சென்றதன் மூலம் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது**

என்றும், 1வது எதிரி சக்திவேல் அ.சா.1னிடம் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் உதவியாளர் வேலை இருப்பதாக அதை வாங்கி தருவதாக அ.சா.1 சென்னையில் இருந்த தன்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார் என்றும், மேற்படி வேலைக்கு ரூ.2,50,000/– தொகை என்றும், முன்பணமாக ரூ.1,00,000/– தருமாறும் 1வது எதிரி சக்திவேல் அ.சா.1யிடம் சொன்னதாக அ.சா.1 தன்னிடம் சொன்னார் என்றும், **இந்த விபரத்தை சக்திவேல், தர்மராஜ், சுரேஷ், தினேஷ் ஆகியோர்களுக்கு சொன்னேன் என்றும், 7 நபர்களுக்கு மொத்தமாக ரூ.7,00,000/–த்தை திருவாரூர் சென்று துர்காலாயா ரோட்டில் உள்ள 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது வீட்டில் வைத்து 13.02.2018ம் தேதியில் பணத்துடன் தங்களது பயோ டேட்டா மற்றும், போட்டோ, ஆதார் கார்டு நகல் ஆகியவற்றை சேர்த்து கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.** எதிரி சக்திவேல் ஒரு மாதத்தில் வேலை வந்துவிடும் என்று உறுதியளித்தார், ஆனால் பேசியபடி 1வது எதிரி வேலை வாங்கி தரவில்லை என்பதால் தானும், அ.சா.1 சுரேஷ்சும், 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று கேட்டோம், அதற்கு 1வது எதிரி மே மாதம் கோர்ட் லிவு, என்பதால் ஜுன், ஜூலையில் **வேலை கிடைத்துவிடும், என்றார் ஆனால் கிடைக்கவில்லை என்பதால் 1வது எதிரி சக்திவேலிடம் கேட்டதற்கு திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்க்கும் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்து விட்டதாக சொன்னார் என்றும், தாங்கள் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் இருந்து போன் மூலம் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை தொடர்பு கொண்டு பேசிய போது உங்கள் பணம் என்னிடம் தான் உள்ளது, 2019 ஏப்ரல் மாதத்திற்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என்று சொன்னார்** என்றும், ஆனால் வேலை வரவில்லை, அதனால் அ.சா.1 திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

◆ **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** தன்னிடம் போனில் பேசியது

கோவிந்தலெட்சுமி அல்ல என்றால் சரியல்ல என்றும், 1வது எதிரிக்கு சொந்தமான வீட்டில்தான் 2வது எதிரி குடியிருந்து வருகிறார் என்றும் பதில் அளித்துள்ளார். **கோவிந்தலெட்சுமியிடம் போனிலும், நேரிலும் பேசியபோது பணம் தன்னிடம்தான் உள்ளதாகவும், வேலை உறுதியாக வாங்கிக் கொடுத்துவிடுவதாகவும், இல்லை என்றால் பணத்தை திரும்பி கொடுத்து விடுவதாகவும் தன்னிடம் சொன்னார்** என்றும் பதில் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலையில் உள்ளாரா என்றால் இல்லை, அவரது வீட்டில் குடியிருந்த கோவிந்தலெட்சுமி என்பவர் நீதிமன்றத்தில் வேலை பார்ப்பதாகவும், அவர் மூலம் வேலைக்கு ஏற்பாடு செய்வதாக சக்திவேல் சென்னதாக என் அண்ணன் என்னிடம் சொன்னார் என்றும், நான் 1வது எதிரியிடம் பணம் கொடுக்கும் போது கும்பகோணம், மன்னார்குடி, சென்னை, திருவாரூர் ஆகிய நீதிமன்றங்களில் வேலை இருப்பதாக சொல்லி பணத்தையும், பயோ டேட்டாவையும் எதிரி சக்திவேல் வாங்கி கொண்டார் என்றும், எதிரி சக்திவேலும், கோவிந்தலெட்சுமியும் எழுதி கொடுத்த ஆவணத்தில் மாலதி சாட்சி கையெழுத்து போட்டாரா என்றால் மாலதி கையெழுத்து போடவில்லை, **கோவிந்தலெட்சுமியும் சக்திவேலும் எழுதி கொடுத்தார்கள்,** 2019ம் வருடம் எழுதி கொடுத்தார்கள் என்றும், நாங்கள் புகார் கொடுத்த சமயத்தில் எதிரிகள் இருவரும் துர்க்காலயா ரோட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான் என்றும், நாங்கள் கொடுத்ததாக சொல்லும் தொகை 1வது எதிரியிடம் இல்லை என்றால் கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டதாக சொன்னார் என்றும் பதில் அளித்துள்ளார். சக்திவேல், தருமராஜ் மற்றும் நான் கோவிந்தலெட்சுமியை பார்ப்பதற்காக வந்தோம், 5 மணி வரை காத்திருந்து நான் போயிவிட்டேன் என்றும், **மறுநாள் கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணெய்யை**

ஊற்றியதாக கேள்விபட்டேன் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.3 அழகர் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றும்,** 13.02.2018ம் தேதியன்று தான் சென்னையில் இருந்தபோது தன் அண்ணன் சுரேஷ் தனக்கு போன் செய்து தன் நண்பர் சக்திவேல் என்பவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாகவும், அதற்காக ரூ.2,50,000/– ஆகும் என்றும், முன்பணமாக ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்றும், தன் மனைவியும் நகைகளை அடகு வைத்து பணம் வைத்திருந்தாகவும், உனக்கு வேண்டியவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கும் வேலை வாங்கி கொடுக்கலாம் என்று கூறியதன் பேரில் தன் நண்பர் சுரேஷ், சக்திவேல், தர்மராஜ், தினேஷ் ஆகிய 4 பேர்களுக்கும் வேலையை பற்றி போன் மூலம் தகவல் சொல்லி, தனது நண்பர்களும் வேலைக்காக தலா ரூ.1,00,000/– தயார் செய்தும், 13.02.2018ம் தேதியன்று தானும், தன் அண்ணன் **அ.சா.1 சுரேஷ்சும், என் தம்பி தாசனும், தன் நண்பர்களான ஆர்.சுரேஷ், தினேஷ், தர்மராஜ், சக்திவேல்** ஆகிய 7 பேரும் திருவாரூர் துர்க்காலாய ரோட்டில் உள்ள 1–வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று அவர், அவரது அம்மா, அவரது மனைவி ஆகியோர்கள் முன்னிலையிலேயே **தாங்கள் 7 பேரும் தலா ரூ.1,00,000 வீதம் மொத்தம் ரூ.7,00,000/–த்தை 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்தாகவும்,** அன்றிரவே தான் சென்னை சென்று விட்டதாகவும், வேலை வாங்கி தருவது சம்பந்தமாக தன் அண்ணனுக்கும் 1–வது எதிரி சக்திவேலுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதை அ.சா.1 தனக்கு போன் மூலம் சொன்னதாகவும், நீ சென்னையிலிருந்து வா, நாம் சென்று எதிரி சக்திவேலிடம் ரூ.7,00,000/–த்திற்கு எழுதி வாங்கி கொள்ளலாம் என்று கூறியதாகவும், 1வது எதிரியும் எழுதி தருவதாக அ.சா.1னிடம் ஒப்புக் கொண்டிருந்தார் எனவும், அதனால் 04.02.2019ம் தேதியன்று தான் சென்னையிலிருந்து திருவாரூருக்கு வந்துவிட்டதாகவும், **பிறகு 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டபோது அவர் தங்களிடம்**

தங்களிடமிருந்து வாங்கிய பணத்தை 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருப்பதாகவும், மேற்படி பணத்திற்காக இருவரும் சேர்ந்து பத்திரம் எழுதி தருவதாக கூறி, அதன்படி **04.02.2019ம் தேதியன்று 1வது எதிரி சக்திவேலும், 2வது எதிரி கோவிந்தலெட்சுமியும் சேர்ந்து பணத்திற்கு இருவரும் உத்தரவாதம் என்றும், வேலை வரவில்லை என்றால் பணத்தை திருப்பி தருவதாகவும், அதற்கு 2சதவீதம் வட்டி சேர்த்து தருவதாகவும் கூறினார்கள் எனவும், அவர்கள் கூறிய விபரத்தை தாசன் 20ரூபாய் பத்திரத்தில் எழுதினார் எனவும், அதில் 1வது எதிரி சக்திவேலும், 2வது எதிரி கோவிந்தலெட்சுமியும் கையொப்பம் செய்தார்கள்** எனவும், அதன்பிறகும் வேலையும் வாங்கி கொடுக்கவில்லை, பணமும் கொடுக்கவில்லை எனவும், தன்னை வைத்து பணம் கொடுத்ததால் தன் நண்பர்கள் தன் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள் எனவும், அதன்பிறகு ஒரு நாள் தனது நண்பர் சுரேஷ்சை தவிர தாங்கள் ஆறு பேரும் 1வது எதிரி சக்திவேலின் வீட்டிற்கு சென்று பணம் கொடுத்த அனைவருக்கும் தனித்தனியாக பத்திரம் எழுதி கொடுக்கும்படி கேட்டதாகவும், 1வது எதிரி அவ்வாறு பத்திரம் எழுதி கொடுத்தார் எனவும், தன் அண்ணன் அ.சா.1 திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எதிரி சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமி மீது புகார் கொடுத்தார் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3ன் மூலம் அசா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2வது எதிரியை எங்கு பார்த்துள்ளேன் என்றால் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் பார்த்துள்ளேன் என்றும், நீதிமன்றத்தில் வேலை கிடைக்கும் என்று யார் தகவல் சொன்னார் என்றால் எனது அண்ணன் சுரேஷ் சொன்னார் என்றும், அது சம்பந்தமாக நீதிமன்ற ஊழியர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை என்றும், 1வது எதிரி நீதிமன்றத்தில் வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், நான் பணம் கொடுத்ததற்கு எதிரியிடமிருந்து எழுத்து பூர்வமாக ஆவணம் ஏதுவும் வாங்கியுள்ளேனா

என்றால் வாங்கியுள்ளேன் என்றும், அதில் எதிரிகள் இருவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றும், இந்த ஆவணம் 04.02.2019 ம் தேதி ஏற்பட்டதாகவும் என்றும், மேற்படி ஆவணத்தை யார் எழுதினார் என்றால் சக்திவேல் சொல்லசொல்ல அ.சா.2 தாசன் எழுதினார் என்றும், மேற்படி ஆவணத்தில் 28.02.2019ம் தேதிக்குள் நீதிமன்ற உதவியாளர் பணி வாங்கி தருவதாகவும் தவறும் பட்சத்தில் **எதிரிகள் இருவரும் பணத்தை திருப்பி தருவதாகவும் எங்களிடம் உறுதியளித்து ஆவணம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான் என்றும்,** எதிரி சக்திவேலிடம் நானும், என் அண்ணனும் ஒரு முறை பணம் கேட்டோம், வழக்கு நடந்துவருவதாகவும், வழக்கு முடிந்தவுடன் தருவதாகவும் சொன்னார் என்றும், பணம் யாரிடம் உள்ளது என்று நான் கேட்டதற்கு பணம் கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துள்ளதாகவும் வேலை கிடைக்காவிட்டால் பணத்தை திருப்பி தந்துவிடுவதாக கோவிந்தலெட்சுமி சொன்னதாகவும் சக்திவேல் சொன்னார் என்றும், நான் கொடுத்த பணத்திற்கு இருவரும் பொறுப்பு என்றும் பதில் அளித்துள்ளார்.

- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2வது எதிரி உத்தரவாத பத்திரத்தில் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல என்றும், 2வது எதிரியை தெரியும் என்றும் அடையாளம் காண்பித்தும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.4 தர்மராஜ் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும்,** அ.சா.1ன் நண்பர் தனது சாட்சியத்தில் **1வது எதிரி சக்திவேல் அ.சா.1–னிடம் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளதாகவும், அதற்காக ஒருவருக்கு ரூ.2,50,000/– தொகை என்றும், அதற்கு முன்பணமாக ரூ.1,00,000/– கொடுக்கவேண்டும் என்றும்,** 1வது எதிரி சக்திவேல், அ.சா.1–னிடம் கூறவே, பிறகு அ.சா.1–க்கு தெரிந்த நபர்கள் இருந்தாலும் வேலை வாங்கி

தருவதாக சொல்லியுள்ளார் எனவும் இந்த விபரங்களை அ.சா.1 தனது தம்பிகளான அ.சா.2 தாசன் மற்றும் அ.சா.3 அழகர் ஆகியோர்களிடம் சொல்லியுள்ளார் எனவும், அ.சா.1 சுரேஷின் நண்பர் என்பதால் சுரேஷ் தன்னிடமும் கூறியதாகவும், தான் ரூ–1,00,000/–ஐ எடுத்துக்கொண்டு அ.சா.1 சுரேஷின் வீட்டிற்கு 13.02.2018–ம் தேதியன்று தானும், சக்திவேல், அ.சா.1 சுரேஷ், தினேஷ், அழகர், மற்றொரு சுரேஷ், தாசன் ஆகிய அனைவரும் அ.சா.1 சுரேஷ் வீட்டிலிருந்து கிளம்பி **1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்றதாகவும்,** 1வது எதிரி சக்திவேலை அவரது வீட்டில் சந்திந்தபோது, நீதிமன்ற பணிக்காக ஒரு ஆளுக்கு ரூ–2,50,000/– வேண்டும் என்றும், முன்பணமாக ரூ–1,00,000/– தரவேண்டும் என்றும் தங்களிடம் சொல்ல, 1வது எதிரி சக்திவேலிடம் அவர் சொன்னபடி **ஆள் ஒன்றுக்கு தலா தொகை ரூ–1,00,000/– வீதம் ரூ.7,00,000/– ஐயும், தங்களது போட்டோ, பயோ டேட்டா, கல்வி சான்றிதழ் நகல்கள் ஆகியவற்றையும் 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்தோம் எனவும்,** தாங்கள் 1வது எதிரி சக்திவேலிடம் பணத்தை கொடுத்தபோது, அவரது அம்மா, அவரது மனைவி ஆகியோர் உடன் இருந்ததாகவும், அப்போது 1வது எதிரி ஒரு மாதத்திற்குள் வேலை வந்துவிடும் என்றும், வேலைக்கான உத்தரவு வந்தவுடன் உங்களையெல்லாம் அழைத்து உத்தரவு நகலை கொடுத்து விடுகிறேன் என்று சொன்னதாகவும், வேலைக்கான உத்தரவு வாங்கியபிறகு மீதமுள்ள ரூ–1,50,000/–ஐ கொடுத்துவிடவேண்டும் என்று 1வது எதிரி சக்திவேல் தன்னிடம் கூறியதாகவும், அதன்பிறகு, ஒரு மாதம், இரண்டு மாதம் ஆகியது எனவும், ஆனால், 1வது எதிரி சக்திவேல் தங்களை கூப்பிடாததால் பணம் கொடுத்த நாங்கள் 7 பேரும் 1வது எதிரியை அவரது வீட்டிற்கு சென்று பார்த்தபோது, அவரிடம் ஏன் நீங்கள் சொன்னபடி வேலை வாங்கி தரவில்லை என்று கேட்டதற்கு அவர் அதன் பிறகு **2019–ம் ஆண்டு மீண்டும் சென்று 1வது எதிரி சக்திவேலிடம் கேட்டபோது, திருவாரூர் நீதிமன்றத்தில் வேலை செய்யும் 2வது எதிரியான கோவிந்தலெட்சுமி என்பவரிடம் தங்களிடம் வாங்கிய பணத்தை**

கொடுத்துள்ளதாகவும், நீங்கள் வேண்டுமானால் அவரிடம் போன் செய்து தருகிறேன் பேசுங்கள் என்று சொல்லி போன் செய்து அ.சா.1 சுரேஷிடம் கொடுத்ததாகவும், அப்போது **2வது எதிரியான கோவிந்தலெட்சுமி அ.சா.1 சுரேஷிடம் நான் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளேன், வாங்கிய பணத்தை கொடுக்க வேண்டியவர்களிடம் கொடுத்துவிட்டேன் கண்டிப்பாக வேலை வந்துவிடும் என கூறினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்**. தங்களுடன் பணம் கொடுத்த சக்திவேல் என்பவருக்கு டி.என்.சி.எஸ்.சி–ல் வேலை கிடைத்துவிட்டது. அதனால், 1வது எதிரி சக்திவேல் எங்களது நண்பர் சக்திவேலிடம் பெற்ற ரூ.1,00,000/–ஐ அவரிடம் கொடுத்துவிட்டார். ஆனால், தங்களிடம் பெற்ற தொகையை திருப்பி கொடுக்கவில்லை, வேலையும் வாங்கி தரவில்லை, அதனால், தாங்கள் 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்த பணத்திற்கு அத்தாட்சியாக அவரிடம் பத்திரம் எழுதிக் கொடுக்கும்படி கேட்டதாகவும், அதற்கு பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், அதில் எதிரிகள் இருவரும் கையொப்பம் செய்தார்கள் என்றும், **தன்னிடம் காண்பிக்கப்படும் 04.02.2019–ம் தேதிய பத்திரம் எதிரிகள் இருவராலும் தங்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதுதான்** என்றும், அவர் தங்களிடம் உங்கள் அனைவருக்கும் தனித்தனியாக வேண்டுமானால் பணம் தங்களிடம் வாங்கியதற்காக பத்திரம் எழுதி தருவதாக கூறியதாகவும், அதேபோல், **அ.சா.1 சுரேஷ், அ.சா.2 தாசன், அ.சா.3 அழகர், தினேஷ் மற்றும் தனக்கும் தனித்தனியே ரூ–1,00,000/– பெற்றதற்கான பத்திரத்தை எழுதிக் கொடுத்தாகவும்**, அதில் 1வது எதிரி சொன்னபடி வேலை வாங்கி தருவதாகவும், இல்லையென்றால் பெற்ற தொகைக்கு 2 சதவீதம் வட்டி சேர்த்து தருவதாக கூறி எழுதிக் கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் 01.03.2019–ம் தேதிய பத்திரம் 1வது எதிரியால் எழுதிக்கொடுக்கப்பட்டதுதான் அதில் 1வது எதிரி சக்திவேல் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், சாட்சிகளாக சுரேஷ் மற்றும் சக்திவேல் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள் எனவும், அதன்பிறகு 1வது எதிரி சக்திவேலை சந்தித்து வேலை சம்மந்தமாக

கேட்டபோது, அவர் 2வது எதிரியான கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்து விட்டதாகவும், அவர் வேலை செய்யும் இடத்திற்கு சென்று கேட்கலாம் என்றும் சொன்னார் என்றும், அதன்பேரில், தானும், அ.சா.2 தாசனும் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்ததாகவும், அப்போது 1வது எதிரி சக்திவேல் தங்களை வெளியில் இருக்க சொல்லிவிட்டு, 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்து கேட்டு விட்டு வருவதாக சொல்லி சென்றதாகவும், அதன்பிறகு, நீண்ட நேரம் ஆகியும் 1வது எதிரி சக்திவேல் தங்களிடம் வந்து பதில் சொல்லவில்லை என்பதால் தாங்கள் மாலை சுமார் 3.00 மணி வரையில் மாவட்ட நீதிமன்றத்தில் காத்திருந்துவிட்டு, வீட்டிற்கு சென்றுவிட்டோம் எனவும், அதன் பிறகுதான் தங்களை போல் இன்னும் பல பேரிடம் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி, 1வது எதிரி சக்திவேல் ரூ.83,00,000/–வரை பெற்று, ஏமாற்றியுள்ளதாக கேள்விபட்டதாகவும், அதன்பிறகு, 1வது எதிரி சக்திவேல், 2வது எதிரியான கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்து ஏமார்ந்துவிட்டதாகவும், அதனால் புகார் கொடுப்பதாகவும் தங்களிடம் கூறி, திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் கொடுக்க தங்களை அழைத்துச் சென்றார். அதன் பிறகு தாங்கள் 7 பேரும் பணம் சம்மந்தமாகவும், வேலை வாங்கிதருவதாக ஏமாற்றியது சம்மந்தமாகவும் 1வது எதிரி சக்திவேல் மீது புகார் கொடுத்தோம் என கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1வது எதிரி சக்திவேலை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் நான் பணம் கொடுத்த போதுதான் முதலில் அவரை பார்த்தேன், என்னிடம் நேரடியாக பணம் வேண்டுமென்று சொன்னாரா என்றால் அவரை வீட்டில் சென்று சந்தித்த போது சொன்னார் என்றும், பணம் கொடுத்தபோதுதான் 1வது எதிரி சக்திவேல் நேரடியாக என்னிடம் பணம் கேட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் என்றும், 1வது எதிரியிடம் 13.02.2018ம் தேதி பணம் கொடுத்தேன் என்றும்,

நாங்கள் கொடுத்த பணத்தை அவரே வைத்திருப்பதாக சொன்னாரா அல்லது வேறு யாரிடமாவது குறிப்பிட்டு சொன்னாரா என்றால் 2வது எதிரி கோவிந்தலெட்சமியிடம் கொடுத்திருப்பதாக சொன்னார் என்றும், 2வது எதிரி கோவிந்தலெட்சுமி எங்கு குடியிருப்பதாக 1வது எதிரி சொன்னார் என்றால் 1வது எதிரிக்கு சொந்தமான காம்பிளக்ஸில் குடியிருப்பதாக சொன்னார் என்றும், 1வது எதிரியின் வீட்டில் 2வது எதிரி வசித்து வருகிறார் என்பதை நான் நேரடியாக பார்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் என்றும், 2வது எதிரி அடிக்கடி 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றுவருவார் என்றும், 1வது எதிரி 2வது எதிரிக்கு போன் போட்டு அ.சா.1யிடம் பேச சொன்னார் அப்போது நாங்கள் அனைவரும் உடன் இருந்தோம் என்றும், அப்போது **2வது எதிரி கோவிந்தலெட்சுமி என்ன சொன்னார் என்றால் பணத்தை நான் பெற்றுக் கொண்டுவிட்டேன் அதை யாரிடம் கொடுக்கவேண்டுமோ அவரிடம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார்** என்றும், நான் நீதிமன்றத்திற்கு நான் மட்டும் வந்தேனா என்றால் நானும், தாசனும் வந்தோம் என்றும், எங்கள் இருவரையும் யார் அழைத்து வந்தது என்றால் 1வது எதிரி சக்திவேல்தான் அழைத்து வந்தார் என்றும், 04.02.2019 என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.3 ஆவணத்தில் 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் கையெழுத்து செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான் என்றும், 04.02.2019 ம் தேதி 1வது எதிரியின் வீட்டில் எங்கள் முன்னிலையில்தான் எதிரிகள் இருவரும் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான் என்றும், அ.சா.ஆ.3 பத்திரம் எழுதப்பட்டபோது யார் யார் இருந்தார்கள் என்றால் நாங்கள் 7 பேர் மற்றும் 1வது எதிரி சக்திவேல் மற்றும் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி ஆகியோர் இருந்தோம் என்றும், அ.சா.ஆ.5ல் 1வது எதிரி மட்டும் கையெழுத்து செய்து கொடுத்தாரா என்றால் 1வது எதிரி சக்திவேல் மட்டும் தான் கையெழுத்து செய்தார் என்றும், திருவாரூர் மாவட்ட காவல்

கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் கொடுக்க சென்றோம் என்றும், எங்களோடு பணம் கொடுத்த எங்களது நண்பர் சக்திவேல் என்பவருக்கு டி.என்.சி.எஸ்.சி.ல் வேலை கிடைத்த பிறகு அவர் 1வது எதிரியிடம் கொடுத்திருந்த பணத்தை யார் திருப்பி கொடுத்தது என்றால் 1வது எதிரி சக்திவேல்தான் ரூ.1,00,000/– பணத்தை திருப்பி கொடுத்தார் என்றும், பணத்தை என் நண்பர் சக்திவேல், 1வது எதிரியிடமிருந்து வாங்கியோது நான் இருந்தேனா என்றால் அசா.1 சுரேஷ், அ.சா.2 தாசன் மற்றும் சக்திவேல் ஆகியோர் சென்று வாங்கி வந்தார்கள் என்றும், நாங்கள் 1 மற்றும் 2வது எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்.

- **2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா.1 சுரேஷிடம் போனில் பேசியது 2வது எதிரி கோவிந்தலெட்சுமிதான் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் போனில் கோவிந்தலெட்சுமி என்று பேசியவர் பெயரை சொன்னார் என்றும், அ.சா.1னிடம் போனில் பேசியவர் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி இல்லை என்றால் சரியல்ல என்றும், அ.சா.ஆ.3 ல் உள்ள கையெழுத்து 2வது எதிரி கோவிந்தலெட்சுமியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல என்றும், என் முன்னிலையில் 2வது எதிரி எந்த கையெழுத்தும் செய்யவில்லை என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.5 சுரேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் சென்னையில் தனியார் நிறுவனத்தில் ஏ.சி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.2 மற்றும் அ.சா.3 நண்பர் மற்றும், அ.சா.1 சுரேஷ் அவர்களின் அண்ணன் என்றும், எதிரி சக்திவேல், அ.சா.1 சுரேஷிடம் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் வேலை காலியாக உள்ளதாகவும், அதில் வேலை வாங்கி தருவதாக சொன்னதாகவும், அ.சா.1 சுரேஷ் தன்னிடம் சொன்னதாகவும், அதற்கான தொகை ரூ.1,00,000/–த்தை

முன்பணமாக கேட்டார்கள் எனவும், அதனால், தானும், தன்னுடன் சுரேஷ், அழகர், தாசன், தினேஷ், தர்மராஜ், சக்திவேல் ஆகியோர் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று 13.02.2018–ம் தேதியன்று மொத்தமாக ரூ.7,00,000/–த்தையும், தங்களது பயோடேட்டா, ஆதார் கார்டு, டீ.சி மற்றும் மார்க் ஷீட் ஜெராக்ஸ் ஆகியவைகளை எதிரி சக்திவேலிடம் கொடுத்தோம் என்றும், அதன்பிறகு **2019–ம் வருடத்தில் அழகர், தாசன், சுரேஷ், தர்மராஜ், தினேஷ் ஆகியோர் எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று, அவரிடம் வேலை பற்றி கேட்டுள்ளார்கள் எனவும், அப்போது எதிரி சக்திவேல் தங்களிடம் வாங்கிய பணத்தை எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்து விட்டதாகவும் சொன்னார்** என்றும், எதிரிகளிடம் பேசிய பிறகு ஒரு நாள் எதிரி சக்திவேல் தாசன், தர்மராஜ் ஆகியோரை அழைத்துக் கொண்டு திருவாரூர் நீதிமன்றத்திற்கு எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்த பணத்தை வாங்குவதற்காக வந்துள்ளார்கள் எனவும், ஆனால், எதிரி கோவிந்தலெட்சுமியை பார்க்க முடியவில்லை எனவும், அதன்பிறகு தாசனும், தர்மராஜும் நீதிமன்றத்திலிருந்து போனபிறகு, எதிரி கோவிந்தலெட்சுமி அவரது உடலில் மண்ணென்னெய் ஊற்றி கொளுத்திக் கொள்ள முயற்சி செய்ததாக தான் கேள்விப்பட்டதாகவும், தாங்கள் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1வது எதிரி உதவியாளர் வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றும், 13.02.2018ம் வருடம் நான் எதிரி சக்திவேலை சென்று பார்த்தேன் என்றால் சரிதான் என்றும், எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்தபோது அதற்கு அத்தாட்சி எதாவது எழுதி வாங்கினீர்களா என்றால் அப்போது எனக்கு மட்டும் வாங்கவில்லை, மற்றவர்களுக்கு எழுதி வாங்கினார்கள், பிறகு எல்லோருக்கும் சேர்த்து பத்திரம் எழுதியபோது எனக்கும் எழுதப்பட்டது என்றும், 1வது எதிரி சக்திவேலிடம் போனில் பேசிய போது 03.04.2019 அன்று திருப்பி

தருவதாக எதிரி சக்திவேல் கூறினார் என்றும் பதில் அளித்துள்ளார்.

- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** நாங்கள் பணத்தை கொடுத்தது 1வது எதிரி சக்திவேலிடம் என்றால் சரிதான் என்றும், ஆனால் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி எங்களிடம் போனில் பேசினார் என்றும், 2வது எதிரி தன்னிடம் போனில் நேரடியாக பேசினாரா என்றால் பேசினார் என்றும், அ.சா.1னிடம் 2வது எதிரி போனில் பேசிய விபரம் தனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது என்றும் கான்பிரன்ஸ்காலில் நான் கேட்டேன் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.6 சக்திவேல் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் மெடிக்கல் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன் என்றும், **எதிரி சக்திவேல் அ.சா.1 சுரேஷிடம் திருத்துறைப்பூண்டி, திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய ஊர்களில் உள்ள நீதிமன்றங்களில் அலுவலக உதவியாளர் பணி காலியாக இருப்பதாகவும்** அதனை வாங்கி தருவதாகவும் அதற்கு இரண்டு லட்சம் செலவாகும் என்றும், ஒரு லட்சம் முன்பணம் கொடுக்க வேண்டும் என்றும் அப்பாயிண்ட்மெண்ட் வந்தவுடன் மீதி ஒரு லட்சம் தரவேண்டும் என்றும் கூறியதாகவும், அ.சா.1 சுரேஷ் தன்னிடம் மற்றும் அழகர், தாசன், தர்மராஜ், சுரேஷ், தினேஷ் ஆகியோர்களிடமும் கூறினான் என்றும், அதனால் **13.02.2018ம் தேதியன்று இரவு சுமார் 8.30மணியளவில் தாங்கள் ஏழு பேரும் தலா ஒரு லட்சம் வீதம் பணத்தை ரெடி செய்துக்கொண்டு எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று, எதிரி சக்திவேலிடம் தாங்கள் அனைவரும் ஏழு லட்சம் பணம் மற்றும் தங்களது கல்வி சான்றின் நகல்கள், பயோடேட்டா, எம்ப்ளாயிமெண்ட் கார்டு நகல் ஆகியவற்றை கொடுத்ததாகவும்**, அப்போது எதிரி சக்திவேல் தங்களிடம் ஒரு மாதத்திற்குள் வேலை வந்துவிடும் என்று சொன்னதாகவும், அதன்பிறகு அவர் சொன்னபடி வேலை எதுவும் வரவில்லை , அதனால் 28.04.2018ம் தேதி அ.சா.1 சுரேஷ், தானும், அழகர், தாசன், சுரேஷின் மனைவி ஆகியோர் சென்று எதிரி சக்திவேலிடம் வேலை என்னாயிற்று என்று

கேட்டபோது **எதிரி சக்திவேல் தங்களிடம் வாங்கிய பணத்தை திருவாரூர் கோர்ட்டில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமி (எதிரி–2) என்பவரிடம் கொடுத்துள்ளதாகவும்**, அதனால் அவரிடமே போனில் பேசுங்கள் என்றும் சொல்லி எதிரி சக்திவேல் போனிலிருந்து **போன் போட்டு கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்ததாகவும், போனில் கோவிந்தலெட்சுமி பேசியதாகவும், அவர் தங்களிடம் 28.02.2019ம் தேதிக்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என்றும், அப்படி வேலை கிடைக்கவில்லை என்றால் 04.03.2019ம் தேதிக்குள் தங்களிடம் வாங்கிய ஏழு லட்சம் பணத்தை திருப்பி கொடுத்து விடுகிறேன் என்றும் சொன்னார்** என்றும், அதன் பிறகு தாங்கள் அங்கிருந்து சென்று விட்டதாகவும், தனக்கு டி.என்.சி.எஸ்.சி.–யில் வேலை கிடைத்துவிட்டதால் தான் அ.சா.1 சுரேஷிடம் சென்று தன்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி வாங்கிகொடு என்று கேட்டேன் என்றும், அவர் எதிரி சக்திவேலிடம் பணத்தை கேட்டதால் எதிரி சக்திவேல் 15 நாட்களில் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக கூறி **தன்னிடம் வாங்கிய ரூ.1,00,000/– பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார்** என்றும், அந்த பணத்தை அ.சா.1 சுரேஷிடமிருந்து பெற்றுக் கொண்டு விட்டதாகவும், பிறகு அ.சா.1 சுரேஷிடம் கேட்டபோது வேலை கிடைக்கவில்லை என்றும், ஏமாந்து விட்டதாகவும், பலநபர்களை எதிரி சக்திவேல் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றி விட்டதாகவும் கூறியதாகவும், பிறகு அ.சா.1னிடம் கேட்டபோது வழக்கு போட்டுள்ளதாக கூறியதாகவும், அதில் தன்னையும் சேர்த்து கூறியுள்ளதாக சொன்னதாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** எதிரி சக்திவேல் என்னிடம் வேலை வாங்கி தருவதாக அவர் வீட்டில் வைத்து நேரடியாக சொன்னார் என்றும், எதிரி சக்திவேலை அவர் வீட்டிற்கு சென்ற பணம் கொடுக்கும் போதுதான் பார்த்தேன் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2வது எதிரியை தெரியும்

என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன் என்றும், 2வது எதிரியை தெரியும் என்று அடையாளம் காட்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா. 7 தினேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் 1வது எதிரி சக்திவேலிடம்தான் பணத்தை கொடுத்தோம் என்றும், கடந்த 13.02.2018ம் தேதி தாங்கள் ஏழு பேரும் எதிரி சக்திவேலின் வீட்டிற்கு சென்று தலா ரூ.1,00,000/– வீதம் ரூ.7,00,000/– பணமும், தங்கள் பயோ டேட்டாவும் சேர்த்து அவர் தங்களுக்கு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னதால் பணத்தை கொடுத்தோம் என்றும், ஆனால் ஒரு வருடம் வரை அவர் எந்த வேலையும் தங்களுக்கு வாங்கி தரவில்லை என்றும், அதனால் மீண்டும் சென்று அவரிடம் கேட்டோம் எனவும், அப்போது எதிரி சக்திவேல் தங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீங்களே ரூ.20/–பத்திரத்தை வாங்கி வாருங்கள் அதில் பணத்திற்கான உறுதியை எழுதி தருவதாகவும் சொன்னதால் தான் சென்று தன் பெயரில் ரூ.20/–க்கான பத்திரத்தை வாங்கி வந்து எதிரி சக்திவேலிடம் கொடுத்ததாகவும், அதில் எதிரி சக்திவேல் வேலை வரவில்லை என்றால் தன்னிடம் வாங்கிய ரூ.1,00,000/– பணத்தை அசல் வட்டி சேர்த்து தருவதாக கூறியதாகவும், மேலும் **அன்றைய தினமே தாங்கள் ஏழு பேரும் சேர்ந்து அவரிடம் தங்களுக்கு தனித்தனியாக எழுதிக் கொடுத்த பத்திரத்தை கேட்டதற்கு எதிரிகள் இருவரும் சேர்ந்து ரூ.20/–பத்திரத்தில் தன்னையும் சேர்த்து தன் நண்பர்கள் உள்ளிட்ட 7 பேருக்கும் வேலை வாங்கி தரவில்லை என்றால் பணத்தை வட்டியுடன் திருப்பி தருவதாக எழுதி கொடுத்ததாகவும்,** தங்களில் ஒருவரான சக்திவேல் என்பவருக்கு அரசு வேலை கிடைத்துவிட்டதால் அவருடைய பணத்தையாவது தாருங்கள் என்று எல்லோரும் சேர்ந்து கேட்டபோது அவர்கள் காலம் தாழ்த்தி பின்னர் **ஆஜர் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் நீதிமன்றத்திற்கு சென்று பணம் கேட்கலாம்**

என்று சென்றபோது என் நண்பர்கள் முன்னிலையில் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டார் என்று சொன்னார்கள் எனவும், பின்னர் இதேபோல் தொடர்ந்து வேலையும் கிடைக்கவில்லை, பணத்தையும் தரவில்லை அதனால் எல்லோரும் சேர்ந்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று சொல்லி ஏழு பேரும் திருவாரூரில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பக்கத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று,அதில் அ.சா.1 சுரேஷ் புகார் கொடுத்தார் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** நாங்கள் கொடுத்த பணம் யாரிடம் உள்ளது அ.சா.1 சுரேஷிடம் கேட்ட போது என்ன சொன்னார் என்றால் 1வது எதிரி சக்திவேலிடமும், 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் உள்ளது என்று சொன்னார், ஆனால் 1வது எதிரியிடம் கேட்ட போது 2வது எதிரியிடம் உள்ளது என்றும் 2வது எதிரியிடம் கேட்டபோது 1வது எதிரியிடம் உள்ளது என்று மாற்றி மாற்றி சொல்லி வருகிறார்கள் என்றும் பதில் அளித்தார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா.ஆ.3 ஆவணத்தை 2வது எதிரி ஏழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், அதில் உள்ள கையெழுத்தும், 2வது எதிரியின் கையெழுத்து அல்ல என்றாலும் சரியல்ல என்றும், பணம் கொடுக்கும் போது இரண்டு எதிரிகளும் இருந்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும், தாசனும், தர்மராஜும் நீதிமன்றம் சென்று 2வது எதிரியிடம் பணத்தை கேட்டபோது மண்ணெண்ணெய்யை ஊற்றி கொண்டார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.8 ராஜேந்திரன் மற்றும் அ.சா.9 முருகதாஸ் ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு

முதல் விசாரணையில் வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு ஏதுவும் தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.8 மற்றும் அ.சா.9 சாட்சிகள் அரசு தரப்பிற்கு பிறழ்சாட்சியங்களாக பாவிக்கப்பட்டுள்ளனர்.

அ.சா.10 இளவழகன் அரசு தரப்பு முதல் விசாரணையில் சாட்சியத்தில் தனது மகள்கள் ஜெயகீதா, தேவிபாலா இருவருக்கும் திருவாரூர், கும்பகோணம், சென்னை மற்றும் இரண்டு ஊர்களில் நீதிமன்றத்தில் காலிபணியிடம் இருப்பதாகவும் எதிரி சக்திவேல் மூலமாக வேலை வாங்கி கொள்ளலாம் என்று சோழபாண்டியில் உள்ள எனது **மாமா மகள் தேவி** என்பவர் தன்னிடம் கூறினார் என்றும், கடந்த 19.03.2018ம் தேதியன்று தான் திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் உள்ள எதிரி சக்திவேல் (1வது எதிரி) வீட்டிற்கு சென்று அவரை பார்த்து அவரிடம் நீதிமன்றங்களில் வேலை வாங்கி தருவது சம்பந்தமாக கேட்டதாகவும், அப்போது **எதிரி சக்திவேல் தன்னிடம் வேலை வாங்கி தருவதற்கு ஒரு நபருக்கு ரூ. 2,00,000/– தொகை, முன்பணமாக ஒருவருக்கு ரூ.1,00,000/–வீதம் தன் இரண்டு மகள்களுக்கும் மொத்தம் ரூ.2,00,000/–த்தை கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும்**, மீதத்தொகையான ரூ.2,00,000/– ஐ வேலை கிடைத்தவுடன் கொடுக்க வேண்டும் என்றதால் எதிரி சக்திவேலிடம் **அப்போதே ரூ.50,000/– பணத்தை கொடுத்தேன் என்றும், அதன்பிறகு மறுநாள் 20.03.2018ம் தேதியன்று ரூ.1,50,000/–த்தை எதிரி சக்திவேலிடம் கொடுத்ததாகவும், அப்போது தன் மகள்களின் படிப்பு சான்று நகல்கள் மற்றும் பயோ டேட்டா ஆகியவற்றை எதிரி சக்திவேலிடம் கொடுத்ததாகவும்**, சிலநாட்கள் கழித்து கேட்டபோது பணத்தை கோர்ட்டில் வேலை செய்பவரிடம் கொடுத்ததாகவும், அங்கிருந்து சரியான பதில் வரவில்லை அதனால் அவர்கள் மீது கேஸ் போட்டிருப்பதாக சொன்னதாகவும், கேஸ் முடிந்ததும் தன் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்றும், ஆனால் இதுநாள்வரை தன்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கவில்லை எனவும்

கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்** நான் சக்திவேலிடம் பணம் கொடுத்த போது என்ன **வேலை கிடைக்கும் என்று என்னிடம் சொன்னார் என்றால் கிளார்க் வேலை, டைப்பிஸ்ட் வேலை கிடைக்கும்** என்றும், சக்திவேல் வீட்டில் குடியிருக்கும் நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒருவர் மூலமாக ஏற்பாடு செய்வதாக சொன்னார் என்றும், பதில் அளித்துள்ளார்.

அ.சா 11 தேவிபாலா அரசு தரப்பு முதல் விசாரணையில், **தான் பி.பி.ஏ படித்துள்ளேன, டைப் கிளாஸ் முடித்துள்ளேன் என்றும்,** தனது அப்பாவின் **மாமா மகள் தேவி** என்பவர் மன்னார்குடி தென்பாதியில் உள்ளார் என்றும், அவர் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது, எதிரி சக்திவேல் மேற்படி காலியாக உள்ள இடங்களில் வேலை வாங்கி தருவார் என்றும், அவரை சென்று பார்க்கும்படியும் தன் அப்பாவிடம் சொன்னார் எனவும், மேற்படி வேலை காலியிடமானது திருவாரூர், கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் உள்ளதாக சொன்னார் எனவும், அதனால் **தானும், தன் அப்பாவும், தன் தங்கை ஜெயகீதாவும் 19.03.2018ம் தேதியன்று திருவாரூர் சென்று துர்க்காலயா ரோட்டில் உள்ள எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது வேலைக்காக ஒரு நபருக்கு ரூ.1,00,000/–ஐ தரவேண்டும் என்று கூறியதாகவும், அப்போது தனது அப்பா அவரிடமிருந்த ரூ.50,000/–த்தை எதிரி சக்திவேலிடம் கொடுத்ததாகவும்,** மீதம் ரூ.1,50,000/–த்தை மறுநாள் தன் அப்பா எதிரி சக்திவேலிடம் கொடுத்தார் என்றும், அப்போதும் தானும் தன் தங்கையும் தன் அப்பாவுடன் சென்றதாகவும், பணம் கொடுக்கும்போது ஒரு மாதத்தில் வேலை கிடைக்கும் என்று எதிரி **சக்திவேல் கூறியதாகவும், சக்திவேலிடம் கேட்டபோது நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒரு நபரிடம் தங்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்திருப்பதாகவும், அந்த நபரின் பெயர் கோவிந்தலெட்சுமி என்றும், அவர் சரியாக பதிலை சொல்லாததால் அவர் மீது வழக்கு கொடுத்திருப்பதாகவும் எதிரி**

சக்திவேல் சொன்னதாகவும், இந்த நிலையில் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் மூலம் தங்களிடம் பணம் கொடுத்தது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள் எனவும், அதனால் தானும் தனது அப்பாவும், தன் தங்கையும் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிற்கு சென்றதாகவும், அங்கு போலிசார் தங்களை விசாரணை செய்தார்கள் எனவும் நடந்த விபரம் சொன்னதாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்** போது நாங்கள் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் மூலம் போலிசார் தங்களை விசாரித்த போது பணமோசடி கேஸ் இருப்பதாக சொன்னார்கள் என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** போலிசார் விசாரித்த போது எதிரி சக்திவேலிடம் மீண்டும் சென்று கேட்டபோது கோர்ட்டில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமி என்பவரிடம் பணம் கொடுத்திருப்பதாக சொன்ன விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா 12 ஜெயகீதா அரசு தரப்பு முதல் விசாரணையில், தான் **பி.பி.ஏ. படித்துள்ளேன், டைப் கிளாஸ் முடித்துள்ளேன் என்றும்,** ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியையும் தெரியும் என்றும், தனது அப்பாவின் மாமா மகள் தேவி என்பவர் மன்னார்குடி தென்பாதியில் உள்ளார், அவர் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது, எதிரி சக்திவேல் மேற்படி காலியாக உள்ள இடங்களில் வேலை வாங்கி தருவார் என்றும், அவரை சென்று பார்க்கும்படியும் தன் அப்பாவிடம் சொன்னதாகவும், மேற்படி வேலை காலியிடமானது திருவாரூர், கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் உள்ளதாக சொன்னார், அதனால் தன் அப்பாவும், தன் அக்கா தேவிபாலாவும் 19.03.2018ம் தேதியன்று திருவாரூர் சென்று துர்க்காலயா ரோட்டில் உள்ள எதிரி

சக்திவேல் வீட்டிற்கு சென்றார்கள், அப்போது வேலைக்காக ஒரு நபருக்கு ரூ.2,00,000/– என்றும் முன்பணமாக ஒரு ஆளுக்கு ரூ.1,00,000/– தரவேண்டும் என்று கூறிய இந்த விபரத்தை தன் அப்பா தன்னிடம் சொன்னதாகவும், அப்போது **தனது அப்பா அவரிடமிருந்த ரூ.50,000/–த்தை எதிரி சக்திவேலிடம் கொடுத்தார் எனவும், மீதம் ரூ.1,50,000/–த்தை மறுநாள் தன் அப்பா எதிரி சக்திவேலிடம் கொடுத்ததாகவும், பணம் கொடுக்கும்போது ஒரு மாதத்தில் வேலை கிடைக்கும் என்று எதிரி சக்திவேல் கூறியுள்ளார் எனவும்**, ஆனால் ஒரு மாதத்தில் எதிரி சக்திவேல் சொன்னபடி வேலை கிடைக்கவில்லை எனவும், பிறகு செல்போனில் எதிரி சக்திவேலை தொடர்பு கொண்டு வேலை சம்பந்தமாக கேட்டதாகவும், அதன்பிறகும் பலமுறை நேரடியாக எதிரி சக்திவேலை பார்த்து வேலை சம்பந்தமாக கேட்டோம் எனவும், மே மாதம் நீதிமன்றம் விடுமுறை அதனால் ஜுன், ஜூலை மாதத்தில் கண்டிப்பாக வேலை கிடைத்துவிடும் என்று சொன்னதாகவும், ஆனால் ஜுன்,ஜூலை மாதத்திலும் வேலை கிடைக்கவில்லை, மீண்டும் **சக்திவேலிடம் கேட்டபோது நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒரு நபரிடம் தங்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்திருப்பதாகவும், அந்த நபரின் பெயர் கோவிந்தலெட்சுமி என்றும், அவர் சரியாக பதிலை சொல்லாததால் அவர் மீது வழக்கு கொடுத்திருப்பதாகவும்** எதிரி சக்திவேல் சொன்னதாகவும், இந்த நிலையில் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் மூலம் எங்களிடம் பணம் கொடுத்தது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள் எனவும், அதனால் தானும் தன் அப்பாவும், தன் அக்காவும் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிற்கு சென்றதாகவும், தங்களுடன் தங்களைப்போல் பணம் கொடுத்த பரமேஸ்வரி, பெரமையன், செந்தில் மூலமாக பணம் வாங்கி கொடுக்கப்பட்ட இரண்டு நபர்களும் வந்திருந்தார்கள் எனவும், அங்கு போலிசார் தங்களை விசாரணை செய்தார்கள் எனவும், நடந்த விபரம் சொன்னதாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா 13 நகுலன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **ஆசாரி வேலை செய்து வருகிறேன் வருவதாகவும்,** ஆஜர் எதிரியை தெரியும், மன்னார்குடியில் உள்ள விஸ்வகர்மா சமூகத்திற்கு திருவாரூர் விஸ்வகர்மா சமூகத்திலிருந்து நீதிமன்றங்களில் வேலை இருப்பதாக சொல்லியுள்ளார்கள், **விஸ்வகர்மா சமூகம் மூலமாக எதிரி சக்திவேலை தெரிந்து கொண்டதாகவும்,** பலதடவை விஸ்வகர்மா சமூக கூட்டங்களில் அனைவரும் பங்கேற்கும்போது எதிரியை பார்த்துள்ளதாகவும், மன்னார்குடி விஸ்வகர்மா சமூகத்தில் நடராஜன் என்பவர் வேலை காலிபணியிடம் சம்பந்தமாக எதிரி சக்திவேலை அணுகும்படி கூறியதால் தன் மனைவிக்கு வேலை வாங்குவதற்காக தான் எதிரி சக்திவேலை திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று 20.03.2018ம் தேதியன்று சந்தித்ததாகவும், அப்போது **எதிரி சக்திவேல் தன்னிடம் திருவாரூரில் நீதிமன்றத்தில் வேலை காலிபணியிடம் உள்ளதாகவும், ஒரு நபருக்கு வேலைக்கு ரூ.2 லட்சம் தொகை கொடுக்க வேண்டும் அதற்கு முன்பணமாக ரூ.1,00,000/– பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னதாகவும்,** அப்போதே எதிரி சக்திவேலிடம் முன்பணம் மற்றும் தன் மனைவியின் பயோ டேட்டா கொடுத்ததாகவும், அதேபோல தன் தங்கை மகள் நித்யா என்பவருக்கும் வேலைக்காக சக்திவேலிடம் **அன்றைய தினமே ரூ.1,00,000/– பணமும், கல்வி சான்றின் நகலும் கொடுத்ததாகவும்**, பணம் கொடுத்தபோது எதிரி சக்திவேல் தன்னிடம் ஒரு மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று கூறியதாகவும், ஒரு மாதம் கழித்து 1வது எதிரி சக்திவேலை பார்த்தபோது அவர் **வேலைக்கான பணத்தை அவர் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருப்பதாக சொன்னதாகவும், மேற்படி கோவிந்தலெட்சுமி கோர்ட்டில் வேலை செய்வதாக சொன்னார் எனவும்,** வேலை வரவில்லை, தன் தங்கை மகள் நித்யாவிற்கு வேலை வராததால் அவர்கள் தன்னிடம் தெடர்ந்து வற்புறுத்தி வந்ததால் எதிரி சக்திவேலிடம் பலமுறைக்கு பிறகு கேட்டு நித்யாவிற்கான தொகை ரூ.1,00,000/–த்தை எதிரி சக்திவேலிடமிருந்து பெற்று சென்றதாகவும்,

எதிரி சக்திவேலிடம் தன் மனைவியின் வேலை பற்றி பணம் கொடுத்திலிருந்து 7, 8 மாதம் கழித்து கேட்டபோது வேலை வந்துவிடும் என்று பொறுமையாக இருங்கள் என்று சொன்னதாகவும், பின்னர் 1 1/4 வருடங்கள் கழித்து திருவாரூர் குற்றபிரிவு போலிசார் தன்னை போன் மூலம் அழைத்தார்கள் எனவும், அப்போது போலிசார் தன்னிடம் தான் சக்திவேலிடம் பணம் கொடுத்த விபரத்தை கேட்டார்கள் எனவும், அப்போது போலிசார் வேறு யாருக்கு பணம் கொடுத்தீர்கள் என்று கேட்டபோது நித்யாவிற்காக பணம் கொடுத்து வாங்கி விட்டேன் என்று சொன்னதாகவும், கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** சக்திவேல் யார் மூலமாக வேலை வாங்கி தருவதாக தன்னிடம் சொன்னார் என்றால் அவர் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி என்பவர் மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றும், நான் சக்திவேலிடம் பணத்தை திரும்ப கேட்டபோது பணம் சம்பந்தமாக வழக்கு நடந்து வருதாக கூறினார் என்றும், சக்திவேல் பணத்தை யாரிடம் கொடுத்திருப்பதாக கூறினார் என்றால் கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்திருப்பதாக கூறினார் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2வது எதிரியிடமிருந்து குடும்ப முன்விரோதத்தை மனதில் வைத்து 2வது எதிரியிடம் பணத்தை கொடுத்திருப்பதாகவும், அவர் தன் வீட்டில் குடியிருப்பதாகவும் பொய்யாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா 14 காமாட்சி அரசு தரப்பு முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும் எனவும், **20.03.2018ம் தேதியன்று தனக்கு திருவாரூர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக தனது கணவர் 1வது எதிரி சக்திவேலிடம் திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் உள்ள அவரது வீட்டில் வைத்து ரூ.1லட்சம் பணம் கொடுத்த** போது தானும் உடனிருந்தேன் என்றும், அப்போது எதிரி சக்திவேல் ஒரு மாதத்தில் வேலை

கிடைத்துவிடும் என்று கூறியதாகவும், ஆனால் அவர் சொன்னபடி வேலை எதுவும் கிடைக்கவில்லை, மீண்டும் பலமுறை அவரிடம் வேலை சம்பந்தமாக கேட்டதாகவும், தனக்கு வேலைக்காக பணம் கொடுத்ததுபோலவே 20.03.2018ம் தேதியன்று தன் நாத்தனார் மகள் நித்யாவிற்கும் வேலை வேண்டும் என்று எதிரி சக்திவேலிடம் ரூ.1 லட்சம் பணம் கொடுத்தாகவும், **நித்யா வீட்டிலிருந்து வேலை வேண்டாம் என்று பணத்தை மீண்டும் பெற்று** தரும்படி தங்களை தெந்தரவு செய்து வந்ததால் எதிரி சக்திவேலிடம் நித்யாவிற்காக கொடுத்த பணத்தை கேட்டதாகவும், மேற்படி நித்யாவிற்காக கொடுத்த பணத்தை தாங்கள் பணம் கொடுத்ததிலிருந்து 7, 8 மாதம் கழித்து திரும்ப கொடுத்தார் என்றும், தனது வேலைசம்பந்தமாக கேட்டபோது 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்துள்ளதாகவும், தன்னை போலிசார் வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள் எனவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** முதல் விசாரணையில் கூறிய விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா 15 கலையரசன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **மொபைல் ஷோரூம்வைத்துள்ளேன் என்றும்**, கடந்த 13.04.2019ம் தேதியன்று 2வது எதிரி கோவிந்தலெட்சுமி வீட்டிற்கு தான் ரமேஷ் மற்றும் 3 நபர்களுடன் போனதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் 2வது எதிரி **கோவிந்தலெட்சுமியின் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும்,** தன்னிடம் காண்பிக்கப்படும் மூன்று கையொப்பங்களையும் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸில் வைத்து போட்டதாகவும், மேற்படி 2வது எதிரி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதற்காக 10 நபர்களிடம்

பணம் வாங்கியிருப்பதாக ஆஜர் 2வது எதிரி சொன்னதாகவும், காவல் நிலையத்திலிருந்து துார்க்காலயா ரோட்டில் உள்ள 2வது எதிரியின் வீட்டிற்கு தானும் ரமேசும் சென்ற போது 2வது எதிரியின் வீட்டிலிருந்து காவல் நிலையத்திலிருந்து வந்தவர்கள் ஆவணங்களை எடுத்ததாக சொன்னார்கள் எனவும், மீண்டும் தாங்கள் எஸ்.பி. ஆபீஸ் சென்றோம், அங்கு வைத்து தன்னிடம் காண்பிக்கப்படும் 2–வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்களை போலிசார் வாங்கினார்கள் எனவும், கைப்பற்றுதல் மகசரின் தொடர்ச்சியில் உள்ள தன் இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.11 என்றும், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** நான் எத்தனை பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் மூன்று பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா.ஆ 9 முதல் அ.சா.ஆ.11 வரையிலான கையொப்பங்களை எத்தனை மணிக்கு போட்டேன் என்றால் மதியம் 2.30 மணியிலிருந்து 3.00 மணிக்குள்ளாக போட்டேன் என்றும், நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல என்றும், அந்த முகவரியில் 2வது எதிரியின் வீடு இல்லை என்றால் சரியல்ல என்றும் தில் அளித்துள்ளார்.

அ.சா 16 லதா அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் வீட்டு குடித்தனமாக இருந்து வருகிறேன் என்றும், **தன் மகன் பி.ஈ. வரை படித்துள்ளார்** என்றும், ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும் எனவும், கடந்த 2018ம் வருடம் ஜனவரி மாதத்தில் தேதி தனக்கு ஞாபம் இல்லை என்றும், தான் எதிரி கோவிந்தலெட்சுமியிடம் வேலைக்காக பணம் கொடுத்தேன் என்றும்,

எதிரி கோவிந்தலெட்சுமி தன்னிடம் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாககூறி பணம் கேட்டார் என்றும், தான் தன் மகனுக்கு வேலை வாங்குவதற்காக அவரிடம் பணம் கொடுத்தேன் என்றும், கும்பகோணத்தில் கோர்ட் ஓப்பன் பண்ணுவதாகவும், சிஸ்டத்தில் வேலை இருப்பதாகவும் கூறி மேற்படி வேலைக்கு ரூ.2,00,000/– தேவைப்படும் முன்பணமாக ஒரு லட்சம் கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும், வேலை கிடைத்தவுடன் மீத ஒரு லட்சத்தை தர வேண்டும் என்றும், அதனால் தான் முன்பணமாக ரூ.1லட்சம் கொடுத்ததாகவும், தான் பணம் கொடுத்ததும் கோவிந்தலெட்சுமியிடம் வேலை பற்றி கேட்டதாகவும், எதிரி கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருந்து வந்ததாகவும், சக்திவேல் தனக்கு உறவினார் எனவும், அதனால் சக்திவேலிடம் வேலை கிடைக்காதது பற்றி கூறியபோது சக்திவேல் கோவிந்தலெட்சுமியிடமிருந்து சரியான பதில் எதுவும் வரவில்லை என்றும், அதனால் கோர்ட்டில் கேஸ் போட்டிருப்பதாகவும் சொன்னதாகவும், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்ததாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** ஆஜரில் உள்ள எதிரிகள் இருவரையும் நான் ஏற்கனவே பார்த்துள்ளேன் என்றும், **2வது எதிரி கோவிந்தலெட்சுமியை எப்படி தெரியும் என்றால் சக்திவேல் எனது உறவினர் அவரின் வீட்டிற்கு வரும் போது அங்கு குடியிருந்த 2வது எதிரியை எனக்கு தெரியும்** என்றும், நான் 2வது எதிரியிடம் பேசியுள்ளேனா என்றால் பேசி உள்ளேன் என்றும், அதனால் பணத்தை நான் கோவிந்தலெட்சுமி வசம் கொடுத்தேன் என்றும், நான் கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை திரும்ப கேட்டேனா என்றால் பலமுறை கேட்டேன் என்றும், எனது பணத்திற்கு 2வது எதிரிதான் முழுபொறுப்பு என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** போலிசார் விசாரித்த போது

எதிரி கோவிந்தலெட்சுமியிடம் 2018ம் வருடத்தில் ஜனவரி மாதத்தில் வேலைக்காக பணம் கொடுத்தேன் என்றும், அவர் கும்பகோணத்தில் கோர்ட் ஓப்பன் செய்யபோவதாக சொல்லி சிஸ்டத்தில் வேலை இருப்பதாக சொன்னார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன் என்றும், அதே போல் ஜீன், ஜூலை மாதத்தில் கோவிந்தலெட்சுமியிடம் வேலை பற்றி கேட்டதாகவும், சக்திவேல் எனக்கு ஒன்றுவிட்ட கொழுந்தனார் முறை என்றால் சரிதான் என்றும், நான் போலிசார் விசாரணையில் சக்திவேலிடம் ரூ.1 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், **கோவிந்தலெட்சுமி என்னிடம் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக சொன்னதன்பேரில் தான் நான் மற்றவர்களை கோவிந்தலெட்சுமியிடம் அறிமுகம் செய்து வைத்தேன் என்றும்** பதில் அளித்துள்ளார்.

அ.சா 17 சண்முகசுந்தரம் அரசு தரப்பு முதல் விசாரணையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆவுர் கிளையில் தற்காலிக நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி சக்திவேலை தெரியும் எனவும், கடந்த 2018ம் வருடத்தில் தன் அக்கா லதா அவரது உறவினரான திருவாரூரை சேர்ந்த ஆஜர் எதிரி சக்திவேல் அவர் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி என்பவரிடம் பணம் கொடுத்து திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாகவும், அதை வாங்கி தருவதாகவும், அதனால் தனது அக்கா தன்னிடம் மேற்படி வேலைக்காக ரூ.2,00,000/– ஆகும் முன்பணமாக ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் வேலை கிடைத்தவுடன் மீதம் ஒரு லட்சத்தை கொடுக்க வேண்டும் என்றும் சொன்னதாகவும், தான் தன் அக்கா லதா சக்திவேலிடம் பணம் கொடுத்த பிறகு தன்னிடம் வேலை பற்றிய விபரத்தை கூறியதாகவும், அதன்பிறகு தான் பணம் கொடுத்தேன் என்றும், அதன் பிறகு திருவாரூரில் உள்ள சக்திவேல் வீட்டிற்கு

சென்று ரூ.1,00,000/– பணம் கொடுத்தபோது சக்திவேல் தன்னிடம் வேலை கிடைத்துவிடும் என்று தன்னிடம் கூறினார் என்றும், தான் பணம் கொடுக்கும்போது வேலை வாங்கி தருவதாக சொன்ன கோவிந்தலெட்சுமியை பற்றி கேட்டபோது எதிரி சக்திவேல் கோவிந்தலெட்சுமி வேலைக்கு சென்றிருப்பதாகவும், அடுத்தமுறை வரும்போது பார்க்கலாம் என்று சொன்னதாகவும், தான் பணம் கொடுத்ததிலிருந்து 15, 20 நாட்களில் **சக்திவேலிடம் போன் செய்து வேலை பற்றி கேட்டபோது சக்திவேல் தன்னிடம் கோவிந்தலெட்சுமி அருகில் இருப்பதாகவும் அவரிடம் பேசுமாறும் சொன்னதாகவும், அப்போது தன்னிடம் பேசிய கோவிந்தலெட்சுமி லதாவும் உன் அக்காதானே அவரும் என்னிடம் பணம் கொடுத்துள்ளார் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.**

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** 1வது எதிரி எனக்கு உறவினர் என்றும், அவரது வீட்டில் யார் குடியிருந்தார் என்றால் கோவிந்தலெட்சுமி என்பவர் குடியிருந்தார் என்றும், நீதிமன்றங்களில் வேலை இருப்பதாக யார் சொன்னார்கள் என்றால் 1வது எதிரி சக்திவேல் சொன்னார் என்றும், வேலை யார் மூலமாக கிடைக்கும் என தெரிந்துக் கொண்டேனா என்றால் அவர்கள் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி மூலம் கிடைக்கும் என தெரிந்து கொண்டேன், நான் சக்திவேலிடம் போனில் பேசிய போது கோவிந்தலெட்சுமி அருகில் இருப்பதாக கூறி போனை கொடுத்தார். கோவிந்தலெட்சுமி போனில் என்னிடம் எனது அக்காவும் பணம் கொடுத்துள்ளதாகவும், வேலை கண்டிப்பாக கிடைத்துவிடும் என்றும் இரண்டு லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும், முதலில் ஒரு லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார், எனது அக்கா லதா கோவிந்தலெட்சுமியை பார்த்து அவரது மகனுக்காக பணம் கொடுத்துள்ளார் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** எதிரி சக்திவேல் எனக்கு

உறவினர் என்றால் சரிதான் என்றும், எதிரி சக்திவேல் சொல்லிக் கொடுத்ததன்பேரில் 2–வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும், நான் சக்திவேல், லதா, நந்தினி ஆகியோர் ஒன்று சேர்ந்து வினோத் சிவக்குமார், பவித்ரா, விஜய், அரவிந்த்குமார், காயத்திரி ஆகியோர்களிடம் ரூ.6 லட்சம் பணம் கேட்டு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.18 சாய்விக்னேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் நாகப்பட்டிணத்தில் கந்தசாமி பழக்கடை என்ற பெயரில் கடை நடத்தி வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், எனது மாமா என்னிடம் சக்திவேல் என்பவர் துர்க்காலயா ரோட்டில் உள்ளார் என்றும், அவர் வேலை வாங்கி தருவார் என தன்னிடம் சொன்னார் என்றும், தான் 03.04.2018ம் தேதி துர்க்காலயா ரோட்டில் உள்ள சக்திவேல் (1வது எதிரி) வீட்டிற்கு சென்று அவரை பார்த்ததகாவும்,அப்போது அவர் என்னிடம் எனது வீட்டில் குடியிருக்கும் **கோவிந்தலெட்சுமி என்பவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவார் என்று என்னிடம் சொன்னார், சக்திவேல் என்னிடம் வேலைக்காக ரூ.2,00,000/– பணம் கேட்டார் என்றும், தான் 03.04.2018ம் தேதியன்று ரூ.50,000/–ம், 04.04.2018ம் தேதியன்று ரூ.50,000/–ம் சக்திவேலுவிடம் கொடுத்ததகாவும்,** அப்போது அவர் தன்னிடம் 15 நாட்களில் வேலை கிடைத்து விடும் என்று சொன்னதாகவும், பின்னர் 15 நாட்கள் கழித்து தான் மீண்டும் சென்று எதிரி சக்திவேலிடம் வேலை சம்பந்தமாக கேட்டதாகவும், அவர் இன்னும் 15 நாட்கள் காத்திருக்க வேண்டும் என்று சொன்னதாகவும், மீண்டும் சென்று கேட்ட போது மே மாதம் கோர்ட் லீவு என்றும், ஜுன், ஜுலையில் வேலை கிடைக்கும் என்றும் சொன்னதாகவும், ஜுன், ஜுலை மாதம் கழித்து கேட்டபோது இந்த வருட கடைசியில் கிடைத்துவிடும் என்று சொன்னதாகவும், இந்த நிலையில் தன் மாமா தன்னிடம் வேலை கிடைக்காது 80 பேரிடம் வேலைக்காக பணம் வாங்கி

சக்திவேல் ஏமாற்றியுள்ளதாகவும், அது சம்பந்தமாக வழக்கு நடந்து வருவதாகவும் சொன்னதாகவும், போலிசார் இது சம்பந்தமாக தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** சக்திவேல் வீட்டிற்கு சென்று யார் யார் பணம் கொடுத்தோம் என்றால் நானும், தன் அப்பாவும் சென்று கொடுத்தோம் என்றும், நான் தொகையை இரண்டு தடவையில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், கொடுக்கும் போது 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை என் அப்பா பார்த்துள்ளார் என்றும், தான் பிறகு நான் வேலை வேண்டும் என்றும் சக்திவேலிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் என்றும், அதற்கு என்ன சொன்னார்கள் என்றால் **வேலை போட்டு தருகிறோம் என்று சொன்னார் என்றும், கோவிந்தலெட்சுமி யார் வீட்டில் குடியிருந்தார் என்றால் சக்திவேல் வீட்டியில் குடியிருந்தார் என்றும், கோவிந்தலெட்சுமி வேலை வாங்கி தருவார் என்பதால்தான் சக்திவேலிடம் பணம் கொடுத்தேன் என்றும் பதில் அளித்துள்ளார்.**
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** இந்த நிலையில் நீதிமன்றத்தில் கோவிந்தலெட்சுமியை தெரியும் என்று பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல என்றும், போலிசார் விசாரித்த போது அப்பா நேரடியாக சென்று கோவிந்தலெட்சுமியை சந்தித்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும், அதேபோல் போலிசார் விசாரணையில் கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருந்தார் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.19 ஐயப்பன் அரசு தரப்பு முதல் விசாரணையில் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கீழ்வேளூர் கிளையில் பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தனது நண்பர் அருண்குமாரின் அம்மா அவர்கள்

அருண்குமாருக்கு தெரிந்தவர் மூலமாக கோர்ட்டில் வேலை வாங்கி தரப்போவதாகவும், உனக்கு வேண்டுமானால் சொல் என்றும், தனக்கு வேலை வாங்கி தருவதாகவும் சொன்னார் என்றும், 2018ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் தன்னிடம் எதிரி சக்திவேல் வேலைக்காக ரூ.2லட்சம் பணம் வேண்டும் என்றும் முன்பணமாக ரூ.1லட்சம் வேண்டும் என்றும் தனது கல்வி சான்றிதழ்களின் நகல் வேண்டும் என்றும் அவரை அவரது வீட்டிற்கு சென்று சந்தித்தபோது சொன்னார் எனவும், 15.02.2018ம் தேதியன்று தானும் அருண்குமார், தனது மாமா ஜோதிராஜன் ஆகியோரும் 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று கொடுத்ததாகவும், அப்போது பணத்தை வாங்கிக்கொண்டு இரண்டு மாதத்தில் வேலை கிடைத்தவுடன் மீதி பணத்தை கொடுக்கும்படி எதிரி சக்திவேல் சொன்னதாகவும், இரண்டு மாதம் கழித்து பலமுறை சென்று தான் சக்திவேலிடம் வேலை பற்றி கேட்டபோது இதோ வந்துவிடும், அதோ வந்துவிடும் என்று பதில் கூறியதாகவும், ஆனால் வேலை கிடைக்கவில்லை இது நாள்வரையில் கேட்டும் தனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை எனவும், சக்திவேலிடம் பணம் கொடுத்து ஏமாந்தது தொடர்பாக புகார் வந்துள்ளதாவும், நீங்களும் பணம் கொடுத்து ஏமாந்துள்ளீர்களா என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்ததகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி குறுக்கு விசாரணையில்** சக்திவேலிடம் யார், யார் சென்று பணம் கொடுத்தோம் என்றால் நான் அருண் குமார், என் மாமா ஜோதிராஜன் ஆகியோர் சென்று பணம் கொடுத்தோம், பணம் கொடுத்தோம் வேலை காலத்தில் கிடைக்கவில்லை என்பதால் பலமுறை நான் சக்திவேல் வீட்டிற்கு சென்று கேட்டேன் என்றால் சரிதான் என்றும், ஒரு நாள் சக்திவேல் வீட்டிற்கு நான் சென்றபோது எதிரி கோவிந்தலெட்சுமி அங்கு இருந்தார், அப்போது கோவிந்தலெட்சுமியிடம் வேலை பற்றி கேட்டு தெரிந்துக் கொண்டேனா என்றால் கேட்டேன் என்றும், அது சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்கிறோம் சீக்கிரம்

கிடைத்து விடும் என்று சொன்னார் என்றும், ஆஜர் எதிரி தான் கோவிந்தலெட்சுமியா என்றால் அவர்தான் என்றும், ஆஜர் எதிரி கோவிந்தலெட்சுமியிடம்தான் நான் வேலை சம்பந்தமாக பேசினேனா என்றால் ஆம் என்றும் பதில் அளித்துள்ளார்.

- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** போலிசார் விசாரணையில் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும் என்றும், அவரை எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்றபோது பார்த்தேன் என்றும், 2வது எதிரியை வழக்கில் சம்பந்தபடுத்தியும் நீதிமன்றத்தில் அடையாளம் படுத்தியும் நீதிமன்றத்தில் தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா 20 குமரப்பன் அரசு தரப்பு முதல் முதல் விசாரணைகளில் அவரது சாட்சியத்தில் எதிரிகளை தெரியும் எனவும், ஆஜர் எதிரி சக்திவேல் தனது அப்பா, அம்மாவிடம் தங்கள் வீட்டிற்கு வந்து தனக்கு கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னதாகவும், அது தொடர்பாக தனது அம்மாவும், அப்பாவும் 2018ம் வருடத்தில் ஜனவரி மாதத்தில் சக்திவேல் வீட்டிற்கு சென்று வேலை சம்பந்தமாக கேட்டபோது ஆஜர் எதிரி சக்திவேல் வேலைக்காக ரூ.2லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.1லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் எனவும், அதனால் **தனது அப்பாவும், அம்மாவும் 11.01.2018ம் தேதி ரூ.50,000/-மும், 12.01.2018ம் தேதி ரூ.50,000/-மும் கொடுத்தார்கள் எனவும்,** அப்போது வேலை இரண்டு மாதத்தில் கிடைத்துவிடும் என்று சொன்னார்கள் எனவும், ஆனால் வேலை கிடைக்கவில்லை, திரும்ப சென்று ஏப்ரல் மாதத்தில் கேட்டபோது ஜுன், ஜூலையில்வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார் எனவும், **ஆகஸ்ட் மாதத்தில் சென்று மீண்டும் கேட்டபோது எதிரி சக்திவேல்** வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார் எனவும், ஆனால் வேலை கிடைக்கவில்லை, மீண்டும் சென்று கேட்டபோது **வேலை கிடைக்காது என்று**

கூறி ரூ.50,000/– பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** சக்திவேலிடம் தொகை கொடுக்கும் போது என் அப்பாவும் அம்மாவும் போனார்கள் என்றும், நாங்கள் எதிரி சக்திவேலிடம் கொடுத்த பணத்தில் ரூ.50,000/–ஐ திரும்ப பெறும் போது யார் இருந்தார்கள் என்றால் ஆஜர் எதிரிகள் இருவரும் இருந்தார்கள் என் அம்மா என்னிடம் சொன்னார் என்றும், நான் எதிரிகள் இருவரையும் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், எப்போது என்றால் ஒரு முறை வேலை சம்பந்தமாக கேட்பதற்கு துர்காலயா ரோட்டில் உள்ள சக்திவேல் வீட்டிற்கு சென்றபோது கோவிந்தலெட்சுமியை பார்த்தேன் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** சக்திவேலிடம் நான் இதுநாள் வரையில் ரூ.50,000/–பணத்தை திரும்ப கேட்டு வருகிறேன் என்றால் சரிதான் என்றும், போலிசார் விசாரணையில் என் அம்மாவும், அப்பாவும் எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று பணத்தை திரும்ப பெறும் போது எதிரி கோவிந்தலெட்சுமியை அவர்கள் பார்த்தார்கள் என்ற விபரத்தையும், நான் வேலை சம்பந்தமாக எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று கேட்டபோது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்ததாகவும், வேலை சம்பந்தமாக விசாரித்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா 21 கலியமூர்த்தி அரசு தரப்பு முதல் விசாரணையில் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1வது எதிரி சக்திவேல் மட்டும் தான் தெரியும் எனவும், கடந்த 2018ம் வருடம் ஆஜர் 1வது எதிரியிடம் **தன் வேலைக்காக தன் மாமா கணபதி மூலம் ஆஜர் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து ரொக்கமாக ரூ.1,00,000/–த்தை கொடுத்தேன்** என்றும், பிறகு இரண்டு மாதங்கள் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னதால் தான்

காத்திருந்ததாகவும், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து தொலைபேசி தகவல் வந்து உடன் சென்று பார்த்த பிறகு தான் தன்னைபோல் இன்னும் பலர் ரூ.87,00,000/–த்தை கொடுத்து ஏமாற்றியுள்ளார்கள் என்ற விபரத்தை தெரிந்துக் கொண்டதாகவும், அனைவரும் ஆஜர் 1வது எதிரியிடம்தான் பணம் கொடுத்ததாக சொன்னார்கள் எனவும், இது சம்பந்தமாக தன்னை போல் பாதித்த நபரின் ஒருசிலர் சேர்ந்து புகார் கொடுத்துள்ளார்கள் என்று கேள்விபட்டதாகவும், கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** – 1வது எதிரி சக்திவேல் மட்டும் தனக்கு தெரியும் என்றும், ஆஜர் 1வது எதிரியிடம் நானும் என் மாமாவும் சென்று பணம் கொடுத்தோம், எனது மாமா பெயர் கணபதி என்றும், அவர் பலமுறை வந்து சக்திவேலிடம் கேட்டுள்ளாரா என்றால் கேட்டுள்ளார் என்றும், 1வது எதிரி சக்திவேலிடம் பணம் கொடுக்கும் போது 2வது கோவிந்த லெட்சுமி கோர்ட்டில் வேலை செய்கிறார் அவர்மூலமாக வேலை வாங்கி தருவதாக கூறியதாக கூறியுள்ளேன் என்றும், போலீஸ் விசாரணையில் நான் அவர்கள் இருவரும் மோசடியாக பணம் பெற்றள்ளார்கள் என்றும் கூறியுள்ளேன் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2வது எதிரி கோர்ட்டில் வேலை பார்க்கிறார் என்று 1வது எதிரி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா 22 சண்முகபிரியா அரசு தரப்பு முதல் விசாரணையில் தனியார் பள்ளியில் ஆசியராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் 1வது எதிரி சக்திவேல் மட்டும் தான் தெரியும் எனவும், கடந்த 2018ம் வருடம் பிப்ரவரி மாதம் தேதி ஞாபகம் இல்லை ஆஜர் 1வது எதிரியிடம் தன் அண்ணன் மூலம் பழக்கம் ஏற்பட்டு தனக்கு **நீதிமன்றத்தில் உதவியாளராகவோ, அல்லது இளநிலை எழுத்தராகவோ வேலை வாங்கி தருகிறோம் என்று சொல்லி ஆஜர் 1வது எதிரி சக்திவேல்** தன் அண்ணனிடம் கூறி அவருடன் தங்களிடம் சொன்னதால் தன்னுடைய

நகையை அடமானம் வைத்து அந்த தொகை ரூ.1,00,000/–த்தை ஆஜர் 1–வது எதிரியின் வீட்டில் வைத்து தானும் தன் கணவர், தன் அண்ணன் மூவரும் சேர்ந்து போய் ரொக்கமாக கொடுத்ததாகவும், பிறகு இரண்டு மாதங்கள் கழித்து ஆஜர் 1வது எதிரி சக்திவேலிடம் வேலை சம்பந்தமாக கேட்டபோது விரைவில் உத்தரவு வந்துவிடும், உத்தரவு வந்தவுடன் தான் தகவல் தங்களுக்கு சொல்கிறேன் என்று கூறியதாகவும், தொடர்ந்து ஒரு வருட காலம் இதேபோல் பதிலை சொல்லிக் கொண்டு வந்தார் எனவும், வேலையும் கிடைக்கவில்லை பிறகு கடந்த 2019ம் வருடம் தான் வீட்டில் இருந்தபோது தனக்கு திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் நீங்கள் ஏதாவது வேலைக்காக யாரிடமாவது பணம் கொடுத்துள்ளீர்களா? என்று கேட்டார்கள் எனவும், உடன் தான் ஆமாம் என்று சொன்னவுடன் அவர்களது அலுவலகத்திற்கு அழைத்தார்கள் என்றும், பிறகு இது சம்பந்தமாக பல நபர்களை வேலை வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றியுள்ள விபரம் தெரிந்துக் கொண்டதாகவும், புகாரும் கொடுத்திருந்தார்கள் அந்த புகார் சம்பந்தமாக தன்னை போலிசார் விசாரணை செய்தார்கள் எனவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 1வது எதிரியும் தனது அண்ணன அண்ணாதுரையும் நல்ல நண்பர்கள் என்பதால் அண்ணனின் தகவலின் பேரில் வேலை பெற்றுக் கொள் 1–வது எதிரியிடம் தொகை செலுத்தினேன் என்றும், 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்கிறார் என்பதை விசாரித்து தன் அண்ணன் அண்ணாதுரை தெரிந்து கொண்ட பிறகுதான் 1–வது எதிரியிடம் தொகை செலுத்தினேன் என்றும், 2வது எதிரி தனக்கு நேரடியாக பழக்கமானவர் ஆதலால் கணடிப்பாக வேலை கிடைக்கும் என்று நம்பிக்கையாக சொன்னதன் பேரில் நாங்கள் 1–வது எதிரியிடம் பணம் கொடுத்தோம் என்றும், 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கேட்டபோது வேலை வாங்கி தந்து விடுவேன்**

இல்லையென்றால் பணத்தை தந்துவிடுவேன் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்கள்.

- **2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 2–வது எதிரியை சந்தித்து வேலை பற்றி ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்புதான் பணம் தரப்பட்டது என்றால் சரிதான் என்றும்**, இதுநாள் வரை என் கணவர் மற்றும் என் அண்ணன் அண்ணாதுரை ஆகியோர் 1–வது எதிரியிடம் பணம் கேட்டு வருகிறார்கள், 1–வது எதிரி பணம் தருவதாக கூறி வருகிறார் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.23 அசோக்ராஜ் தனது முதல் விசாரணையில் தான் **லெக்ரீசியன் வேலை செய்து வருவதாகவும், 10–ஆம் வகுப்பு பெயில்** என்றும், எதிரி 1, 2 ஐ தெரியும் என்றும், எதிரி 1 வீட்டில் ரூ. 1,00,000/– ரொக்கமாக கோர்ட்டில் வேலை வாங்கி தருவதற்காக கொடுத்தேன் என்றும், 2, 3 மாதம் கழித்து கேட்ட போது கோர்ட்டில் கேஸ் ஆகி விட்டதாக கூறிவிட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா.23 பத்தாம் வகுப்பு பெயில் ஆகிவிட்டதாகவும், தன் அப்பா மூலம் எதிரிகளை தெரியும் என்றும், **தன்னுடைய படிப்பிற்கு நீதிமன்றத்தில் கட்டு எடுத்துக் கொடுக்கும் வேலை வாங்கி தருவதாக கூறினார் என்றும், வாய் வார்த்தையாக பணிக்கு ஆள் சேர்ப்பார்கள் என்று இரண்டு எதிரிகளுமே கூறினார்கள் என்று பதிலளித்துள்ளார்.**

அ.சா.24 குணசீலன் தனது முதல் விசாரணையில் தான் **டெலிகாமில் டிரைவர் வேலை செய்து வருகிறேன்** என்றும், 1வது எதிரியை தெரியும், **நீதிமன்றத்தில் டிரைவர் வேலை வாங்கி தருவதாக கூறினார் என்றும்,** பிப்ரவரி மாதம் 2018ம் தேதி 1–ம் தேதி வீட்டில் வைத்து ரொக்கமாக ரூபாய் 1,00,000/– கொடுத்தேன் என்றும், **இந்த டிபார்ட்மெண்டில் வேலை கிடைக்கவில்லை என்றால் வேறு டிபார்ட்மெண்டில் வேலை பார்ப்போமா என்று எதிரி சக்திவேல் தன்னிடம்**

கேட்டதாகவும், அதற்கு சரி என்று கூறியதாகவும், நான்கு ஐந்து முறை நேரில் சென்று பார்த்த போது கேஸ் ஆகி இருப்பதாக கூறினார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** 1வது எதிரி சக்திவேலை தெரியும் என்றும், 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது என்றும், பணம் கொடுக்கும் போது தன்னுடைய அப்பா, அக்கா கணவர் மற்றும் அ.சா.24 ஆகியோர் சென்று பணம் கொடுத்ததாகவும், 1–வது எதிரியை பலமுறை சென்று கேட்டபோது தான் ஒரு மேடமிடம் பணம் கொடுத்திருப்பதாகவும், வாங்கி தருவதாகவும் கூறினார் என்றும், ஆனால் அவர் பெயரை தன்னிடம் கூறவில்லை என்றும், **1–வது எதிரி பணம் கொடுத்து ஏமாந்த விஷயம் தெரியவில்லை என்று பதிலளித்துள்ளார்**.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** பணம் தருவதாக ஆசை வார்த்தை கூறியதால்தான் 2–வது எதிரியின் பெயர் சொல்லாமல் ஒரு மேடமிடம் பணத்தை கொடுத்திருப்பதாக 1–வது எதிரி சொன்னதாக அ.சா.24 பொய்யாக பதிலளித்தார் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.25 யோகலெட்சுமி தனது முதல் விசாரணையில் தான் **பி.காம்** வரை படித்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன் என்றும், 1–வது எதிரி சக்திவேலை தனது அப்பா மூலம் தெரியும் என்றும், **ஒருவர் கோர்ட்டில் இருக்கிறார் அவர் மூலம் கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக 1–வது எதிரி கூறினார் என்றும்,** ஜனவரி 2018–ல் ரூ.1,00,000/– ரொக்கமாக 1–வது எதிரி வீட்டில் வைத்து தானும் தனது அப்பாவும் கொடுத்ததாகவும், பின்னர் செப்டம்பர் 10–ம் தேதி தனது **சகோதரியின் திருமணத்திற்காக அந்த பணத்தை 1–வது எதிரியிடம் இருந்து வாங்கிவிட்டதாக** அ.சா.25 சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா. 25 ன் அப்பாவிற்கு எதிரி சக்திவேலை தெரியும் என்றும், ஆனால் சக்திவேல் நீதிமன்றத்தில்

பணிபுரியவில்லை என்றும், **நீதிமன்றத்தில் பணிபுரியும் ஒரு நபர் மூலம் வேலை வாங்கி கொடுப்பதாக 1–வது எதிரி கூறியதாக தனது அப்பா தன்னிடம் சொன்னதாகவும்,** 21.01.2018–ம் தேதி மாலை நேரத்தில் பணம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றும், **எனது சகோதரியின் திருமணத்திற்காக பணம் தேவைப்படுவதால் வேலை வேண்டாம் என கூறி கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதாகவும், அப்போது 1–வது எதிரி 2–வது எதிரிக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு 2–வது எதிரி வர சொன்ன வீட்டிற்கு வந்து பணம் வாங்கி கொண்டு தனது அப்பாவிடம் ரூ.80,000/–ஐ 1–வது எதிரி கொடுத்தார்** என்றும், மீதம் ரூ.20,000/–ஐ பின்னர் தனது அப்பா போய் 1–வது எதிரியிடம் வாங்கி வந்தார் என்றும் அ.சா.25 பதிலளித்துள்ளார். பணம் கொடுத்ததையும், பணம் பெற்றுக் கொண்டதையும் போலீசார் விசாரணையில் சொல்லி இன்ஸ்டால்மெண்ட் மூலமாக பணம் கொடுத்ததையும், திரும்ப பணம் இன்ஸ்டால்மெண்ட் மூலமாக பெற்றதையும் சொல்லவில்லை என்று பதிலளித்துள்ளார்.

- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** மேற்படி விசயங்கள் அனைத்தும் தனக்கு நேரடியாக தெரியாது என்றும், தனது அப்பா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான் என்று அ.சா.25 பதிலளித்துள்ளார்.

அ.சா.26 ஆனந்தநாயகி தனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அவர்களை நேரில் பார்த்துள்ளதாகவும், **MCA படித்துள்ள தனது மகனுக்கு காது கேட்காது என்றும், கோர்ட்டில் கம்யூட்டர் லைனில் ஏதாவது வேலை வாங்கி தருவதாக சொன்னதால்,** தனது மகனுக்காக ரூ.1,00,000/–ஐ 1–வது எதிரியிடம் அ.சா.26–ன் வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், ஆனால் இதுநாள் வரை வேலை கிடைக்கவில்லை பணத்தையும் திரும்பி தரவில்லை என்றும், பணத்தை கடன் வாங்கி கொடுத்ததாக அ.சா.26 சாட்சியம் அளித்துள்ளார்.

◆ **1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் உடல் ஊனமுற்றோர் கோட்டாவில் வேலை வாங்கி தருவதாக எதிரி 1 கூறியதாக அ.சா.26 பதிலளித்துள்ளார்.** சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை நேரில் பார்த்ததாகவும், 2–வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் வேலை கிடைக்கும் என்று நம்பி பணம் கொடுத்ததாகவும், **1–வது எதிரி தனக்கு நன்கு பழக்கம் ஆனவர் என்பதாலும் நம்பி பணம் கொடுத்ததாகவும்** பதிலளித்துள்ளார். கேட்கும் போதெல்லாம் பணம் வரட்டும் தருகிறேன் என்று 1–வது எதிரி கூறிவருவதாக அ.சா.26 பதிலளித்துள்ளார்.

◆ **2–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** போலீசார் விசாரணையின் போது 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியை தமக்கு தெரியாது என்று கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் முதல்முறையாக தெரியும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று பதிலளித்துள்ளார். அதற்கு **நீதிமன்ற கேள்விகளாக** 1–வது எதிரியையும், 2–வது எதிரியையும் நேரில் பார்த்ததாக நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறியுள்ளீர்கள் அவர்களை **எங்கு எப்போது பார்த்தீர்கள் என கேட்டபோது**, சக்திவேல் வீட்டிற்கு சென்றபோது சக்திவேல் அம்மா மற்றும் அவரும் இருந்தார்கள் என்றும், **தங்கள் வீட்டின் பின்னாடி குடியிருக்கும் கோவிந்தலெட்சுமியை 1–வது எதிரி சக்திவேலை அழைத்து வந்து காண்பித்தார் என்றும், நீதிமன்ற கேள்வியாக கோவிந்தலெட்சுமியை அழைத்து வந்து 1–வது எதிரி என்ன கூறினார் என்று கேட்டதற்கு** கோவிந்தலெட்சுமியை காண்பித்து **இவர்களிடம் தான் பணம் கொடுத்துள்ளேன் என்றும் நானும் இவரும் சேர்ந்து தான் வேலை வாங்கி தருகிறோம் என்றும் கூறினார்** என்றும், ஒருமுறை தான் கோவிந்தலெட்சுமியை பார்த்ததாக அ.சா.26 பதிலளித்துள்ளார். 2–வது எதிரி குறுக்கு விசராணையின் போது போலீசார் விசாரணையில் 1–வது எதிரியின் குடும்பத்தாருடன் சேர்த்து வைத்து பார்த்ததாக கூறவில்லை

என்றும், 2–வது எதிரியின் அங்க அடையாளங்களை கூறவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல என்றும் பதிலளித்துள்ளார்.

அ.சா.27 பாலசந்தர் தனது முதல் விசாரணையில் தனியார் நிறுவனத்தில் ஏரியா மேனேஜராக வேலை செய்து வருகிறேன் என்றும், 1–வது எதிரியை தனது மைத்துனர் பன்னீர் செல்வம் மூலம் தெரியும் என்றும், 2018 பிப்ரவரி மாதம் 20–ம் தேதி 1–வது எதிரின் வீட்டில் வைத்து ரூ.1,00,000/– பணத்தை ரொக்கமாக கொடுத்ததாகவும், மேலும் தன்னுடைய ஆவணங்களை ஜெராக்ஸ் காப்பிகளை 1–வது எதிரியிடம் கொடுத்ததாகவும், ஏப்ரல் மாதம் வேலை வந்துவிடும் என்றும், ஜுன், ஜுலை மாதத்தில் கிடைத்துவிடும் என்றும், எதிரி 1 கூறியதாக அ.சா.27 சாட்சியம் அளித்துள்ளார். **தனக்கு கல்யாணம் நிச்சயிக்கப்பட்டதால் வேலை வேண்டாம் என்று கூறிவிட்டு பணத்தை திருப்பி கேட்டபோது ரூ.1,00,000/–ஐ 1–வது எதிரி திருப்பி கொடுத்துவிட்டார்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** தனது அத்தான் மூலம் எதிரி சக்திவேலை தனக்கு தெரியும் என்றும், தான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் பதிலளித்துள்ளார்.

அ.சா.28 முகில் தனது முதல் விசாரணையில், தான் **பேப்பர் ரிப்போர்ட்டராக** வேலை செய்து வருகிறேன் என்றும், இரண்டு எதிரிகளையும் தனக்கு தெரியும் என்றும், **திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கோர்ட்டில் ஓ.ஏ வேலை இரண்டாவது எதிரி கோவிந்தலெட்சுமி வாங்கி தருவதாக 1–வது எதிரி சக்திவேல் தன்னிடம் கூறியதாகவும்,** மார்ச் மாதம் 2018 ரூ.1,00,000/– 1–வது எதிரியிடம் தானும், ரமேஷ் என்பவரும் 1–வது எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தோம் என்றும், அவரது வீட்டில் அம்மா மற்றும் மனைவி இருந்தார்கள் என்றும், தாங்கள் மாதம் மாதம் பணம் சம்பந்தமாகவும், வேலை சம்பந்தமாகவும் 1–வது எதிரியிடம் கேட்டபோது மேடமிடம் கேட்டு இருக்கிறோம் பணம் கொடுத்து விட்டோம் என்று 1–வது எதிரி கூறியுள்ளார் என்றும், கோர்ட்டில் ஜட்ஜ் அம்மாவிடம் பணம்

கொடுத்து விட்டதாக இரண்டாவது எதிரி கோவிந்தலெட்சுமி கூறினார் என்றும் பதிலளித்துள்ளார். ஆனால் இதுநாள் வரை பணம் கிடைக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** தொகையை 1–வது எதிரி வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், கோர்ட்டில் ஓ.ஏ. வேலை கிடைக்கும் என்பதற்காக தொகை கொடுத்ததாகவும், இதற்காக 1–வது எதிரியை சென்று பார்த்த போது 2–வது எதிரி வேலைக்கு சென்றுவிட்டார் என்றும், வெளியே சென்று விட்டார் என்று கூறுவார் என்றும், தன்னுடன் வந்த ரமேஷ் என்பவர் 1–வது எதிரியை போனிலும் நேரிலும் விசாரித்த போது 1–வது எதிரி 2–வது எதிரியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாக 1–வது எதிரி சொன்னார் என ரமேஷ் தன்னிடம் சொன்னதாக அ.சா.28 பதிலளித்துள்ளார். 1–வது எதிரியும் ரமேஷ்ம், இன்னும் சிலரும் நீதிமன்றத்திற்கு 2–வது எதிரியிடம் பணம் கேட்டு வந்தார்கள் என்றால் சரிதான் என்றும், 2–வது எதிரியிடம் 1–வது எதிரி பணம் கொடுத்து ஏமாந்து விட்டதாக 1–வது எதிரி புகார் அளித்த விவரம் ரமேஷ் மூலம் தனக்கு தெரியும் என்று பதிலளித்துள்ளார். இரண்டு பேருமே வேலை வாங்கி தருவதாகதான் கூறினார்கள் என்று பதிலளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** ஜட்ஜ் அம்மாவிடம் பணம் கொடுத்துவிட்டதாகவும், வேலை கிடைத்துவிடும் என்று 2–வது எதிரி சொல்வதாக சாட்சியம் அளிப்பது பொய் என்றால் சரியல்ல என்றும், 2–வது எதிரியை தனக்கு தெரியாது என்றால் சரியல்ல என்றும், இரண்டு பேருமே வேலை வாங்கி தருவதாக கூறினார்கள் என்று இரண்டாவது எதிரியை சம்பந்தபடுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று அ.சா.27 பதிலளித்துள்ளார்.

அ.சா.29 ஐஸ்வர்யா தனது முதல் விசாரணையில், தனக்கு இரண்டு எதிரிகளையும் தெரியும் என்றும், ரமேஷ் என்பவரை தனது மாமா ஆனந்தன்

மூலமாக தனக்கு தெரியும் என்றும், அவர் தனது மாமாவிற்கு போன் செய்து கோர்ட்டில் வேலை காலியாக உள்ளது அதற்கு ரூ.2,00,000/– கொடுத்தால் வேலை கிடைத்துவிடும் என்று ரமேஷ் கூறியதாக அ.சா.29 கூறியுள்ளார். **ரூ.2,00,000/– தற்போது கொடுக்க இயலாது என கூறியதால் ரூ.1,00,000/– ஆவது கேட்டு பாருங்களே என்று 1–வது எதிரி ரமேஷிடம் சொன்னதாக தனது மாமா தன்னிடம் கூறியதாக அ.சா.29 சாட்சியம் அளித்துள்ளார்.** பின்னர் தானும், தனது மாமாவும் சேர்ந்து வந்து ரொக்கமாக ரூ.1,00,000/–த்தை 1–வது எதிரியின் வீட்டில் வைத்து 1–வது எதிரியிடம் கொடுத்ததாகவும், வீட்டில் அவர் மனைவி இருந்தாகவும், 15 நாள் அல்லது 1 மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்றும், கோர்ட்டில் இருந்து அழைப்பார்கள் என்று 1–வது எதிரி சொன்னார் என்றும், ஆனால் பணம் கொடுத்தவர்களுக்கு ரெஷ்பான்ஸ் இல்லை என்று ரமேஷ் கூறினார் என்றும், 1–வது எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டபோது கோர்ட்டில் வேலை செய்யும் லேடி கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்திருப்பதாக 1–வது எதிரி கூறியதாக அ.சா.29 சாட்சியம் அளித்துள்ளார். **2–வது எதிரியிடம் சென்று ரமேஷ் கேட்டபோது 2–வது எதிரி தனக்கு தெரியாது என்று** பதிலளித்துள்ளதால் பின்னர் போலிசில் புகார் அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை காவல் துறை விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும், **தான் பணம் கொடுத்ததுபோல் தன் நண்பர் கார்த்திகாவும் பணம் கொடுத்தார் என்றால் ஆம் என்றும்,** கார்த்திகா அவரது தந்தையுடன் வந்து பணம் கொடுத்ததாகவும், தாங்கள் 2–வது எதிரியை பார்த்ததில்லை என்றும், ஆனால் 1–வது எதிரி வீட்டில் தான் கோர்ட்டில் வேலை செய்யும் 2–வது எதிரி கோவிந்தலெட்சுமி குடியிருப்பதாக 1–வது எதிரி கூறினார் என்றும் பதிலளித்துள்ளார். வேலை கிடைக்கவில்லையே, கடிதம் வரவில்லையே என்று போன் மூலம் **1–வது**

எதிரியை தொடர்பு கொண்டபோது 1–வது எதிரி 2–வது எதிரியிடம் பணத்தை கொடுத்துள்ளதாகவும், வெயிட் பண்ணுங்க என்று சொன்னதாகவும் பதில் அளித்துள்ளார்.

- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2–வது எதிரி அரசு ஊழியர் என்பதால் 1–வது எதிரியுடன் சேர்ந்து கொண்டு பணம் பறிக்க வேண்டும் என்று கெட்ட நோக்கத்தில் நீதிமன்றத்தில் பணிபுரியும் 2–வது எதிரியை பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று பதிலளித்துள்ளார்.

அ.சா.30 ராதிகா தனது முதல் விசாரணையில், தனக்கு இரண்டு எதிரிகளையும் தெரியும் என்றும், ரமேஷ் என்பவர் மூலம் 1–வது எதிரியின் காண்டெக்ட் நம்பர் கிடைத்தது என்றும், அவரை தொடர்பு கொண்ட போது திருவாரூர் கோர்ட்டில் வேலை இருக்கிறது ரூ.2,00,000/– கொடுக்க வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்றும், 1–வது எதிரி கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் 1–வது எதிரியின் வீட்டிற்கு சென்று ரூ.1,00,000/–ஐ கொடுத்ததாகவும், அவரது வீட்டில் 1–வது எதிரியின் மனைவி மற்றும் அம்மா இருந்ததாகவும், **வேலை வரவில்லை என்பதால் அவரை தொடர்பு கொண்டபோது கோர்ட்டில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்ததாகவும், 2–வது எதிரியிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று 1–வது எதிரி சொன்னார் என்றும், 2–வது எதிரியிடம் கேட்டபோது தன்னிடம் பணம் கொடுக்கவில்லை என்றும், 1–வது எதிரியிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றும்**, பின்னர் டி.சி.பி போலீசில் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா. 31 அய்யப்பன் தனது முதல் விசாரணையில், தான் **டைல்ஸ் ஒட்டும் பணி** செய்ததாகவும், **12–ம் வகுப்பு** வரை படித்துள்ளதாகவும், **நீதிமன்றத்தில் ஆபிஸ் பாயாக வேலை வாங்கி தருவதாக** ரமேஷ் என்பவர் தன்னிடம் சொன்னார்

என்றும், அவர் மூலமாக 1–வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து சக்திவேலிடம் ரூ.1,00,000/– கொடுத்ததாகவும், அங்கு அவரது மனைவி மற்றும் அம்மா இருந்ததாகவும், பதினைந்து நாட்களில் வேலை வாங்கி தருவதாக 1–வது எதிரி சொன்னதாகவும், டி.சி.பி ஆபிசில் விசாரிக்கும்போது 2–வது எதிரியை பார்த்ததாகவும், 1–வது எதிரியிடம் வேலை வாங்கி தராததால் பணத்தை திரும்பி கொடுக்கும்படி கேட்டதாகவும், இதற்கிடையில் சுரேஷ் என்பவர் புகார் கொடுத்ததில் டி.சி.பி. ஆபிசில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.32 உமா மகேஷ்வரி தனது முதல் விசாரணையில், தான் **10–ஆம் வகுப்பு** வரை படித்துள்ளேன் என்றும், தான் **வீட்டுக்குடித்தனம்** செய்வதாகவும், 1–வது எதிரியை தெரியும் 2–வது எதிரியை தெரியாது என்றும், **கோர்ட்டில் ஓ.ஏ. வேலை வாங்கி தருவதாக** தனது வீட்டுக்காரரின் நண்பர் ரமேஷ்–யிடம் 1–வது எதிரி கூறினார் என்றும், ரூ.2,00,000/– பணம் கொடுத்தால் வேலை வாங்கி தருவதாகவும், அட்வான்ஸாக ரூ.1,00,000/–ஐ பிப்ரவரி மாதம் 2018ம் ஆண்டு 1–ம் எதிரியின் வீட்டில் வைத்து ரமேஷ் உடன் சேர்ந்து கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். கண்டிப்பாக வேலை வாங்கி தருவதாக பலமுறை கேட்டும் அதற்கு பதில் சொல்லவில்லை என்றும், தங்களை போல் 83 நபர்களை ஏமாற்றியுள்ள விபரம் தெரியவந்தது என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.33 அப்பாஸ் தனது முதல் விசாரணையில், தான் **பி.டெக்** படித்துள்ளதாகவும், **கட்டிட தொழில் செய்து வருவதாகவும்**, அவரது மனைவி வீட்டு குடித்தனம் இருப்பதாகவும், அவருக்கு கோர்ட்டில் வேலை இருப்பதாகவும் ரமேஷ் மூலம் தெரியவந்தது என்றும், திருவாரூரில் இயற்கை அங்காடி வைத்திருக்கும் சக்திவேலிடம் ரூ.2,00,000/– கொடுக்க வேண்டும் என்று கூறினார் என்றும், ஜனவரி 2018–ல் 1–ம் எதிரியின் வீட்டிற்கு சென்று

ரூ.1,00,000/–ஐ கொடுத்த போது சக்திவேலும், அவரது மனைவியும் இருந்தார்கள் என்றும், **ஆன்லைனில் அப்ளிகேஷன் பூர்த்தி செய்ய வேண்டும்** என்றும், 15 முதல் 20 நாட்களில் வேலை கிடைத்துவிடும் என்று 1–ம் எதிரி சொன்னதாக நாள் ஆகிக்கொண்டே போனதால் போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது சக்திவேல் போன் எடுக்கவில்லை என்றும், போனை சுவிட்ச் ஆப் செய்து விட்டார் என்றும், பின்னர் காவல் நிலையத்தில் இது சம்மபந்தாக தன்னை விசாரித்தார்கள் என்றும் அ.சா.33 சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.34 முத்துப்பாண்டி அரசு தரப்பு முதல் விசாரணையில், தான் **கம்யூட்டர் சென்டரில் வேலை செய்வதாகவும், 10–ஆம் வகுப்பு** வரை படித்துள்ளதாகவும், 1–வது எதிரி சக்திவேலை தெரியும் என்றும், கோர்ட்டில் வேலைக்கு ரூ.2,00,000/– கொடுக்க வேண்டும் என்றும், 15 நாட்களில் வேலை ரெடியாகி விடும் என்றும், ரூ.1,00,000/–ஐ ரமேஷ் என்பவரிடம் கொடுத்ததாகவும், பணம் வாங்கி கொண்டதை எதிரி 1 சக்திவேல் ஒரு பத்திரத்தில் எழுதி கொடுத்தார் என்றும், ரமேஷிடம் பணம் கொடுத்தபோது சக்திவேல் ஊரில் இல்லை என்றும், அவர் போனில் பேசினார் என்றும், பணத்துடன் சேர்த்து படிப்பு சான்றிதழ்களையும் கொடுத்ததாகவும், பின்னர் போலீஸ் விசாரணையின் போது நிறைய நபர்களிடம் பணம் வாங்கி உள்ளார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளிக்கிறார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரிதான் போனில் பேசினார் என்று உறுதியாக தெரியாது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா.35 சிவரஞ்சனி அரசு தரப்பு முதல் விசாரணையில், தான் **தனியார் பள்ளியில் முதல்வராக பணிபுரிவதாகவும், M.A, M.Ed, M.Phil படித்துள்ளதாகவும்,** மன்னார்குடி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக ரமேஷ் என்பவர் தன்னை

அனுகினார் என்றும், ரமேஷ் தனது சித்தப்பா என்றும், அவர் சக்திவேல் மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றும், வேலைக்கு ரூ.2,00,000/– பணம் கேட்டார் என்றும், ரூ.1,00,000/–த்தை பயோ டேட்டா, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியோற்றுடன் சேர்த்து மன்னார்குடியில் தனது சித்தப்பா வீட்டில் கொடுத்ததாகவும், சக்திவேல் என்பவரை தொடர்பு கொண்டபோது **பணத்தை கொடுங்கள் சீக்கிரம் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார் என்றும்,** பின்னர் போலீசார் தங்களை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.36 ஜெய்சங்கர் அரசு தரப்பு முதல் விசாரணையில், தான் **தனியார் கம்பெனியில் அக்கவுண்டண்டாக ஆக வேலை செய்து வருகிறேன் என்றும், பி.காம் படித்துள்ளதாகவும்,** அவரிடம் **சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆபீஸ் அசிஸ்டெண்ட் வேலை இருப்பதாக 1–வது எதிரி தன்னிடம் சொன்னதாகவும்,** தனக்கு, தனது மனைவி சர்மிளாதேவி, மனைவியின் தங்கை ஜெயசூர்யா ஆகியோர்களுக்காக தலா ரூ.1,00,000/– வீதம் ரூ.3,00,000/–த்தை 1–வது எதிரியின் வீட்டில் வைத்துக் கொடுத்ததாகவும், வேலை இரண்டு மாதத்தில் உறுதியாகிவிடும் என்று 1–வது எதிரி சொன்னதாகவும், தான் கேட்ட போது வெயிட் பண்ணுங்கள் தொடர்பு கொள்கிறேன் என்று 1வது எதிரி சொன்னதாகவும், பின்னர் காவல் நிலையத்திலிருந்து தொடர்பு கொண்டார்கள் எனவும், அவர்களிடம் தங்களது ஆவணங்கள் மற்றும் பணத்தை கொடுத்த விபரத்தை சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.37 வீரராஜன் அரசு தரப்பு முதல் விசாரணையில், தான் **பி.ஈ., படித்துள்ளதாகவும், தனியார் கம்பெனியில் வேலை செய்வதாகவும்,** குடும்ப நண்பர் ரமேஷ் மூலமாக 1ம் எதிரி அறிமுகமானார் என்றும், **கோர்டில் ஆபீஸில் அசிஸ்டெண்ட் வேலை இருப்பதாக 1வது எதிரி தன்னிடம் சொனனதாகவும்,** அதற்கு ரூ.2,00,000/–கொடுக்க வேண்டும் என்றும், **தனக்கு தனது தங்கை**

ராகினிக்கும் சேர்த்து ரூ.2,00,000/– முன்பணமாக பிப்ரவரி 2018ம் தேதி சக்திவேல் வீட்டில் வைத்து தானும் ரமேஷ்ம் சர்டிபிகேட்டுடன் கொடுத்ததாகவும், ஆறு மாதம் ஆகியும் வேலை வராததால் சக்திவேலை தொடர்பு கொண்ட போது சக்திவேல் தரப்பில் எந்த தகவலும் இல்லை என்றும், 2019ல் எஸ்.பி. ஆபிஸ் இருந்து பணம் கொடுத்தீர்களா என்று தன்னை தொடர்பு கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.38 ஜான் மார்டின் அரசு தரப்பு முதல் விசாரணையில், தான் **B.A.B.Ed படித்துள்ளதாகவும், சொந்தமாக செங்கல் சூளை வைத்து தொழில் செய்து வருவதாகவும்,** மன்னார்குடியில் வசிக்கும் ரமேஷ் தனது நண்பர் என்றும், அவர் சக்திவேல் மூலமாக அரசு வேலை வாங்கி தருவதாகவும், உடனடியாக பணம் கட்டினால் **கோர்டில் கிளார்க் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்னார் என்றும்,** பிப்ரவரி மாதம் 2018ல் ரூ.1,00,000/– 1–வது எதிரி வீட்டில் வைத்து ஆவணங்களுடன் சேர்த்து கொடுத்தேன் என்றும், 1–வது எதிரி வீட்டில் அவரது மனைவி, அம்மா, அப்பா, ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், காலதாமதம் ஆனதால் **1வது எதிரியை தொடர்பு கொண்டபோது நானே தொடர்புக் கொள்கிறேன், அடிக்கடி தொல்லை செய்யாதீர்கள் என்று சொன்னதாகவும்,** பின்னர் எஸ்.பி. ஆபிஸிலிருந்து போன் மூலம் விபரத்தை கேட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** பணம் கொடுத்ததற்கான ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்றும், ரமேஷ் தான் சக்திவேலை பார்த்தால் வேலை கிடைக்கும் என்று சொன்னார் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.39 அர்ஜூனன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **பி.காம்** படித்துள்ளதாகவும், தனது அண்ணன் நண்பர் மன்னார்குடியை சேர்ந்த ரமேஷ்

என்றும், அவர் மூலமாக 1–வது எதிரி சக்திவேலை தெரியும் என்றும், ரூ.1,00,000/– முன்பணமாக கொடுத்தால் **கோர்டில் வேலை வாங்கி தருவதாக சக்திவேல் சொன்னதாக ரமேஷ் தன்னிடம் சொன்னார்** என்றும், **தனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நாளை திருத்துறைப்பூண்டியை சேர்ந்த நபர்கள் பணம் கொடுக்க போகிறார்கள் பார் என்று ரமேஷ் சொன்னதாகவும், திருவாரூரில் உள்ள 1–வது எதிரியின் இயற்கை அங்காடிக்கு சென்று காலை 9 மணிக்கு பார்த்த போது ஜாய் மார்ட்டீன் மற்றும் அவர்கள் சகோதரி ஆகியோர் பணம் கொடுத்தார்கள் அதை தான் பார்த்தேன் என்றும், 1வது எதிரி இருபது ரெசியும் பேப்பர்களை எடுத்து காண்பித்தார் என்றும்,** தான் தன்னுடைய டாக்குமெண்டை கொடுத்தேன் என்றும், **இரண்டு வேலை தான் உள்ளது என்று 1–வது எதிரி சொன்னதாகவும்,** மார்ச் 16 ம் தேதி 2018 ல் ரெசியும் கொடுத்ததாகவும், **படிப்புக்கு ஏற்ற வேலை இருக்காது உதவியாளர் போன்ற வேலைக்கு சென்று விடு என்று 1–வது எதிரி சொன்னதாகவும், நாளை காலை 8.30 மணிக்குள் பணம் கொடுத்தால் வேலை கன்பார்ம் என்றும், பைனல் லிஸ்டு பெயர் வர வேண்டும் என்றால் உடனடியாக பணம் கொடுக்க வேண்டும் என்று 1–வது எதிரி போனில் சொன்னதாகவும்,** தான் உடனடியாக 1–ம் எதிரி வீட்டிற்கு பணத்தை தயார் செய்து கொண்டு சென்றதாகவும், இரவு 8.40 மணிக்கு 1–வது எதிரி சூட்கேஸ் மற்றும் ஆவணங்களுடன் சென்னை புறப்பட தயாராக உள்ளதாகவும், ரயிலில் ஜட்ஜ் வருவதாகவும், அவரிடம் சொல்ல வேண்டும் என்று சொன்னதாகவும், தான் பணத்தை கொடுத்து விட்டு திரும்ப வந்து விட்டதாகவும் அ.சா.39 சாட்சியம் அளித்துள்ளார். 1–வது எதிரியை போனில் தொடர்பு கொண்ட போது சென்னை உயர் நீதிமன்றத்தில் இருப்பதாகவும், மதுரை நீதிமன்றத்தில் இருப்பதாகவும், ஜட்ஜ் லீவில் இருப்பதாகவும் சொன்னார் என்றும், வேலையோ, பணத்தையோ கொடுத்து விடுகிறேன் என்று 1–ம் எதிரி சொன்னதாகவும், வேலை வேண்டாம் பணத்தை கொடுங்கள் என்று கேட்ட போது 16.03.2019ல் 15 நபர்களிடம் பணம் பெற்றுக் கொண்டதற்காக ஒரு மாத

கால அவகாசம் கொடுத்து 1–ம் எதிரி பத்திரம் எழுதி கொடுத்தார் என்றும், ஆனால் சொன்னது போல நடந்து கொள்ளவில்லை என்பதால் 1–வது எதிரி வீட்டிற்கு சென்று உட்கார்ந்திருந்தோம் என்றும், 1–வது எதிரி பைக்கை எடுத்துக் கொண்டு திருவாரூர் கோர்டிற்கு வந்தார் நாங்கள் கோர்டிற்கு அருகில் வரும் போது 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை இரண்டு, மூன்று போலீசார்கள் இழுத்து வந்தார்கள் என்றும், திருவாரூர் எஸ்.பி. ஆபிஸில் போன் மூலம் பணம் கொடுத்த விபரத்தை கேட்டார்கள் என்று அ.சா.39 சாட்சியம் அளித்துள்ளார்.

- **1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1வது எதிரி சக்திவேலை ரமேஷ் மூலமாக தெரியும் என்றும், தான், ரமேஷ், மன்னார்குடியை சேர்ந்த டெயிலர் அவரது பெண் மற்றும் மகனுக்கு பணம் கொடுத்திருந்தார், பேரையூரை சேர்ந்தவர் அவரது மருமகளுக்காக பணம் கொடுத்திருந்தார் ஆகியோர் 1–வது எதிரி சக்திவேல் வீட்டில் உட்கார்ந்திருந்தோம் என்றும், **அரசு பணியில் இல்லாதவர்களிடம் எப்படி பணம் கொடுத்தீர்கள் என்றால் அவர் அவ்வாறு தோற்றத்தை ஏற்படுத்தினார் என்றும்,** கோர்டில் 1–வது எதிரிக்கு ஆள் இருப்பதாகவும், ஜட்ஜை தெரியும் என்று சொல்லி வந்தார் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.40 ஆனந்த்பாபு அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதாகவும்,** 1வது எதிரியை தனது அண்ணன் தீபக் மாமனார் மூலமாக தெரியும் எனறும், **கோர்டில் அட்டன்டர் வேலை வாங்கி தருவதாக 1–வது எதிரி சொன்னதாகவும்,** முன்பணமாக ரூ.1,00,000/–கேட்டார் 2018 பிப்ரவரி மாதம் ரூ.1,00,000/–த்தை 1வது எதிரி வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், அங்கு ஒரு லேடி இருந்ததாகவும், இரண்டு மாதம் ஆகியும் ஆடர் வரவில்லை என்றும், சிறுது காலத்திற்கு பிறகு தான் 1வது எதிரி ஏமாற்றிய விபரம் தனக்கு தெரிய வந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.41 சுகபிரம்மம் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **பால் வியாபாரம் செய்வதாகவும்**, தனது கொளுந்தியா பையன் தினேஷ், அவருக்கும் மதர்தெரசா ஐ.பி.ஐ செல்வதற்கும் பழக்கம் உள்ளது என்றும், செல்வம் என்பர் தினேஷ் மூலமாக பணம் ஏற்பாடு செய்யுங்கள் நீதிமன்றத்தில் வேலை உள்ளது என்று சொன்னதாகவும், அ.சா.41 தனது மகனுக்காக வேலை வாங்க வேண்டும் என்பதற்காக 2018 மார்ச் மாதத்தில் உடனடியாக ரூ.2,60,000/– கேட்டு ரூ.1,00,000/–த்தை அட்வான்ஸ் ஆக 1–வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு மாலை 6.00 மணிக்கு செல்வத்துடன் சென்று கொடுத்ததாகவும், பின்னர் பல முறை வந்து கேட்டதாகவும், வேலை வரவில்லை பணத்தையும் கொடுக்காததால் எஸ்.பி. ஆபிஸ்–க்கு புகார் கொடுக்க சென்றதாகவும், அங்கு ஏற்கனவே சுரேஷ் என்ற நபர் புகார் கொடுத்துள்ளதாக தெரிய வந்துள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி சக்திவேல் தன்னிடம் நேரடியாக பணம் கேட்கவில்லை என்றால் செல்வம் மூலமாக கேட்டார் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.42 வேல்முருகன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதாகவும்,** 1–வது எதிரியை தெரியும், 2–வது எதிரியை பார்த்ததில்லை என்றும், தனது சித்தி மகன் தினேஷ் **கோர்டில் அட்டன்டர் வேலை உள்ளது** அதற்கு பணம் கட்டி வாங்கி கொள்ளலாம் என்று செல்வம் என்பவர் மூலமாக தெரிய வந்தது என்றும், செல்வம் 1–வது எதிரியிடம் அழைத்து சென்றார் என்றும், தனது பயோ டேட்டா, சர்டிபிகட் ஜெராக்ஸ் மற்றும் ரூ.1,00,000/– பணம் ஆகியவற்றை 1–வது எதிரி சக்திவேலிடம் கொடுத்ததாகவும், ஜுன் மாதத்தில் வேலை வந்து விடும் என்றும், கால்பார் வந்தவுடன் போய் அட்டெண்ட் செய்யுமாறு 1–வது எதிரி சொன்னதாகவும், 1 வருடம் ஆகியும் வேலை கிடைக்கவில்லை பின்னர்

போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.43 புஷ்பவள்ளி அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் மூலிகை பொடி வியாபாரம் செய்து வருவதாகவும், **1–வது எதிரிக்கு மூலிகை பொடி வியாபாரம் செய்து வந்த வகையில் தனக்கு 1–வது எதிரி 10 வருடம் பழக்கம் என்றும்,** அவ்வாறு வரும் போது 1–வது எதிரி வீட்டில் நான்கு, ஐந்து நபர்கள் இருந்தார்கள் என்றும், கோர்டில் வேலை வாங்குவதற்காக பணம் கொடுப்பதற்கு வந்துள்ளார்கள் என 1–வது எதிரி அம்மா சொன்னதாகவும், **தானும் தனது மகனுக்கு வேலை வாங்கலாம் என** கேட்ட போது ரூ.2,00,000/– வேண்டும், 2018 பிப்ரவரியில் **ரூ.1,00,000/–த்தை 1–வது எதிரியிடம் கொடுத்ததாகவும், அதை வாங்கி சாமி படத்தின் முன் வைத்ததாகவும், அங்கு ஏற்கனவே வேறு ஒரு நபர் கொடுத்த பணமும் சாமி படத்தின் முன் இருந்ததாகவும், இரண்டு பணத்தையும் எடுத்துக் கொண்டு பி.டெக் படித்த தனது மகனின் பயோ டேட்டாவையும் வாங்கி கொண்டு** தன்னை விளமல் பாலத்தில் இறக்கி விட்டு ஜட்ஜ் அம்மா வீட்டிற்கு போய் பணத்தை கொடுக்க போவதாகவும், மூன்று மாதத்தில் வேலை கிடைத்து விடும் என்று சொன்னதாகவும், ஆனால் கிடைக்கவில்லை என்றும், மீண்டும் போய் கேட்ட போது பணம் கிடைக்கவில்லை, பின்னர் எஸ்.பி. ஆபிஸிலிருந்து விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** தான் சக்திவேல் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி கோர்டில் வேலை பார்க்கும் விபரம் தனக்கு தெரியும் என்றும், தான் நேரடியாக கோவிந்தலெட்சுமியிடம் பேசியதில்லை என்றும் அ.சா.43பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** போலிசார் விசாரித்த போது கோவிந்தலெட்சுமியும் ஜட்ஜ் அம்மாவும் ஏமாற்றி விட்டார்கள் என சொல்லி கொண்டார்கள் என்ற விபரத்தை நான் சொன்னேனா என்றால் சொல்லி உள்ளேன் என்றும், 1–வது எதிரி தன்னிடம் பணத்தை கொடுத்து

விடுகிறேன் என்று ஆசை வார்த்தை கூறியதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல எனறும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.44 பிரேம்குமார் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **ஐ.சி.எஃபில் தொழில் பயிற்சி பெற்று வருவதாகவும்,** 1–வது எதிரி சக்திவேலை தெரியும் என்றும், அவர் **கோர்டில் ஆபிஸ் அஸிஸ்டெண்ட் வேலை வாங்கி தருவதாக** சொல்லி ரூ.1,00,000/–பணத்தை 1–வது எதிரி வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், அப்போது 1–வது எதிரியின் மனைவியும் உடன் இருந்தார்கள் என்றும், அவரது வீட்டில் கோர்டில் வேலை செய்யும் நபர் இருப்பதாகவும், அவர் ஜட்ஜ்க்கு உறவினர் என்றும் சொன்னார் என்றும், ரூ.20/– பத்திரத்தில் பணம் வாங்கியதற்காக எழுதி கொடுத்தார் என்றும், மூன்று மாதம் ஆகியும் வேலை கிடைக்கவில்லை, எஸ்.பி.ஆபிஸ் இருந்து தனக்கு போன் வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 1–வது எதிரி வீட்டில் ஒரு லேடி குடியிருப்பதாகவும், அவர் ஜட்ஜின் உறவினர் என்றும், அவர் திருவாரூர் கோர்டில் வேலை பார்ப்பதாகவும், 1–வது எதிரி சொன்னதால் தான் நம்பியதாகவும்,** 1–வது எதிரி வீட்டிற்கு அருகில் உள்ள புரெவுசிங் சென்டரில் வைத்து ரூ.20/– பத்திரத்தில் கையெழுத்து போட்டுக் கொடுத்தார் என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா.45 ராமசந்திரன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் நிறுவனத்தில் சென்னையில் வேலை பார்ப்பதாகவும்,** தன் மாமா ராஜா மூலம் 1–வது எதிரியை தெரியும், 2–வது எதிரியை தெரியாது என்றும், தனது மாமா மூலம் **1–வது எதிரி கோர்டில் ஆபீஸ் அசிஸ்டெண்ட் வேலை வருகிறது** அதற்கு ரூ.2,00,000/– செலவாகும், டாகுமெண்டும், ரூ.1,00,000/–மும் முதலில் வேண்டும் என்று சொன்னார்கள், அதன்படி பிப்ரவரி 2018ல் 1–வது எதிரி

வீட்டில் ரூ.1,00,000/– பணம் மற்றும் சான்றிதழ்களின் நகல்களை கொடுத்தேன் பலமுறை கேட்டும் வேலையும் வரவில்லை பணமும் கொடுக்கவில்லை **ஹச்.டி.எஃப்.சி. காசோலை ஒன்றை ரூ.1,00,000/–த்திற்கு தேதி போடாமல் 1–வது எதிரி எழுதி கொடுத்தார் என்றும், வசூலுக்கு போடும் போது தேதி போட்டு போடுமாறு சொன்னார் என்றும்,** பின்னர் டி.சி.பி. ஆஃபிஸிலிருந்து தன்னை நேரில் வரசொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.46 மார்கிரேட்சாந்தி அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் ஃபேன்சி கடையில் வேலை பார்ப்பதாகவும்,** தனது கணவருக்கு மன்னார்குடியில் ஸ்டூடியோ வைத்துள்ள ரமேஷ் என்பவரை தெரியும் என்றும், தங்கள் குடும்பம் கஷ்டத்தில் இருப்பதால் தனக்கு வேலை இருந்தால் சொல்லுமாறு ரமேஷிடம் தனது கணவர் சொல்லியிருந்ததாகவும், ரமேஷ் தங்களிடம் 1–வது எதிரி சக்திவேல் மூலம் கோர்டில் வேலை இருப்பதாக சொன்னதாகவும், ரூ.1,00,000/– பணத்தை 2018 மூன்றாவது மாதம் 1–வது எதிரி வீட்டில் வைத்துக் கொடுத்ததாகவும், ரூ.2,00,000/– கட்ட வேண்டும் என்று சொன்னதாகவும், தாங்கள் வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்திருந்ததால் ஜுன் மாதம் வரை காத்திருந்து பின்னர் பணத்தை திருப்பி தருமாறு 1–வது எதிரியிடம் கேட்டோம் என்றும், அதற்கு அவர் பணம் வாங்கியதற்கு ஆவணம் மட்டும் எழுதி கொடுத்தார், இதுநாள் வரை பணத்தை திருப்பி தரவில்லை என்றும், இது சம்பந்தமாக டி.சி.பி. ஆபிஸிலிருந்து தங்களை வரசொன்னார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி எங்களிடம் நேரடியாக பணம் கேட்கவில்லை என்றால் சரிதான் என்றும், ரமேஷ் மூலமாக பணத்தை கொண்டு போய் 1–வது எதிரியிடம் கொடுத்த போதுதான் 1–வது எதிரி பார்த்ததாக பதில் அளித்துள்ளார்.

அ.சா.47 ராஜன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் வங்கியில் வேலை செய்ததாகவும்,** தனது சித்தப்பா அண்ணாதுரை மூலமாக 1–வது எதிரியை தெரியும் என்றும், 2–வது எதிரியை பார்த்ததில்லை என்றும், தனது சித்தப்பாவிடம் **1–வது எதிரி** 2018ம் வருடத்தில் **கோர்ட்டில் அலுவலக உதவியாளர் வேலை இருப்பதாகவும்,** அதற்கு ரூ.2,00,000/– தேவைப்படும் என்று சொல்லியுள்ளார் என்றும், தனது சித்தப்பா தனது அப்பாவிடம் சொல்லி தான் அட்வான்ஸ் தொகை ரூ.1,00,000/–த்தை 1–வது எதிரி வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், ஆறு மாதத்திற்குள் வேலை வந்து விடும் என்று சொன்னதாகவும், ஒரு வருடம் ஆகியும் வேலை வராததால் எஸ்.பி.ஆபிஸ்க்கு கம்ளைன்ட் கொடுக்க சென்ற போது ஏற்கனவே சதீஷ் என்பவர் கம்ளைன்ட் கொடுத்திருப்பதாக தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.48 சங்கீதா அரசு தரப்பு முதல் விசாரணையில் தனது கணவரின் நண்பர் ஸ்டூடியோ வைத்திருக்கும் ரமேஷ், **மன்னார்குடியில் குடும்ப நல நீதிமன்றம் துவங்க உள்ளார்கள் அதற்கு ஆள் எடுப்பதாக சொன்னார்கள், தெரிந்தவர்கள் இருந்தால் சொல்லுமாறு ரமேஷ் தனது கணவரிடம் சொல்லியுள்ளார்,** தான் படித்து விட்டு இருந்தால் தனக்கு வேலை வாங்கலாம் என்று நினைத்து தனது கணவர் 2018 மார்ச் மாதம் கல்வி சான்றிதழ்களின் நகல்களை தன்னிடம் வாங்கி கொண்டு **ரமேஷ்– உடன் 1–வது எதிரியை பார்க்க வந்தார் என்றும்**, அவர் ரூ.2,00,000/– பணம் வேண்டும், **உடனடியாக ரூ.1,00,000/– தர வேண்டும் என்று** சொன்னதாகவும், **பணம் ஏற்பாடு செய்ய ஒரு நாள் காலதாமதம் ஆனது என்றும், பணம் கொடுக்காவிட்டால் வேறு ஆட்கள் தயாராக இருப்பதாக 1–வது எதிரி சொன்னதாகவும்,** பின்னர் ரூ.1,00,000/– பணத்தை தனது கணவர், அவரது நண்பர், ரமேஷ் மற்றும் அப்பாஸ் ஆகியோருடன் சென்று 1–வது எதிரியிடம் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் ஆறு மாதம் ஆகியும் வேலை கிடைக்கவில்லை.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அரசு வேலையில் இல்லாத ஒருவரிடம் எப்படி பணம் கொடுப்போம் என்றால் எனக்கு ஜட்ஜை தெரியும், வக்கீலை தெரியும், அவர்கள் மூலம் தான் செய்கிறேன் என சொன்னதால் கொடுத்தோம் என்றும் பதில் அளித்துள்ளார். 1–வது எதிரி மீது நம்பிக்கை வைத்து பணம் கொடுத்து விட்டோம் என அ.சா.48 பதில் அளித்துள்ளார்.

அ.சா.49 ராகினி அரசு தரப்பு முதல் விசாரணையில் தங்கள் குடும்ப நண்பரான மன்னார்குடி **ரமேஷ் மூலம் 1–வது எதிரி மன்னார்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக சொன்னதாகவும், தனக்கும், தனது அண்ணன் வீரராஜனுக்கும் முன்பணமாக தலா ரூ.1,00,000/–த்தை 1–வது எதிரி வீட்டில் வைத்து ரமேஷ் மூலமாக கொடுத்ததாகவும்**, ஒரு மாதத்தில் வேலை வந்து விடும் என 1–வது எதிரி சொன்னதாகவும், ஆறு மாதம் ஆகியும் வேலை கிடைக்கவில்லை, 1–வது எதிரி நேரடியாக சென்று கேட்டதற்கு ஜட்ஜின் லாக்கரில் இருப்பதாகவும், அவரிடம் வேலை பார்க்கும் நபரிடம் பேசுமாறு போன் போட்டு 1–வது எதிரி கொடுத்ததாகவும், தெரியாத நபரிடம் பேச மாட்டோம் என தாங்கள் சொல்லிவிட்டதாகவும், பின்னர் பத்து நாட்கள் ஆகியும் வேலை கிடைக்காததால் கம்ப்ளைன்ட் கொடுக்கலாம் என சென்ற போது ஏற்கனவே கம்ளைன்ட் கொடுத்து விட்ட விபரம் தனக்கு தெரிய வந்தது என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அரசு வேலையில் இல்லாத நபர் எப்படி வேலை வாங்கி தருவார் என நம்பினேன் என்றால் ஜட்ஜை தெரியும், ஜட்ஜ் தான் வாங்கி தருவார் என சொன்னதாகவும், பணம் ஜட்ஜின் லாக்கரில் இருப்பதாக 1–வது எதிரி சொன்னதால் நம்பியதாகவும் அ.சா.49 பதில் அளித்துள்ளார்.

அ.சா.50 பக்கிரிசாமி அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **சிட்டியூனியன் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக வேலை செய்கிறேன்** என்றும், 1–வது எதிரியை தெரியும் என்றும், **தான் மன்னார்குடி விஸ்வகர்மா சங்கத்தில்**

உறுப்பினராக இருக்கிறேன் என்றும், அந்த சங்கத்தில் 1–வது எதிரி திருவாரூரில் உறுப்பினராக உள்ளார் என்றும், நீதிமன்றத்தில் காலியாக உள்ள அட்டண்டர் வேலையை தனது உறவினர் அனிதா என்பவருக்கு வாங்கி தருவதாக சொன்னார் என்றும், ரூ.2,00,000/– ஆகும் என்றும், முன்பணமாக ரூ.1,00,000/–தர வேண்டும் என்றும், தானும், அனிதா மற்றும் அனிதாவின் தகப்பனார் போய் 1–வது எதிரி வீட்டில் சென்று பணம் கொடுத்த போது அங்கு 1–வது எதிரியின் அம்மா, அப்பா, அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளும் இருந்தார்கள் என்றும், 1–வது எதிரி ரூ.1,00,000/– ரொக்கமாக வாங்கி கொண்டு ஒரு மாதத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றும், 2019ம் வருடம் வரை காத்திருந்தோம் வேலை வரவில்லை என்றும், எஸ்.பி. ஆபீஸில் கம்ளைண்ட் கொடுக்க வந்தபோது ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டதாகவும், தங்களை போல் 80–க்கும் மேற்பட்டோர்கள் ஏமாந்ததாக சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.51 மகேஷ்வரி அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும்,** தங்கள் வீட்டிற்கு அருகில் இளவழகன் என்பவர் அவரது மகள்கள் இருவருக்கும் வேலை வாங்குவதற்காக 1–வது எதிரியிடம் பணம் கொடுத்திருப்பதாகவும், தனது மகனுக்கு வேலை வேண்டும் என்றால் பணம் கொடுக்கலாம் என்று சொன்னதால் 1–வது எதிரி விளக்குடி வந்தபோது கேட்டேன் என்றும், கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றும், 2018ம் வருடம் மார்ச் மாதம் ரூ.2,00,000/– பணம் வேண்டும், முன்பணமாக ரூ.1,00,000/– த்தை 1–வது எதிரி வீட்டில் வைத்து தானும், இளவழகன் மற்றும் தனது மகன் ஆகியோர் கொடுத்து விட்டு வந்தோம் என்றும், தாங்கள் பணம் கொடுக்கும் போது 1–வது எதிரியின் வீட்டில் அவரது அம்மா, அப்பா, அவரது மனைவி ஆகியோர் இருந்தார்கள் என்றும், பின்னர் லேட்டாக, லேட்டாக தாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம், பணத்தை திருப்பி

கொடுக்குமாறு கேட்டதால் 2019–ல் 1–வது எதிரி பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாக சொல்லி எழுதி கொடுத்தார் என்றும், எஸ்.பி. ஆபீஸிற்கு விசாரணைக்கு வந்தபோதுதான் நிறைய பேரிடம் பணம் வாங்கி விபரம் தெரிய வந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி எழுதி கொடுத்ததாக சொல்லும் பேப்பரை தான் போலிசாரிடம் காட்டினேன் என்றும், 1–வது எதிரி அரசாங்க வேலையில் உள்ளாரா என்றால் தனக்கு தெரியாது என்றும், இளவழகன் என்பவர் இரண்டு மகள்களுக்கு கொடுத்ததாக சொன்னதால் தானும் தனது மகனுக்கு கொடுத்து விட்டேன் என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா.52 தினேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் கம்பெனியில் சூப்ரவைசராக வேலை செய்து வருகிறேன்** என்றும், திருவாரூரில் உள்ள செல்வம் என்பவர் அவரது வீட்டில் ஆரோ வாட்டர் ப்யூரிபை சர்வீஸ் செய்த வகையில் பழக்கம் என்றும், அவர் மூலம் 1–வது எதிரி சக்திவேலை தெரியும் என்றும், 2018ம் வருடம் பிப்ரவரி மாத வாக்கில் செல்வம் தன்னிடம் என்ன படித்துள்ளேன் என்று கேட்டதற்கு தான் டிப்ளமொ படித்துள்ளதாகவும், செல்வம் **கோர்ட்டில் ஓ.ஏ வேலை இருப்பதாகவும்,** விருப்பம் உள்ளதா என்று கேட்டதாகவும், திருவாரூர், நாகப்பட்டிணம், தஞ்சாவூர் ஆகிய ஊரில் வேலை இருப்பதாக செல்வம் சொன்னதாகவும், தான் மும்பையில் வேலையில் இருந்ததால் **1–வது எதிரியிடம் போன் மூலம் பேசியதாகவும், ரூ.3,00,000/– ஆகும் என்று 1–வது எதிரி சொன்னதாகவும், இரண்டு மாதத்தில் வேலை வாங்கி தருவதாகவும் முதலில் ரூ.1,00,000/– கொடுத்து விட வேண்டும் என்று 1–வது எதிரி சொன்னதாக** அ.சா.52 சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் தனது அப்பா மற்றும் மாமா மூலம் 1–வது எதிரி வீட்டில் ரூ.1,00,000/–த்தை கொடுத்து விட்டு **வேலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் மும்பையில்**

இருந்த வேலையை விட்டு விட்டு ஊருக்கு வந்து 1–வது எதிரியின் வீட்டிற்கு போய் 1 மற்றும் 2வது எதிரிகளை பார்த்த போது 2–வது எதிரியும் அதிகபட்சம் இரண்டு மாதங்கள் தான் ஆகும் வேலை நடந்து கொண்டிருக்கின்றது என்று சொன்னதாகவும், பின்னர் கால தாமதம் ஏற்பட்டது கேஸ் நடந்து கொண்டிருக்கின்றது என 1–வது எதிரியின் அம்மா தன்னிடம் சொன்னதாகவும், எஸ்.பி. ஆபீஸிலிருந்து போலிசார் விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா.52 தான் கொடுத்ததாக சொல்லும் தொகையை திருவாரூர் ஜட்ஜ் அம்மாவிடம் கொடுத்து விட்டதாக 1–வது எதிரி தன்னிடம் சொன்னதாக பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** வேலை வாங்கி தருவதாக 2–வது எதிரி சொன்னார் எனவும், 1–வது எதிரியின் காலணி வீட்டில் குடியிருக்கிறார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று மறுத்து பதில் அளித்துள்ளார்.

அ.சா.53 சிவதியாகராஜன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **பத்தர் வேலை செய்து வருவதாகவும்**, 1–வது எதிரியை தெரியும் என்றும், **தனது மகள் சர்மிளா தேவி, ஜெயசூர்யா, மருமகன் ஜெயசங்கர் ஆகிய மூவருக்கும் 1–வது எதிரி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னார்** என்றும், ஒரு நபருக்கு ரூ.2,00,000/– ஆகும் என்றும், நம்முடைய சமுதாய நண்பர்களுக்கு வாங்கி தர விரும்புவதாகவும், வேலை வேண்டும் என்றால் சொல்லுமாறும் 2018 ல் 1–வது எதிரி சொன்னார் என்றும், முதலில் ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் **மூவருக்கும் தலா ரூ.1,00,000/– வீதம் ரூ.3,00,000/–த்தை 1–வது எதிரியின் வீட்டில் வைத்து 2018 இரண்டாவது மாத வாக்கில் கொடுத்ததாகவும்**, மூன்று மாதம் காத்திருந்ததாகவும், அதன்பிறகு சண்டை போடும் வகையில் ஆகிவிட்டதாகவும், போலீசிடம் சொன்ன போது வேறு ஒரு நபர் புகார் கொடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது போலிசார் தன்னை விசாரித்ததாக

சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** ரூ.3,00,000/– 1–வது எதிரியிடம் கொடுக்கவில்லை என்றாலும் அப்படி இருந்தால் எழுத்து மூல ஆவணம் போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா. 54 செந்தில் அரசு தரப்பு முதல் விசாரணையில் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருவதாகவும், 2018 பிப்ரவரி மாதத்தில் **1–வது எதிரி தனக்கு கவர்மெண்ட் வேலை வாங்கி தருவதாக சொல்லி முதலில் ரூ.1,00,000/– வேண்டும் என்றும்,** பின்னர் வேலை வந்த பிறகு ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் 1–வது எதிரியின் வீட்டில் வைத்து அவரிடம் தான் ரூ.1,00,000/–த்தை கொடுத்ததாகவும் வேலையும் வரவில்லை, பணமும் வரவில்லை போலிசார் எஸ்.பி. ஆபீஸிலிருந்து தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி அவரது வீட்டில் குடியிருக்கும் அம்மா மூலம் சொல்லி வாங்கி தருவதாக சொன்னார் என்றும், எந்த அம்மா என்று தனக்கு பெயர் தெரியவில்லை என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.55 அகிலரசன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தனியார் துறையில் வேலை செய்து வருவதாகவும், தங்கள் ஊரில் செந்தில்குமார் என்பவர் கடை வைத்துள்ளார் எனவும், அவர் தனக்கு நண்பர் எனவும், **மேற்படி செந்தில்குமார் தன்னிடம் கோர்ட்டில் வேலை இருப்பதாகவும், சக்திவேலை போய் பார்த்தால் கிடைத்துவிடும் என்றும் சொன்னார் எனவும்,** பிப்ரவரி 2018ம் வருடம் 1வது எதிரி சக்திவேலை அவரது வீட்டில் போய் பார்த்து ரூ.1,00,000/– பணம் கொடுத்தோம் வேலை கிடைத்தவுடன் பாக்கி ரூ.1,00,000/– பணம் கொடுக்குமாறு

சொன்னார் எனவும், தான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தபோது அவரது வீட்டில் அவரது அம்மா, மனைவி, மகன் ஆகியோரும் இருந்தார்கள் எனவும், ஒரு மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்றும், 1வது எதிரியின் வீட்டில் ஜட்ஜ் அம்மா குடியிருப்பதாகவும், அவர் மூலம் **கிளார்க் வேலை கிடைத்துவிடும்** என்றும் சொன்னார் எனவும், பின்னர் 2 மாதம் ஆகியும் வேலை கிடைக்காததால் போன் செய்து கேட்டபோது வேலை கிடைத்துவிடும் எனவும், வெயிட் செய்யுங்கள் என்று சொன்னார் எனவும், அதன் பிறகு வீட்டில் போய் 1வது எதிரியை பார்த்ததாகவும், வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார் எனவும், பின்னர் வேலை கிடைக்கவில்லை எனவும் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் செய்து பணம் கொடுத்தீர்களா? என்று கேட்டார்கள் பின்னர் தான் நேரடியாக எஸ்.பி. ஆபீஸ் போய் விபரத்தை சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.56 பாலகுமார் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வருவதாகவும்,** திருத்துறைப்பூண்டியில் உள்ள தனது மாமா செந்தில்குமார் என்பவர் மூலம் 1வது எதிரி சக்திவேலை தெரியும் எனவும், கடந்த 2018ம் வருடம் பிப்ரவரி மாதம் சக்திவேல் வேலை வாங்கி தருவதாக தன்னிடம் சொல்லி ரூ.1,00,000/–த்தையும் பையோடேட்டா விபரங்களையும் வாங்கிக் கொண்டார் எனவும், பணத்தை 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், **நீதிமன்றத்தில் ரெக்கார்டு கிளார்க் வேலை வாங்கி தருவதாக சொன்னதாகவும்**, பணத்தை கொடுத்த பின்னர் ஒரு வருடத்தில் வேலை கிடைக்கும் என்றார் எனவும், அதன் பிறகு போன் செய்தாலும் எடுக்கவில்லை அதன் பிறகு நேரடியாக வந்து பார்த்ததாகவும், அப்போது பதில் ஒழுங்காக 1வது எதிரி சொல்லவில்லை என்றும், புகார் கொடுக்கலாம் என்று சென்றபோது தன்னைபோல் ஏமாந்த நபர்கள் புகார் கொடுத்திருப்பதாக சொன்னார்கள், தன்னை சாட்சியாக ஏற்றுக்கொள்வதாக சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.57 பரமேஷ்வரி அரசு தரப்பு முதல் விசாரணையில் 1–வது எதிரியை விளக்குடியை சேர்ந்த இளவழகன் என்பவர் மூலம் தெரியும் என்றும், **23.03.2018ம் தேதி இளவழகன் காலை 5.00 மணிக்கு தனக்கு போன் செய்து சக்திவேல் என்பவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாகவும் அவரிடம் பணம் கொடுத்தால் வேலை வாங்கி தந்து விடுவார் என்று சொன்னதாகவும்,** தான் தனது கணவர், தனது அப்பா, இளவழகன் அன்று மாலை 6.00 மணிக்கு 1–வது எதிரியின் வீட்டிற்கு வந்து ரூ.1,00,000/–த்தை கொடுத்தோம் என்றும், ரூ.2,00,000/– பணம் கேட்டார்கள் என்றும், ஜுன் மாதம் வேலை கிடைத்து விடும் என்று சொன்னார் ஆனால் ஒரு வருடம் ஆகியும் கிடைக்கவில்லை என்பதால் தங்களுக்கு வேலை வேண்டாம் பணத்தை திருப்பி தந்து விடுங்கள் என்று கேட்டதற்கு வேலை வாங்கி தந்து விடுகிறேன் என்று 1–வது எதிரி சொன்னதாகவும், பின்னர் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் செய்தார்கள், தன்னை போல் 83 நபர்களும் ஏமாந்த விபரம் தனக்கு தெரிய வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.58 ராஜேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தனியார் கம்பெனியில் அக்கவுண்ட் மேனேஜராக சென்னையில் வேலை பார்ப்பதாகவும்,** தனது மாமா ஜெயகீர்த்தன் மற்றும் ஐ.டி.ஐ வைத்துள்ள செல்வம் மூலமாக 1–வது எதிரியை தெரியும் என்றும், திருவாரூர் **நீதிமன்றத்தில் உதவியாளர் பணி இருப்பதாகவும், 1–வது எதிரியை தொடர்பு கொள்ளுமாறு தனது மாமா சொன்னதால்** 2018 ஏப்ரல் மாதத்தில் 1–வது எதிரியிடம் பேசிய போது வேலைக்கு ரூ.2,00,000/– செலுத்த வேண்டியிருக்கும் ஆனால் **ரூ.1,00,000/–த்தை அட்வான்ஸாக கொடுக்க வேண்டும் என்று சொன்னதாகவும், தான் ஒரு வாரம் தாமதம் செய்ததாகவும், பிறகு கேட்டதற்கு திருவாரூர் கோர்ட்டிற்கு பணம் வாங்கி விட்டதாகவும், பக்கத்து கோர்ட்டில் இதேபோன்று வேலை இருப்பதாகவும், அங்கு**

வாங்கி தருவதாக சொன்னதால் ஜூலை மாத இரண்டாவது வாரத்தில் ரூ.1,00,000/– பணம் மற்றும் எம்பிளாய்மெண்ட் கார்டு, டிகிரி சான்றிதழ் ஜெராக்ஸ் ஆகியவற்றை கொடுத்ததாகவும், **எப்படி வாங்கி தருவீர்கள் என்று கேட்டதற்கு கோவிந்தலெட்சுமி என்பவர் கோர்ட்டில் வேலை செய்வதாகவும் அவர் 1–வது எதிரியின் வீட்டில் குடியிருந்து வருவதாலும் அவர் மூலமாக வாங்கி தருவதாக 1–வது எதிரி சொன்னதாகவும்**, ஒரு மாதம் கழித்து போன் செய்யும் போது கோவிந்தலெட்சுமியிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று போனை அவரிடம் கொடுத்து கோவிந்தலெட்சுமி கொஞ்சம் டிலே ஆகி கொண்டிருக்கின்றது ஒரு மாதத்தில் கிடைத்து விடும் என்று தன்னிடம் சொன்னதாகவும், ஆனால் வேலை வரவில்லை 1–வது எதிரியின் போன் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது, 1–வது எதிரியின் வீட்டில் தற்போது யாரும் இல்லை என்று சொன்னார்கள் என்றும், புகார் கொடுக்கலாம் என்று இருந்தபோது எஸ்.பி.ஆபிஸிலிருந்து போன் செய்தார்கள் என்றும், தன்னை போல் 83 நபர்கள் ஏமாற்றப்பட்ட விபரம் தெரிய வந்தது என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.59 சுவாமிநாதன் அரசு தரப்பு முதல் விசாரணையில் அரசு தரப்பிற்கு எதிராக பகுதியாக பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் **மாலதி தன்னிடம் அடகு வைக்க வரும்போது அவரது கணவருக்கு கோர்ட்டில் வேலை வாங்குவதற்காக பணம் தேவைப்படுவதாகவும்**, அதனால் தொகை கூடுதலாக கொடுக்க கேட்டார் என்றும், வேலை கிடைத்தவுடன் பணத்தை திரும்ப தருவதாக சொன்னார் என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.60 ராஜா அரசு தரப்பு முதல் விசாரணையில் திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி அம்மா அவர்களுக்கு 11.04.2018ம் தேதி முதல் தனிப்பட்ட காவல் பொறுப்பாளராக பணியில் இருந்த போது 01.03.2019ம் தேதி மதியம் 2.00

மணியளவில் அலுவலக உதவியாளரான 2–வது எதிரி கோவிந்தலெட்சுமி ஒரு பதட்டத்துடன் ஓடி வந்து தான் வெளியே நின்று கொண்டிருந்த போது நீதிபதி அம்மா அவர்களை பார்க்க வேண்டும் என்றும், தான் அம்மா சாப்பிட்டு கொண்டு இருக்கின்றார்கள், சிரஸ்தாரை அழைத்துக் கொண்டு வந்து பாருங்கள் என்று சொன்னதாகவும், **2–வது எதிரி மீது மண்ணெண்ணெய் வாடை வந்தது என்றும்,** சிரஸ்தாரை அழைத்துக் கொண்டு வந்து 2–வது எதிரி வந்தார் என்றும், நீதிபதி அம்மா அறையிலிருந்து வெளியே வந்து பார்த்தார் என்றும், அப்போது **2–வது எதிரி நீதிபதி அம்மாவின் காலில் விழுந்து சக்திவேல் என்பவர் தன்னை டார்ச்சர் செய்வதாக சொல்லி அழுதார் என்றும்**, நீதிபதி அம்மா சிரஸ்தாரை என்னவென்று விசாரியுங்கள் என்று சொன்னார், நீதிமன்ற பணியாளர்கள் 2–வது எதிரியை அழைத்துக் கொண்டு போனார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். **எதனால் மண்ணெண்ணெய் ஊற்றி கொண்டு ஓடி வந்தார் என அ.சா.60 –ஐ விசாரித்த போது கோவிந்தலெட்சுமி நீதிபதியிடம் அலுவலக உதவியாளராக இருப்பதால் வேலை வாங்கி தருவதாக சொல்லி பணம் வாங்கி ஏமாற்றியுள்ளதாகவும், அதனால் மண்ணெண்ணெய் ஊற்றி கொண்டு வந்ததாக சொன்னார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.**

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டதை தான் பார்க்கவில்லை என்றும், அசம்பாவிதம் ஏதுவும் நடந்து விடகூடாது என்பதால் சிரஸ்தாரை அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று சொன்னதாகவும், 1–வது எதிரி மற்றும் சுமார் பத்து நபர்கள் அங்கு இருந்தார்களா என்றால் தான் நின்று கொண்டிருந்த இடத்திற்கு அவர்கள் வரவில்லை என்று பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி அம்மா அவர்களுக்கு பாதுகாப்பாளராக வேலை பார்த்தாக தான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல

என்றும், தன்னுடைய பணி பதிவேடுகளை போலிசார் ஆய்வு செய்தாரா என்றால் அதற்கு தெரியாது என்று மளுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா.61 புகழேந்திரன் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **நீர்பாசன ஏஜென்சி நடத்தி வருவதாகவும்,** ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும் என்றும், தனது மனைவியை ஈரோடு கல்பனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்த போது திருவாரூரை சேர்ந்த சாந்தி என்பவர் சிகிச்சை பெற்றார் அவர் மூலம் 2–வது எதிரியை தெரியும், அவர் மூலம் 1–வது எதிரியை தெரியும், **தனக்கு பணம் தேவைப்படுவதால் சாந்தி மூலம் ரூ.6,50,000/–த்தை கோவிந்தலெட்சுமியிடமிருந்து கடன் வாங்கியதாகவும், பின்னர் 07.02.2018ம் தேதி சக்திவேலிடமிருந்து ரூ.5,00,000/–த்தை அவரது வங்கி கணக்கிலிருந்து கடனாக கொடுத்தார் என்றும், மோடி ஸ்கிம் மூலம் அவருக்கு லோன் கிடைத்ததாக சொன்னார் என்றும், தான் வேறு யாரிடமும் பணம் வாங்கவில்லை என்றும்**, திருவாரூர் எஸ்.பி. அலுவலகத்தில் வைத்து விசாரித்த போதுதான் சக்திவேலும், கோவிந்தலெட்சுமியும் வேலை வாங்கி தருவதாக கூறி பல நபர்களிடம் பணம் வாங்கி உள்ளதாக சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

- **1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி வீட்டில் 2–வது எதிரி குடியிருக்கும் விபரம் தனக்கு தெரியும், சக்திவேல் கோவிந்தலெட்சுமி மூலம் பழக்கமான நபர் அதனால் அவரிடம் பணம் கேட்டேன் என்றும், வங்கி கணக்கு மூலம் 1–வது எதிரி தனக்கு கடன் கொடுத்தார் என்று பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** ரூ.6,50,000/–த்தை 2–வது எதிரியிடம் கடன் வாங்கிய விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும், 1–வது எதிரியிடம் ரூ.5,00,000/–த்தை கடனாக

பெற்று அதை திருப்பி தர தேவையில்லை என்று 1வது எதிரி சொன்னதால் 2–வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா.62 சசி அரசு தரப்பு முதல் விசாரணையில் தனக்கு ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும் என்றும், தான் 1–வது எதிரி வீட்டில் குடியிருந்து வந்ததாகவும், 2–வது எதிரி கோவிந்தலெட்சுமி 3–வது வீட்டில் குடியிருந்தாகவும், தான் 4–வது வீட்டில் குடியிருந்ததாகவும், மொத்தம் ஆறு வீடுகள் உள்ளது என்றும், வழக்கம் போல் சக்திவேல் வீட்டில் பால் வாங்குவதற்காக சென்ற போது **கோர்ட்டில் ஓ.ஏ வேலை இருப்பதாக சக்திவேல் தன்னிடம் சொன்னார் என்றும்**, அதற்கு ரூ.2,00,000/– செலவாகும், முன்பணமாக ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்று சொன்னதாகவும், **தான் 10–வது படித்து விட்டு வீட்டில் இருந்ததால் வேலை போகலாம் என்று நினைத்து** ரூ.1,00,000/–த்தை 2018 பிப்ரவரி மாதத்தில் 1–வது எதிரியின் வீட்டில் வைத்துக் கொடுத்தேன் என்றும், அப்போது 1–வது எதிரி தயார் மற்றும் மனைவி இருந்தார்கள் என்றும், மூன்று மாதம் ஆகியும் வேலை கிடைக்காததால் என்ன ஆயிற்று என கேட்டதற்கு 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்து விட்டதாகவும், அவரிடம் கேட்ட போது 2–வது எதிரி வேலை செய்யும் ஜட்ஜிடம் பணம் கொடுத்துள்ளதாகவும், அவர் சென்னை சென்றுள்ளதாகவும், வந்தவுடன் **ஒரு மாதத்தில் வேலை வந்து விடும் இல்லாவிட்டால் பணத்தை வாங்கி கொடுத்து விடுவதாக 2–வது எதிரி தன்னிடம் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்**. மேலும் **சுமார் பத்து நபர்கள் 1–வது எதிரியின் வீட்டில் வந்து சத்தம் போட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள் என்னவென்று கேட்ட போது வேலைக்கு பணம் கொடுத்தவர்கள் கோர்ட்டிற்கு போவதாக சொன்னதால் தானும் அவர்களுடன் சென்றதாகவும்,** தங்களை பார்த்தவுடன் 2–வது எதிரி மண்ணெண்ணெய் அவர் மீது ஊற்றி கொண்டு ஒரு ரூமிலிருந்து வெளியே ஓடி

வந்தார் என்றும்,கோர்ட்டில் வேலை செய்பவர்களும் அப்போது இருந்தார்கள் என்றும், தான் பயந்து கொண்டு வீட்டிற்கு சென்று விட்டதாகவும், அதன்பிறகு பல நபர்கள் 1–வது எதிரியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்துள்ளார்கள், தான் சரிபடாது என்று வீட்டை காலி செய்து கொண்டு சென்று விட்டதாகவும், போலிசார் டி.எஸ்.பி. ஆபீஸிற்கு வருமாறு சொன்னதால் நடந்த விபரங்களை போலிசாரிடம் சொன்னேன் என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் தனக்கு வேலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான் என்றும், நீதிமன்றத்திற்கு பத்து நபர்கள் வந்தார்கள் ஆனால் அவர்கள் பெயர் தெரியாது என்றும், 1–வது எதிரியின் சக்திவேலும் வந்தார் என்றும், எங்களை பார்த்தவுடன் 2–வது எதிரி ஒரு ரூமிலிருந்து மண்ணெய்யை ஊற்றி கொண்டு பதட்டத்துடன் ஓடி வந்தார் என்றும், தனக்கு பயமாக இருந்தது என்றும், **பணம் கொடுத்தது தவறு என்பதால் பயந்து கொண்டு மேற்கொண்டு என்ன நடந்தது என்று நான் கேட்கவில்லை என்று பதில் அளித்துள்ளார்**. 1–வது எதிரி யார் யாரிடம் பணம் பெற்று 2–வது எதிரியிடம் கொடுத்துள்ளார் என்ற விபரத்தையும் தொலைபேசி நம்பரையும் குறிப்பிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான் என்று பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** தான் முதல் விசாரணையில் சொன்ன அனைத்து சங்கதிகளையும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று பதிலளித்துள்ளார்.

அ.சா.63 சாந்தி அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **எல்.ஐ.சி–யில் 13–ஆண்டுகள் திருத்துறைப்பூண்டியில் வேலை பார்த்ததாகவும்,** தனது அண்ணன் அய்யப்பன் மூலமாக 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும், அவர் 2015–

2016 ஆண்டு வாக்கில் மிகவும் சிரமமாக இருப்பதால் ரூ.2,00,000/– கடனாக பணம் கேட்டார் என்றும், தான் புகழேந்திரன் என்பவரிடம் வாங்கி கொள்ளுங்கள் என்று சொல்லி அவரது போன் நம்பரை 2–வது எதிரிக்கு கொடுத்ததாக அ.சா.63 சாட்சியம் அளித்துள்ளார். மேலும், புகழேந்திரனும் 2–வது எதிரியும் அறிமுகமாகி 2–வது எதிரியின் அத்தான் ராஜசேகர் புகழேந்திரனுக்கு பணம் கொடுத்ததாக புகழேந்திரன் தன்னிடம் சொன்னார் அ.சா.63 சாட்சியம் அளித்துள்ளார். **போலிசார் 2018 ஆம் ஆண்டு 2–வது எதிரியை தனது வீட்டிற்கு அழைத்து வந்து 2–வது எதிரி தனக்கு பணம் கொடுத்துள்ளரா என கேட்டதாகவும், அதற்கு தான் இரண்டு வருடமாக அவருடன் பேச்சுவார்த்தையில் இல்லை என்று சொன்னதாகவும், தேனியில் உள்ள ஒரு நபருக்கு தான் பணம் கொடுத்துள்ளார் என்று சொன்னதாகவும்,** பின்னர் டி.எஸ்.பி. ஆபிஸிலிருந்து 2–வது எதிரி வேலை வாங்கி தருவதாக பணம் வாங்கி என்னிடம் கொடுத்துள்ளாரா என கேட்பதற்காக அழைத்து வந்ததாக போலிசார் மூலம் தெரிந்துக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** புகழேந்திரன் மற்றும் சக்திவேல் கேட்டுக் கொண்டதற்கு இணங்க போலிசார் விசாரணையில் சொல்லாத சங்கதிகளை 2–வது எதிரியை தொடர்புபடுத்தி புதிதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.64 ரமேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **தஞ்சாவூரில் இரயில்வே கேட்டீனில் வேலை செய்வதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும்,** 13.04.2019 ஆம் தேதி திருவாரூர் டி.சி.பி. அலுவகத்திற்கு வந்திருந்த போது **2–வது எதிரி கோவிந்தலெட்சுமியை போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் எனவும், கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி பணம் வாங்கிய விபரத்தை அவர் போலிசாரிடம் சொன்னதாகவும்,** அதனை போலிசார் பதிவு

செய்துக் கொண்டு கையெழுத்து வாங்கினார்கள், அதில் தானும் தன்னுடைய நண்பர் கலையரசன் என்பவரும் கையெழுத்து போட்டோம் என்றும், **2–வது எதிரியின் வீட்டிற்கு அவரை அழைத்து சென்று அப்போது காலை 10.30 மணியிருக்கும், அங்கு அவரது வீட்டிலிருந்து ரெசியும் மற்றும் டையரி ஆகியவற்றை அவரிடமிருந்து போலிசார் கைப்பற்றினார்கள் என்றும்,** அதற்கு சாட்சியாக தானும், தனது நண்பர் கலையரசனும் கையெழுத்து போட்டோம் என்றும், கைப்பற்றியதற்காக தயார் செய்யப்பட்ட மகசர் தான் தன்னிடம் காட்டப்படுவது என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர், 7 நபர்களின் ரெசியூம், அதில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள், பெயர் விவரங்கள் அடங்கிய சீட்டு மற்றும் டையரி ஆகியவை அரசு தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வேலை வாங்கி தருவதற்கு பணம் வாங்கி இருப்பதாக 2–வது எதிரி சொன்னார் எனவும், அது சம்பந்தமாக ஆவணங்கள் இருப்பதாகவும், அதற்காக போலிசார் அங்கு அழைத்து சென்றார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரயையில் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டதாகவும்,** 2–வது எதிரியின் வீட்டிற்கு அருகில் தான் தனது நண்பர் வீடு இருக்கிறது என்றும், 2வது எதிரியிடமிருந்து ஆவணங்களை கைப்பற்றும் போது இன்ஸ்பெக்டர் மற்றும் போலிசார்கள் இருந்தார்கள் என்றும், வெளி நபர்கள் யாரும் உள்ளே இல்லை எனவும் எதிரி சொன்ன விஷயங்களை டைப் செய்து அதன் பின்னர் தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2–வது எதிரி குடியிருந்த வீட்டிற்கு தான் போலிசாரிடம் போனதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல என்றும், 2–வது எதிரி அந்த வீட்டில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல என்றும், 2–வது எதிரி நாங்கள் போன பிறகு தான் வந்தார் என்றும், 2–வது எதிரி பதட்டமான மனநிலையில் இருந்தாரா என்றால் பதில் சொல்லிக் கொண்டு இருந்தார் என்றும், தான் எதற்காக டி.சி.பி.

அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் தனது நண்பர் நவீன் என்பவர் போன் செய்ததால் அங்கு சென்றேன் என்றும், திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையின் உதவி தனக்கு தேவைப்பட்டதால் 2–வது எதிரி தனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், சான்றுப் பொருட்களை எடுத்து ஆஜர் செய்ததாகவும், கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.65 அரவிந்த்குமார் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் கும்பகோணத்தில் **தனியார் கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும்,** தனக்கு சாட்சி லதா மற்றும் ஆஜர் 1–வது எதிரியை தெரியும், **லதாவின் மகனுக்கு சக்திவேல் மூலமாக கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்ன விபரம் லதா மூலமாக தங்களுக்கு தெரியவந்தது என்றும்**, விசாரித்த போது **சக்திவேல் நேர்மையானவர் அவரிடம் ரூ2,00,000/– பணம் கொடுத்தால் வேலை வாங்கி தந்து விடுவார் முன்பணமாக ரூ.1,00,000/–த்தை கொடுக்க வேண்டுமென லதா தங்களிடம் சொன்னார் என்றும்**, பின்னர் 2018 ஜனவரி மாதம் சக்திவேல் வீட்டிற்கு தனது அக்கா ஜெயந்தி தாத்தா ராஜகோபால் மற்றும் தானும் சென்று கோர்ட்டில் வேலை வாங்குவதற்காக ரூ.1,00,000/–த்தை சக்திவேலிடம் கொடுத்ததாகவும், அவரின் மனைவி மற்றும் குழந்தைகள் அப்போது இருந்தார்கள் என்றும், அரசு வேலையில் இல்லாத நிலையில் எப்படி இதை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு கோர்ட்டில் வேலை பார்க்கும் நபர் குடியிருப்பதாகவும், அவர் மூலமாக இதை செய்வதாகவும் சொன்னார் என்றும், **பணம் கொடுத்ததற்கு அத்தாட்சி கொடுங்கள் என்று கேட்டதற்கு லதா பணம் கொடுத்துள்ளார், நம்பிக்கையில் கொடுங்கள் என்று சொன்னார் என்றும்**, மேலும் சக்திவேல் தன்னிடம் என்ன வேலை பார்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு சர்வீஸ் சென்டரில் வேலை செய்வதாக அ.சா.65 சொன்னதற்கு இந்த சம்பளத்தில்

அடுத்த நிலைக்கு வரமுடியும் என்றும், இதுபோன்று ஏதாவது செய்துதான் அடுத்த நிலைக்கு வர முடியும் என்றும், **அரசாங்க வேலை என்றால் நிறைய நடைமுறைகள் இருக்குமோ என்று கேட்டதற்கு அதை சரிகட்ட தான் இந்த பணம் என்று சொன்னார் என்றும்**, மூன்று மாதத்திற்குள் வேலை வந்து விடும் நம்பிக்கையாக இருங்கள் என 1–வது எதிரி சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் பல முறை கேட்டும் சரியாக பதில் அளிக்காமல் சுவிட்ச் ஆஃப் செய்துவிட்டார், பின்னர் எஸ்.பி. ஆபிஸிலிருந்து போன் செய்தார்கள், பின்னர் பணம் கொடுத்து ஏமாந்த விபரம் தெரிந்து கொண்டேன் என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரயையில்** தனது அப்பா மூலமாக லதாவை தெரியும் என்றும், சக்திவேலுக்கு லதா என்பவர் கெரண்டி கொடுத்தார் என்றும், அதனால் நம்பிக்கையாக இருந்தேன் என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி வீட்டில் குடியிருப்பதாக சொன்ன பொய்யான தகவலை நம்பி தானும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.66 ரமேஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் மன்னார்குடியில் வசித்து **ஸ்டூடியோ வைத்துள்ளேன் என்றும்**, 2008 –2022 செப்டம்பர் மாதம் வரை சன்ரைஸ் என்ற பெயரில் ஸ்டூடியோ நடத்தி வந்தேன் என்றும், கூத்தாநல்லூரில் ராஜா ஸ்டூடியோ நடத்தி வந்த **ராஜமகேந்திரன் மூலமாக 1–வது எதிரி சக்திவேலை தெரியும்** என்றும், கோவிந்தலெட்சுமி **மண்ணெண்ணெய்யை ஊற்றி கொண்ட நிகழ்வு நடந்த பின்னர் தெரியும்** என்றும், **1–வது எதிரி கோர்ட்டில் வேலை உள்ளது ஒரு வேலை வாங்க ரூ.2,00,000/– ஆகும்** என்றும், **தங்களது சான்றிதழ்களையும் அட்வான்ஸ் பணத்தையும் கொடுத்தால் 2018 ஜனவரி 30க்குள் வேலை வாங்கி விடலாம் என**

ஜனவரி 20 வாக்கில் தன்னிடம் 1–வது எதிரி சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். குடும்ப நல நீதிமன்றம் வருகிறது என்றும், 1–வது எதிரி சொன்னதாக சொல்லியுள்ளார், பின்னர் அ.சா.66 தனக்கு வேண்டிய நபர்களான சங்கீதா, அப்பாஸ், சிவரஞ்ஜனி, முத்துபாண்டி ஆகியோர்களை அழைத்துக் கொண்டு 1–வது எதிரியின் வீட்டில் வைத்து தலா ரூ.1,00,000/– வீதம் அட்வான்ஸ் தொகை கொடுத்ததாகவும், மேலும் எனக்கு தெரிந்த முகில், கார்த்திகா, ஐஸ்வர்யா, ராதிகா, வீரராஜன், ராகினி, வெங்கடேஷ், ஜாய்மார்டீன், சாந்தினிமெடோனா, உமாமகேஸ்வரி, ஐய்யப்பன் ஆகியோர் 1–வது எதிரியின் வீட்டிற்கு வந்து நேரில் பணம் கொடுத்தார்கள் 10, 15 நாட்களில் வேலை கிடைத்து விடும் என்று சொன்னதாகவும், ஒன்பது மாதங்கள் ஆகியும் அவ்வாறு நடக்கவில்லை என்றும், பின்னர் **1–வது எதிரியின் வீட்டில் குடியிருக்கும் 2–வது எதிரி கோவிந்தலெட்சுமி அங்கு வந்தார் என்றும், கோவிந்தலெட்சுமியை கேட்டுக் கொள்ளுங்கள் என்று 1–வது எதிரி சொன்னதாகவும் அவரிடம் கேட்டபோது வேலை சம்பந்தமாக மேடம் சென்னை போய் உள்ளார்கள் வேலை கிடைத்து விடும் என்று எதிரி கோவிந்தலெட்சுமி தங்களுக்கு உறுதி அளித்ததாகவும்**, பின்னர் ஒரு வாரம் கழித்து சக்திவேல் வீட்டிற்கு சென்ற போது கோவிந்தலெட்சுமியை அழைத்து வந்தார், கோவிந்தலெட்சுமி கோர்ட்டிற்கு வந்தார், அவர் பின்னாலேயே 1–வது எதிரி வந்தார், தாங்களும் கோர்ட்டிற்கு வந்தோம், அப்போது கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணெய்யை ஊற்றிக் கொண்டதாக சுரேஷ் சொன்னார் என்றும், அ.சா.66 உடன் ராதிகா, அர்ஜூன், ஐஸ்வர்யா மாமனார், கார்த்திகா அப்பா பாலகிருஷ்ணன் ஆகியோரும் இருந்தார்கள் என்றும், 2019 மார்ச் மாதத்தில் மண்ணெண்ணெய்யை ஊற்றி கொண்ட நிகழ்வு நடந்தது என்றும், அதற்கு முன்பே 16.03.2019 ம் தேதியில் பணத்திற்கு உத்தரவாதம் தருவதாக 15 பேருக்கு 1–வது எதிரி சக்திவேல் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், அந்த பத்திரங்கள் தன்னிடம் தான் உள்ளது என்றும், எங்களை போல் 83 நபர்கள் ஏமாந்த விபரம் தெரிய வந்தது என்றும் சாட்சியம்

அளித்துள்ளார். மேலும், **1–வது எதிரி சக்திவேல் எழுதி கொடுத்த 16.03.20219 தேதியிட்ட ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று எதிரி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது, மேற்படி ஆட்சேபணை ஏற்புடையதாக இல்லை, எதிரியின் கையெழுத்தா இல்லையா என்பது விசாரணைக்கு பின்னர் தான் தெரிய வரும் என்பதால் ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டு அந்த ஆவணம் அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்ட படி 1–வது எதிரி பணத்தை தரவில்லை என்பதால் திருவாரூர் நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** ராஜமகேந்திரன் தொழீல் ரீதியாக 30 வருட காலமாக தனக்கு நண்பர் என்றும், அவர் ராஜா ஸ்டூடியோ என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார் என்றும், அவர் சொல்லிதான 1–வது எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் **1–வது எதிரி நீதிமன்றத்தில் வேலை வாங்கி கொடுப்பார் தேவைப்படும் நபர்களுக்கு வாங்கி தருவார் என்று சொன்னார் என பதில் அளித்துள்ளார்.** 15 நபர்களுக்கு என் மூலமாக தான் 1–வது எதிரியை தெரியும் என்றால் சரிதான் என்றும், வேலை கிடைக்குமா என விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் 1–வது எதிரியை உயர் அதிகாரிகளை தனக்கு தெரியும் என்றும், **தான் வேலை வாங்கி தந்து விடுவதாகவும், யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொன்னதாகவும் பதில் அளித்துள்ளார்.** இதுவரை 20 முறை 1–வது எதிரியின் வீட்டிற்கு பணம் மற்றும் வேலை சம்பந்தமாக போய் உள்ளேன் என்றும், 15 நபர்களும் மாறி மாறி சிலமுறை சென்றுள்ளார்கள் என்றும், பணம் கொடுத்த நபர்களை ஒன்று சேர்ப்பதற்காக ஞாயிற்று கிழமைகளில் செல்வேன் என்றும், ஆனந்தன், பாலகிருஷ்ணன் ஆகியோர் கோவிந்தலெட்சுமியிடம் பேசியுள்ளார்கள் என்றும், அ.சா.ஆ.16 ஒப்பந்த ஆவணத்தை 1–வது எதிரிதான் எழுதி

கொடுத்தார் என்றும், மேற்படி ஆவணத்தை தான் தயார் செய்து கையெழுத்து போடவில்லை என்றும், 1–வது எதிரி வீட்டிற்கு சென்று கேட்ட போது 2–வது எதிரி கோவிந்தலெட்சுமி 1–வது எதிரி வீட்டிற்கு வந்து மேடம் வெளியே போய்விட்டார்கள் வந்தவுடன் வேலை ரெடியாகி விடும் என்ற சொன்ன விபரம் 1–வது எதிரி கேட்டு கொண்டதன் படி தான் சொன்னேன் என்றால் சரியல்ல என்றும், **2–வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணம் கேட்டு சென்ற போது பணத்தை என்னிடம் கொடுக்கவில்லை அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள் என்றும் பதிலளித்துள்ளார்.**

- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2–வது எதிரியை தொடர்புபடுத்தி சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் சாட்சியங்கள் சொன்னேன் என்றால் சரியல்ல என்றும், மண்ணெண்ணெய்யை ஊற்றி கொண்ட விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல என்றும், **1–வது எதிரி கூறிய ஆசை வார்த்தைகளுக்காக 2–வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்**.

அ.சா.67 மகாலெட்சுமி அரசு தரப்பு முதல் விசாரணையில் கடந்த 08.04.2019ம் தேதி தான் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதியம் 11.00மணிக்கு திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நடப்பு மனு எண். G35208/2019 Date: 28.03.2019, மாவட்ட குற்றப்பிரிவு நடப்பு மனு எண். 108/டி.சி.பி. டி.பி.ஆர்/2019 நாள் 29.03.2019 மனுவினை ஆய்வாளர் உத்தரவுப்படி நான் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண். 01/2019 சட்டப்பிரிவு 120(பி), 406, 420 இ.த.ச.–வாக வழக்கு பதிவு செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படுவது தன்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை தான் என்றும், பின்னர்

08.04.2019ம் தேதி 1–வது எதிரியை அவரது வீட்டு வாசலில் வைத்து குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், எதிரி சக்திவேல் தன்னை வீட்டிற்கு அழைத்து சென்றால் சாட்சிகள் சுரேஷ், தினேஷ், தாசன், தர்மராஜ், அழகர் மற்றும் மன்னார்குடி ரமேஷ் ஆகியோருக்கு தான் வேலை வாங்கி தருவதாக பணம் பெற்றுக்கொண்டதற்கு கொடுத்து கையெழுத்திட்டு கொடுத்து ரூ.20/– மதிப்புள்ள பத்திர நகல்களையும், 83 பேரிடம் பணம் பெற்ற விபரத்தையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. கைப்பற்றுதல் மகசர் மூலம் எதிரி சக்திவேல் வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.20/– முத்திரை தாளில் எழுதப்பட்ட ஆறு ஆவணங்களின் நகல்கள் மற்றும் பணம் பெற்றுக் கொண்டதற்கான விபரங்கள் அடங்கிய கையால் எழுதப்பட்ட தாள்களின் நகல்கள் அரசு தரப்பு ஆவண்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியை 08.04.2019ம் தேதி இரவு 7.00 மணிக்கு விளமல் பஸ் ஸ்டாபில் வைத்து குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு இரண்டு எதிரிகளையும் உட்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** எதன் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிககை பதிவு செய்தேன் என்றால் வேலை வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றி இருப்பது தெரியவந்ததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் எதிரி வீட்டை சோதனை செய்யவில்லை, 1–வது எதிரி தான் அழைத்து போய் ஆவணங்களை எடுத்து ஆஜர் என்றும், புகாரானது 28.03.2019ம் தேதி பெறப்பட்டுள்ள நிலையில் 08.04.2019ம் தேதி அவசரமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால் **முதல் விசாரணைக்கு பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு**

செய்யப்பட்டது என்றும், 09.04.2019ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற விஜிலென்ஸ் பிரிவில் 1–வது எதிரி ஆவணங்களை சமர்பிக்க வேண்டி இருந்த நிலையில் அவரை செல்ல விடாமல் தடுக்கும் நிலையில் 1–வது எதிரியை கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் அவரை அனுப்பினால் உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்பதால் 1–வது எதிரியை கைது செய்தேன் என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரயையில்** புகாரில் 2–வது எதிரி வேலை வாங்கி தருவதாகவோ 2–வது எதிரி பணம் பெற்றதாகவோ, 2–வது எதிரியை அடையாளப்படுத்தி புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

அ.சா.68 கார்த்திகா அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் **பி.பி.ஏ. படித்துள்ளதாகவும்,** தனது தகப்பனாருக்கு தெரிந்த ரமேஷ் மூலமாக கோர்ட்டில் வேலை இருப்பதாக தெரியவந்தது என்றும், அதற்கு ரூ.2,00,000/– செலவாகும் என்றும், முன்பணமாக ரூ.1,00,000/–கட்ட வேண்டும் என்றும், வேலை உடனே கிடைத்து விடும் என்றும் சொன்னதால் தன்னுடைய போட்டோ, சர்டிபிகேட், சுய விபரங்கள் அடங்கிய படிவம் மற்றும் பணம் ரூ.1,00,000/– த்தை ஆகியவற்றை திருவாரூரில் துர்காலயா ரோட்டில் சக்திவேல் என்பவர் வீட்டில் கொடுக்க சொல்லி தான தனது அப்பா, ரமேஷ் ஆகியோர் 2018 3–ஆம் மாதத்தில் வந்து கொடுத்தோம் என்றும், **சாட்சி நீதிமன்றத்தில் எதிரி கூண்டில் இருக்கும் எதிரி சக்திவேலை அடையாளம் காட்டினார்.** வேலை இதுநாள் வரை கிடைக்கவில்லை என புகார் கொடுக்கலாம் என இருந்தபோது சுரேஷ் என்பவர் ஏற்கனவே புகார் அளித்து விட்டதால் தங்களை சாட்சியாக இருக்குமாறு சொன்னார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** எதிரி சக்திவேல்

நீதிமன்றத்தில் வேலை செய்யாத நிலையில் எப்படி எனக்கு நீதிமன்ற வேலை கிடைக்கும் என நம்பினேன் என்றால் அவர் கோவிலில் அறங்காவலராக இருப்பதாலும், அவருக்கு தெரிந்த நபர்களும் வேலை வாங்கி தருவதாகவும் சொன்னதாக ரமேஷ் என்பவர் சொன்னார் என பதில் அளித்துள்ளார்.

அ.சா.69 துர்க்கா அரசு தரப்பு முதல் விசாரணையில் தற்போது திருத்துறைப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்த போது குற்ற எண், 01/2019 சட்டப்பிரிவுகள் 120(பி), 406, 420 இ.த.ச வின் படி வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இரண்டு நாள் போலீஸ் காவலில் எடுத்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ரமேஷ், மற்றும் கலையரசன் முன்னிலையில் பதிவு செய்து அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2வது எதிரியின் வீட்டிற்கு 13.04.2019ம் தேதி 10.30 மணிக்கு சென்றபோது, 2வது எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கும்பகோணம் – மன்னார்குடி என தலையிடப்பட்ட 34 + 22 நபர்கள் அடங்கிய பணம் கொடுத்தவர்களின் இரண்டு பக்க விபர குறிப்பு அசல் மற்றும் ராஜேஷ்குமார், மார்கிரேட்சாந்தினி, சிவரஞ்சினி, முத்துப்பாண்டி, சுரேஷ், தாசன், தர்மராஜ் ஆகியேர்களது போட்டோவுடன் கூடிய ரெஸ்யூம் மற்றும் சான்றிதழ் நகல்கள் அடங்கிய ஆவணங்கள் மற்றும் பிள்ளையார் படம் போட்ட 2017ம் வருடத்திய டிசம்பர் 24 மார்கழி 9 என்ற பக்கத்தில் 2வது எதிரி தன் கைப்பட எழுதிய 12 நபர்களின் பெயர்கள் ஆகியவற்றை சாட்சிகள் ரமேஷ் மற்றும் கலையரசன் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன்** என்றும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றுதல் மகசர் மூலம் அரசு தரப்பு

சாண்றாவணங்களாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்து. பின்னர் மகசர் சாட்சிகளான ரமேஷ் மற்றும் கலையரசன் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகள் இளவழகன், நவீலன், லதா, அரவிந்த்குமார், சண்முகசுந்தரம், தேவி பாலா, ஜெயகீதா, காமாட்சி, சுரேஷ், சாய்விக்னேஷ், ஐய்யப்பன், குமரப்பன், ஆனந்த்பாபு, கலியமூர்த்தி, சண்முகபிரியா, ஆரோக்கியராஜ், குணசீலன், ஜெயசங்கர், யோகலெட்சுமி, ஆனந்தநாயகி, பாலசுந்தர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்து பின்னர், பணி மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்து விட்டு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 2–வது எதிரியை விசாரித்த போது அவர் என்ன வேலையில் இருந்தார் என்றால் திருவாரூர் மாவட்ட நீதிபதியிடம் அலுவலக உதவியாளராக இருந்துள்ளார் என்றும், 1–வது எதிரி உயர்நீதிமன்றத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியும் என்றும், அவரை சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்காமல் எதிரியாக சேர்த்தது தவறு என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.
- **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரியுடைய வீட்டில் 2–வது எதிரி வாடகைக்கு வசித்து வந்ததாக கூறுவதற்கு ஆவணங்கள் எதுவும் கைப்பற்றி நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், **2–வது எதிரி வீட்டில் கைப்பற்றியதாக சொல்லும் ஆவணங்களை மறைத்தோ ஒழித்தோ வைக்கப்பட்டு இல்லை என்றால் சரிதான் என்றும் 2–வது எதிரி அவரது வீட்டில் வைத்திருப்பதாக சொல்லியுள்ளார் மறைத்து வைத்துள்ளதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் என்று பதில் அளித்துள்ளார்.** அ.சா.ஆ.15 2–வது எதிரியால் எழுதப்பட்டதாக சொல்லியுள்ள விபரம் குறித்து 2–வது எதிரியிடமிருந்து மாதிரி கையொப்பம் பெற்று பரிசோதனைக்கு அனுப்பி ஊர்ஜிதம் செய்யப்பட்டதா என்றால்

கையெழுத்து நிபுணருக்கு அனுப்பப்படவில்லை என்றும், அதில் உள்ள விபரங்கள் மூன்றாம் நபர் மூலம் எழுத வைத்து தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல என்று பதில் அளித்துள்ளார்.

அ.சா.70 திருமதி. ராணி அரசு தரப்பு முதல் விசாரணையில் தான் தற்போது நாகப்பட்டிணம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளராக இருந்த போது குற்ற எண். 01/2019 சட்டப்பிரிவுகள் 120(பி), 406, 420 இ.த.ச வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு ஏற்கனவே உதவி ஆய்வாளர் மகாலெட்சுமி மற்றும் ஆய்வாளர் துர்க்கா கைப்பற்றிய தடயங்களை அவர்கள் விசாரித்த சாட்சியங்களை மீண்டும் விசாரித்தும், அவரிடம் சொன்ன வாக்குமூலத்தையே தன்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் முகில், ஐஸ்வர்யா, கார்த்திகா, உமாமகேஷ்வரி, ராதிகா, அப்பாஸ், வீரராஜன், ஐயப்பன், முத்துப்பாண்டி, சிவரஞ்சன், மார்கிரெட் சாந்தினி, ஜெய் மார்டின், அர்ஜூனன், சுகபிரம்மம், வேல்முருகன், புஷ்பவள்ளி, செந்தமிழ் அழகன், ராமசந்திரன், பிரேம்குமார், ராஜன், ரமேஷ், சங்கீதா, ராகினி, பக்கிரிசாமி, மகேஷ்வரி, தினேஷ், சிவதியாகராஜன், செந்தில், அகிலரசன், பாலகுமார், ராஜேஷ்குமார், பரமேஸ்வரி, ராஜா, சுவாமிநாதன், சசி, சாந்தி, புகேழந்திரன் உதவி ஆய்வாளர் மகாலெட்சுமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

- **1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** அ.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிகளின் கையெழுத்திற்கு கீழாக ஆங்கிலத்தில் ஒரு கையெழுத்து உள்ளது என்றால் சரிதான் என்றும், மேற்படி கையெழுத்தானது எதிரியுடையதா என்பதை உறுதிபடுத்த தான் மாதிரி கையொப்பம் எதுவும்

எதிரிகளிடமிருந்து பெறவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 வரை உள்ள ஆவணங்களில் கண்ட ஆங்கிலத்தில் உள்ள கையெழுத்து 1–வது எதிரியின் கையெழுத்து என்பதை உறுதிபடுத்த கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், அந்த கையெழுத்து 1–வது எதிரியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார். மேலும் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 ஆகிய ஆவணங்கள் எழுதப்பட்ட முத்திரை தாளானது 01.03.2019ம் தேதி வாங்கப்பட்டதாகவும், அ.சா.ஆ.3 எழுதப்பட்ட முத்திரை தாளானது 04.02.2019ம் தேதி வாங்கப்பட்டதாகவும், ஒவ்வொரு ஆவணத்திலும் அது எழுதப்பட்டுள்ள தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த ஆவணங்களில் உள்ள கை விரல் ரேகை யாருடைய ரேகை என்பதை குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார். அ.சா.30 தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளவாறு போனில் பேசியதற்கான அழைப்பு விபரங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், அ.சா.36, அ.சா.52 1–வது எதிரியுடன் தொலைபேசியில் பேசியதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்.

◆ **2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** 1–வது எதிரி, 2–வது எதிரி மூலம் வேலை வாங்கி தருவதாக தான் விசாரித்த சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றும், 2–வது எதிரியை பற்றி கேள்விபட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான் என்றும், 2–வது எதிரிக்கும் புகழேந்திரனுக்கும் இடையே பண பரிவர்த்தனை நடைபெற்றதாக வங்கி கணக்கு விபரங்கள் எதுவும் கைப்பற்றி தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், 2–வது எதிரிக்கு எதிராக தான் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிக்கையானது தவறானது மற்றும் முகாந்திரம் அற்றது என்றால்

சரியல்ல என்றும் பதில் அளித்துள்ளார்.

மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து சாட்சிகள் பணம் கொடுத்தற்கான விபரங்கள்

வரிசை எண்.	அரசு தரப்பு சாட்சிகள்	பெயர்	கேட்ட தொகை	முன்பணம் கொடுக்கப்பட்டது	தொகை திருப்பி செலுத்தப்பட்டது
1.	அ.சா.1	சுரேஷ்	ரூ.2,50,000/-	ரூ.1,00,000/-	---
2.	அ.சா.2	தாசன்	ரூ.2,50,000/-	ரூ.1,00,000/-	---
3.	அ.சா.3	அழகர்	ரூ.2,50,000/-	ரூ.1,00,000/-	---
4.	அ.சா.4	தர்மராஜ்	ரூ.2,50,000/-	ரூ.1,00,000/-	---
5.	அ.சா.5	சுரேஷ்	---	ரூ.1,00,000/-	---
6.	அ.சா.6	சக்திவேல்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	ரூ.1,00,000/-
7.	அ.சா.7	தினேஷ்	---	ரூ.1,00,000/-	---
8.	அ.சா.8	ராஜேந்திரன்	ரூ.1,00,000/-	ரூ.40,000/-	–––
9.	அ.சா.10	இளவழகன்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	–––
10.	அ.சா.11	தேவி பாலா	ரூ.2,00,000/-	ரூ.1,50,000/-	–––
11.	அ.சா.12	ஜெயகீதா			
12.	அ.சா.13	நகுலன்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	–––
13.	அ.சா.14	காமாட்சி			
14	அ.சா.16	லதா	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	–––
15.	அ.சா.17	சண்முகசுந்தரம்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	––
16.	அ.சா.18	சாய் விக்னேஷ்	ரூ.2,00,000/-	03.4.2018-ரூ.50,000/- 04.04.2018- ரூ.50,000/-	–––
17.	அ.சா.19	ஐயப்பன்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	
18.	அ.சா.20	குமரப்பன்	ரூ.2,00,000/-	11.01.2018- ரூ.50,000/- 12.01.2018- ரூ.50,000/-	ரூ.50,000/-
19	அ.சா.21	கலியமூர்த்தி	---	ரூ.1,00,000/-	–––
20	அ.சா.22	சண்முகபிரியா	---	ரூ.1,00,000/-	–––
21	அ.சா.23	அசோக்ராஜ்	---	ரூ.1,00,000/-	–––
22	அ.சா.24	குணசீலன்	---	ரூ.1,00,000/-	–––
23	அ.சா.25	யோகலெட்சுமி	---	ரூ.1,00,000/-	பணம் திருப்பி

					தரப்பட்டது
24	அ.சா.26	அனந்தநாயகி	---	ரூ.1,00,000/-	---
25	அ.சா.27	பாலசந்தர்	---	ரூ.1,00,000/-	ரூ.1,00,000/-
26	அ.சா.28	ஆர்.முகில்	---	ரூ.1,00,000/-	---
27	அ.சா.29	ஐஸ்வர்யா	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
28	அ.சா.30	ராதிகா	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
29	அ.சா.31	அய்யப்பன்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
30	அ.சா.32	உமாமகேஸ்வரி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
31	அ.சா.33	அப்பாஸ்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
32	அ.சா.34	முத்துப்பாண்டி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
33	அ.சா.35	சிவரஞ்ஜனி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
34	அ.சா.36	ஜெயசங்கர்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
35	அ.சா.37	வீரராஜன் மற்றும் ஒருவர்	ரூ.2,00,000/-	ரூ.2,00,000/-	---
36	அ.சா.38	ஜாய்மார்ட்டின்	--	ரூ.1,00,000/-	---
37	அ.சா.39	அர்ஜுனன்	---	ரூ.1,00,000/-	---
38	அ.சா.40	ஆனந்த்பாபு	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
39	அ.சா.41	சுகபிரம்மம்	ரூ.2,60,000/-	ரூ.1,00,000/-	---
40	அ.சா.42	வேல்முருகன்	--	ரூ.1,00,000/-	---
41	அ.சா.43	புஷ்பவள்ளி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
42	அ.சா.44	பிரேம்குமார்	---	ரூ.1,00,000/-	---
43	அ.சா.45	ராமசந்திரன்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
44	அ.சா.46	மார்கிரேட் சாந்தி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
45	அ.சா.47	ராஜன்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
46	அ.சா.48	சங்கீதா	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
47.	அ.சா.49	ராகினி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
48	அ.சா.50	பக்கரிசாமி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
49	அ.சா.51	மகேஸ்வரி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
50	அ.சா.52	தினேஷ்	ரூ.3,00,000/-	ரூ.1,00,000/-	---
51	அ.சா.53	சிவதியாகராஜன் மற்றும் இருவர்	ரூ.2,00,000/-	ரூ.3,00,000/-	---
52	அ.சா.54	செந்தில்	--	ரூ.1,00,000/-	---
53	அ.சா.55	அகிலரசன்	---	ரூ.1,00,000/-	---

54	அ.சா.56	பாலகுமார்	---	ரூ.1,00,000/-	---
55	அ.சா.57	பரமேஸ்வரி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
56	அ.சா.58	ராஜேஸ்குமார்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
57	அ.சா.62	சசி	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
58	அ.சா.65	அரவிந்த்குமார்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
59	அ.சா.66	ரமேஷ்	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---
60	அ.சா.68	கார்த்திகா	ரூ.2,00,000/-	ரூ.1,00,000/-	---

நீதிமன்றத்தில் தீர்வு காணப்பட வேண்டிய சங்கதிகள்:

1) புகார் வாக்குமூலத்தின் சுருக்கம்:

அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தில் முதல்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் அவரது தம்பிகள் மற்றும் நண்பர்கள் ஆகிய ஏழு பேரும் 13.02.2018ம் தேதி இரவு 8.30 மணிக்கு சக்திவேல் வீட்டிற்கு சென்று அவரிடம் நீதிமன்ற அரசு வேலைக்கு ரூ.7,00,000/– பணத்தையும் பயோ டேட்டா, சான்றிதழ்களையும் கொடுத்ததாகவும், 2019–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகை முடிந்து சக்திவேலிடம் சென்று நாங்கள் ஏழு பேரும் பணம் கொடுத்து இவ்வளவு நாள் ஆகிவிட்டது, வேலை வாங்கித் தராமல் தொடர்ந்து ஏமாற்றி வருகிறீர்கள், நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி கொடுத்து விடுங்கள் எனக் கேட்டபோது, அதற்கு சக்திவேல் நீங்கள் கொடுத்த பணத்தையெல்லாம் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்க்கும் கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துள்ளேன் என சொல்லி நீங்களே அவரிடம் பேசுங்கள் என அ.சா.1ன் செல்போனில் இருந்து கால் செய்து அவரிடம் பேசி அ.சா.1யிடம் கொடுத்தார், அப்பொழுது கோவிந்தலெட்சுமி பேசுவதாகவும் தான் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்ப்பதாகவும் நீங்கள் கொடுத்த பணம் என்னிடம் வந்து விட்டது, உங்கள் அனைவருக்கும் 28.02.2019–க்குள் வேலைக்கான உத்தரவு வந்து விடும் என கூறியுள்ளதாகவும், அவ்வாறு வேலைக்கான உத்தரவு வரவில்லை என்றால் 04.03.2019–க்குள் அனைவருக்கும் நானே பணத்தை கொடுத்து விடுகிறேன் என கூறினார்,

சக்திவேல் வீட்டிற்கு அ.சா.1 மற்றும் அ.சா.1ன் தம்பி மற்றும் நண்பர்கள் வந்தபோது சக்திவேலுடன் ஒரு பெண் இருந்ததாகவும், அவரை காண்பித்து இவர்தான் கோவிந்தலெட்சுமி என்றும் நீங்கள் கொடுத்த பணத்தையெல்லாம் இவரிடம் தான் கொடுத்தேன் என சக்திவேல் கூறினார் என்றும், அதற்கு கோவிந்தலெட்சுமி நீங்கள் கொடுத்த பணம் உரியவர்களிடம் கொடுத்து விட்டேன் என்று சொன்னார் என்றும், அதற்கு அ.சா.1 பணம் கொடுத்ததற்கான சான்று எழுதிக் கொடுக்குமாறு கேட்டபோது, அதற்கு சக்திவேல் ரூபாய் 20/– பத்திரத்தில் அரசு வேலைக்காக தான் பணம் பெற்றுக்கொண்டதற்கு தானும் கோவிந்தலெட்சுமியும் கையெழுத்திட்டு தருகிறோம் என கூறினார் என்றும், பின்பு அ.சா.1ன் தம்பி தாசன் சக்திவேல் வீட்டிலேயே அந்த பத்திரத்தில் அ.சா.1ன் தம்பிகள் மற்றும் நண்பர்கள் உட்பட ஏழுபேருக்கும் பணம் பெற்றுக் கொணடதற்காக அந்த பத்திரத்தில் எழுதினார், அதில் சக்திவேலும், கோவிந்தலெட்சுமியும் கையெழுத்திட்டார்கள் என்றும், சக்திவேல் கூறியபடி 28.02.2019 வேலை வாங்கி தராததால் 01.03.2019–ம் தேதி சக்திவேலிடம் சென்று கேட்ட போது சக்திவேல் பணத்தை பெற்றுக் கொண்டு கோவிந்தலெட்சுமி ஏமாற்றி வருவதாக கூறினார், சக்திவேல் உங்கள் அனைவருக்கும் தனித்தனியாக எழுதி தருகிறேன் என கூறி ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாக கையெழுத்திட்டு கொடுத்தார், அ.சா.1ன் தம்பி தாசனும், தர்மராஜ் ஆகிய இருவரும் சக்திவேலுடன் சென்று திருவாரூர் கோர்ட்டில் கோவிந்தலெட்சுமியிடம் சென்று கேட்டபோது வெளியில் இருங்கள் என்று கூறிச் சென்றவர் திரும்பி வரவில்லை, மறுநாள் அ.சா.1ஐ போல் வேலைக்கு பணம் கொடுத்த திருவாரூரைச் சேர்ந்த சசி என்பவர் செல்போனில் அ.சா.1யிடம் நேற்று கோர்ட்டில் கோவிந்தலெட்சுமி தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொண்டு தற்கொலைக்கு முயற்சித்ததாக அ.சா.1யிடம் சொன்னதாகவும், சக்திவேல் அ.சா.1, அ.சா.1யின் தம்பி மற்றும் நண்பர்களை போல் சுமார் 83 பேரிடம் ரூ.83,00,000/– பணம் பெற்றுக் கொண்டு

வேலை வாங்கி தராமல் ஏமாற்றி இருப்பது அ.சா.1, அ.சா.1யின் தம்பிகள், நண்பர்கள் 6 போருக்கு இப்பொழுது தெரிய வந்தது என்றும், எனவே அ.சா.1, அ.சா.1யின் தம்பிகள் மற்றும் நண்பர்கள் ஆறு பேருக்கு வேலை வாங்கி தருவதாக ரூ.6,00,000/–பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றிய சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமி ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுதருமாறு புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரினை புலன் விசாரணை செய்து நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தை ஒத்து இந்நீதிமன்ற முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தையும் அ.சா.1யின் புகார் வாக்குமூலத்தையும் ஒத்து இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 முதல் அ.சா.7 மற்றும் அ.சா.10 முதல் அ.சா.70 வரை சாட்சியம் அளித்துள்ளார்கள்.

2)இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:

2.1) இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.70 வரையிலான சாட்சிகளில் அ.சா.1 முதல் அ.சா.7, அ.சா.10 முதல் அ.சா.59 வரை மற்றும் அ.சா.62, அ.சா.65, அ.சா.66 ஆகிய நபர்கள் அனைவரும் 1–வது மற்றும் 2–வது எதிரி நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னதன் பேரில் அவரின் வார்த்தைகளை நம்பி அல்லது அவர் பயன்படுத்திய ஆட்களை நம்பி ரூ.1,00,000/–த்தை முன்பணமாக கொடுத்த நபர்கள் ஆவார்கள். ஒவ்வொருவரும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2018 மாதங்களில் ஒவ்வொரு தேதிகளில் பணத்தை 1–வது எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்துள்ளார்கள். பெரும்பாண்மையான சாட்சிகள் பிப்ரவரி 2018–ல் அல்லது 13.02.2018ல் 1–வது எதிரியின் வீட்டில் வைத்து பணத்தை கொடுத்துள்ளார்கள்.

2.2) அவர்களை நம்ப வைப்பதற்காக பணத்துடன் சேர்த்து அவர்களின் பயோ டேட்டா மற்றும் கல்வி சான்றிதழ், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றை

1–வது எதிரி பெற்றுக் கொண்டுள்ளார். ஆன்லைனில் அப்ளிகேஷன் பார்ம் பூர்த்தி செய்ய வேண்டும் பார்த்துக் கொண்டிருங்கள் என்று ஒவ்வொரு நபர்களிடம் சொல்லி வந்துள்ளார். அனைவரிடமும் 15 முதல் 20 நாட்களில் வேலை கிடைத்துவிடும் என்று சொல்லியும், ஏப்ரல் மாதத்தில் கிடைத்துவிடும் என்று சொல்லியும், மே மாதம் கோர்ட் லீவு என்பதால் ஜீன், ஜுலை மாதத்தில் வேலை உறுதியாக கிடைத்துவிடும் என்றும், 2019–ம் ஆண்டிற்குள் வேலை கிடைத்துவிடும் என்றும், 1–வது எதிரியும், 2–வது எதிரியும் காலத்தை கடத்தி வந்துள்ளார்கள். ஆனால் கடைசி வரை வேலையும் கிடைக்கவில்லை. பணத்தையும் திருப்பி கொடுக்கவில்லை. 2–வது எதிரி நீதிமன்றத்தில் வேலை பார்த்து வருவதால் நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டியவர்களிடம் பணத்தை கொடுத்துள்ளோம் வேலை உறுதி என 1–வது எதிரியும், 2–வது எதிரியும் சொல்லி வந்துள்ளனர். 1–வது எதிரியும், 2–வது எதிரியும் பொதுமக்களை ஏமாற்றியது போக தான் பணிபுரியும் நீதிமன்றத்தையும், நீதிபதிகளையும் தவறாக சித்தரித்து அவர்களை காட்டி பொதுமக்களிடம் பணத்தை வசூல் செய்து நீதித்துறைக்கு களங்கத்தை ஏற்படுத்தி அனைவரையும் ஏமாற்றி உள்ளனர்.

2.3) 1–வது எதிரி அ.சா.6 சக்திவேல் என்ற நபருக்கும், அ.சா.20 குமரப்பன் என்ற நபருக்கும், அ.சா.25 யோகலெட்சுமி என்ற நபருக்கும், அ.சா.27 பாலசந்தர் என்ற நபருக்கும், மொத்தம் நான்கு நபர்களுக்கு முறையே அவர்களின் சூழ்நிலை கருதி ரூ.1,00,000/–, ரூ.50,000/–, ரூ.2,00,000/–த்தை திருப்பி கொடுத்திருந்தாலும், அவர்களை நம்ப வைத்து அவர்களிடமிருந்து பணத்தை பெற்றதுதான் இவ்வழக்கினை பொறுத்த வரை குற்றமாகும்.

<u>3) ஆவண சாட்சியங்களின் விபரங்கள் பின்வருமாறு:</u>

3.1) அ.சா.1 முதல்நிலை புகார்தாரர் திருவாரூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எழுத்து மூலமாக புகார் அளித்துள்ளார் அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவருக்கு 1–வது எதிரி எழுதி கொடுத்த

பத்திரம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா. 1 உடன் சேர்த்து மற்ற ஆறு நபர்களுக்கு மொத்தம் ஏழு பத்திரங்களை தனித்தனியே 1–வது எதிரி எழுதி கொடுத்தும், 7 நபர்களுக்கு சேர்த்து 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரி பணத்திற்கு நாங்கள் உறுதி என்று 04.02.2019–ம் தேதி அன்று பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரி தனித்தனியே ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்துள்ளார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1–வது மற்றும் 2–வது எதிரியின் வீட்டிலிருந்து தடய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3.2) அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 57 AB 911355 பதிவெண் கொண்ட 01.03.2019ம் தேதியிட்ட **ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் என்.சக்திவேல், த/பெ. நாகராஜ் ஆகிய நான்** திருவாரூர் நீதிமன்றத்தில் உதவியாளர் பணிக்காக கடுவங்குடியில் வசித்து வரும் **பி.சுரேஷ், த/பெ. பக்கிரிசாமி** என்பவரிடம் ரூ.2,50,000/– பேசி அவற்றில் முன் பணமாக ரூ.1,00,000/– 13.02.2018 அன்று பெற்றுக் கொண்டதாகவும் வேலை வாங்கி தரவில்லை எனில் அவரிடம் பெற்ற ரூ.1,00,000/– பணத்திற்கு திரும்ப தரும் வரை 2%வட்டியுடன் அசலையும் சேர்த்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3) அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 62 AB 200825 பதிவெண் கொண்ட 04.02.2019ம் தேதியிட்ட **ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் என்.சக்திவேல், த/பெ. நாகராஜ் ஆகிய நானும், திருவாரூர் நீதிமன்றத்தில் பணிபுரிந்து வரும் கோவிந்தலெட்சுமி, த/பெ. பாலகிருஷ்ணன் ஆகிய இருவரும்** பி.சுரேஷ், பி.அழகர், பி.தாசன், பி.தர்மராஜ், ஆர்.சுரேஷ், எஸ்.தினேஷ், வீ.சக்திவேல் உதவியாளர் பணிக்காக தலா ரூ.1,00,000/– வீதம் **ஏழு பேருக்கு** ரூ.7,00,000/– பணத்தை 13.02.2018 அன்று பெற்று கொண்டதாகவும், 28.02.2019ம் தேதிக்குள் தங்களுக்கு நீதிமன்றம் உதவியாளர் பணிக்கான உத்தரவை பெற்றுத் தருகிறோம் அவ்வாறு வேலை வாங்கி தர முடியவில்லை

எனில் இருவரும் 04.03.2019ம் தேதி அன்று தங்களிடம் பெற்ற ரூ.7,00,000/– திருப்பி தருகிறோம் என்று உறுதியளித்து பி.சுரேஷ் அவர்களுக்கு இருவரும் எழுதி கொடுத்துள்ளார்.

3.4) அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 57 AB 9113575 பதிவெண் கொண்ட 01.03.2019ம் தேதியிட்ட **ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் என்.சக்திவேல், த/பெ. நாகராஜ் ஆகிய நான்** திருவாரூர் நீதிமன்றத்தில் உதவியாளர் பணிக்காக கடுவங்குடியில் வசித்து வரும் **பி.அழகர், த/பெ. பக்கிரிசாமி** என்பவரிடம் ரூ.2,50,000/– பேசி அவற்றில் முன் பணமாக ரூ.1,00,000/– 13.02.2018 அன்று பெற்றுக் கொண்டதாகவும் வேலை வாங்கி தரவில்லை எனில் அவரிடம் பெற்ற ரூ.1,00,000/– பணத்திற்கு திரும்ப தரும் வரை 2%வட்டியுடன் அசலையும் சேர்த்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.5) அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 62 AB 204374 பதிவெண் கொண்ட 01.03.2019ம் தேதியிட்ட ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் **என்.சக்திவேல்,** த/பெ. நாகராஜ் ஆகிய நான் திருவாரூர் நீதிமன்றத்தில் உதவியாளர் பணிக்காக கடுவங்குடியில் வசித்து வரும் **பி.தர்மராஜ், த/பெ. பரமசிவம்** என்பவரிடம் ரூ.2,50,000/– பேசி அவற்றில் முன் பணமாக ரூ.1,00,000/– 13.02.2018 அன்று பெற்றுக் கொண்டதாகவும் வேலை வாங்கி தரவில்லை எனில் அவரிடம் பெற்ற ரூ.1,00,000/– பணத்திற்கு திரும்ப தரும் வரை 2%வட்டியுடன் அசலையும் சேர்த்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.6) அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 62 AB 204367 பதிவெண் கொண்ட 01.03.2019ம் தேதியிட்ட **ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் என்.சக்திவேல், த/பெ. நாகராஜ் ஆகிய நான்** திருவாரூர் நீதிமன்றத்தில் உதவியாளர் பணிக்காக **எஸ். தினேஷ்,** த/பெ. டி.எஸ். சிவக்குமார் என்பவரிடம் ரூ.2,50,000/– பேசி அவற்றில் முன் பணமாக ரூ.1,00,000/– 13.02.2018 அன்று பெற்றுக் கொண்டதாகவும், வேலை வாங்கி தரவில்லை எனில் அவரிடம் பெற்ற

ரூ.1,00,000/– பணத்திற்கு திரும்ப தரும் வரை 2% வட்டியுடன் அசலையும் சேர்த்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.7) **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள X 132714 பதிவெண் கொண்ட 09.03.2019ம் தேதியிட்ட **ரூ.50/– மதிப்புள்ள பத்திரத்தில்** என்.ரமேஷ், த/பெ. நவநீதகிருஷ்ணன் துர்காலயா ரோட்டில் வசிக்கும் **என். சக்திவேல்,** த/பெ. நாகராஜன் அவர்கள் திருவாரூர் மாட்ட நீதிமன்றத்தில் வேலை உள்ளதாக சொல்லி **ரமேஷ் அவர்களிடமிருந்து 15 நபர்களுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் ரூ15,00,000/–த்தை** சக்திவேல் பெற்றுக் கொண்டதாகவும், ஒரு வருடம் கழிந்த நிலையில், வேலை தாமதமான காரணத்தினால் இந்த பணத்தை 2019ம் ஆண்டு மே 25க்குள் பணத்தை கொடுத்து விடுகிறேன் என உறுதியளித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.8) **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 1–வது எதிரியான சக்திவேலின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **"என்னை என் வீட்டிற்கு அழைத்து சென்றால் நான் சுரேஷ், தினேஷ், தாசன், தர்மராஜ், அழகர் மற்றும் மன்னார்குடி ரமேஷ் ஆகியோர்களுக்கு நான் வேலை வாங்கி தருவதற்காக பணம் பெற்றுக் கொண்டதற்கு கையெழுத்திட்டு கொடுத்த ரூ.20/– மதிப்புள்ள பத்திர நகல்களையும் 83 பேரிடம் வேலை வாங்கி தருவதாக பணம் பெற்ற நான்கு பக்க விபரத்தையும் நான் எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன்"**

3.9) 2–வது எதிரியான கோவிந்தலெட்சுமியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் **"என்னிடம் கொடுத்த பணத்தை எனது சொந்த கடனை அடைக்கவும், பயன்படுத்திக் கொண்டேன். என்னை எனது வீட்டிற்கு அழைத்து சென்றால் சக்திவேல் என்னிடம் சிலருக்கு வேலை வாங்கி தருவதாக வாங்கிய பயோடேட்டா, போட்டோவும், கல்வி சான்றிதழ்களின் நகல்களையும் நான் வீட்டில் வைத்திருப்பதை எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன்"** என குறிப்பிடப்பட்டுள்ளது.

3.10) 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியின் வீட்டில் கைப்பற்றப்பட்ட தடயமான அ.சா.ஆ.15 Diary 2017 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள டைரியில் 2017 ம் வருடம் டிசம்பர் 24ம் தேதியில் (அனிதா–மன்னார்குடி, தேவிபாலா–விளக்குடி, நித்யா–மன்னார்குடி, பட்டுகோட்டை, கமாட்சி– மன்னார்குடி, ஜெயகீதா–மன்னார்குடி, விளக்குடி, சர்மிளா–மன்னார்குடி, ஜெசங்கர்–நாகப்பட்டிணம், சங்கீதா–மன்னார்குடி, ரேசியா பானு–மன்னார்குடி, ஜெயசூர்யா–மன்னார்குடி, கபில்ராஜ்–திண்டுக்கல், சென்னை, பிரேம்குமார் –மன்னார்குடி) என பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.11) அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள **பெயர் பட்டியல்** மற்றும் ராஜேஷ்குமார், மார்கிரெட் சாந்தி, சிவரஞ்சனி, முத்துபாண்டி, சுரேஷ், தாசன், தர்மராஜ் ஆகியோரின் கல்வி சான்றிதழின் நகல்கள் மற்றும் **ரெசியும்** ஆகியவை உள்ளது.

3.12) அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 62 AB 204366 பதிவெண் கொண்ட 01.03.2019ம் தேதியிட்ட **ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் என்.சக்திவேல், த/பெ. நாகராஜ் ஆகிய நான்** திருவாரூர் நீதிமன்றத்தில் உதவியாளர் பணிக்காக **பி.தாஸன், த/பெ. பக்கிரிசாமி** என்பவரிடம் ரூ.2,50,000/– பேசி அவற்றில் முன் பணமாக ரூ.1,00,000/– 13.02.2018 அன்று பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.13) இவை அல்லாமல் 1–வது எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட தடய ஆவணங்களுக்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.19 ஆகவும், 2–வது எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட தடய ஆவணங்களுக்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.13 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.17 ஆகவும், மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளின் கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11, அ.சா.ஆ.12 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) எதிரிகள் தரப்பு வாதங்கள்:

4.1) 1–வது எதிரி தரப்பு வாதங்கள்:

நீதிமன்றத்தில் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் போது 1–வது எதிரி தரப்பில், 1–வது எதிரி அரசாங்க வேலையில் இல்லை என்றும், அரசாங்க வேலையில் இல்லாத நபரை நம்பி எவ்வாறு பணம் கொடுத்தீர்கள் என்றும், 1–வது எதிரி பணத்தை பெற்று 2–வது எதிரியான கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்து விட்டதாகவும், 1–வது எதிரியிடம் அந்த பணம் இல்லை என்றும், 1–வது எதிரியிடம் 2–வது எதிரி பணத்தை பெற்று கொண்டு 1–வது எதிரியையும் ஏமாற்றிவிட்டதாகவும், அதனால் உயர்நீதிமன்றத்தில் 1–வது எதிரி வழக்கு பதிவு செய்திருப்பதாகவும், 1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப்பட்டு வாதமும் முன்வைக்கபட்டுள்ளது.

4.2) 2–வது எதிரி தரப்பு வாதங்கள்:

நீதிமன்றத்தில் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் போது 2–வது எதிரி தரப்பில், தனக்கும் 1–வது எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், தான் 1–வது எதிரியின் காலனி வீட்டில் வாடகைக்கு குடியிருக்கவில்லை என்றும், 1–வது எதிரி குடும்பத்திற்கும், 2–வது எதிரி குடும்பத்திற்கும், ஏற்கனவே பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது அதனை பயன்படுத்திக் கொண்டு 1–வது எதிரி தன்னுடைய பெயரை பணம் வாங்கிய நபர்களிடம் சொல்லி வருகிறார் என கேள்விகள் கேட்கப்பட்டு வாதமாக நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது. மேலும், 2–வது எதிரி நீதிமன்றத்தில் அரசு வேலையில் இருப்பதால் அவரை தொடர்புபடுத்தி சாட்சியம் அளித்தால் 2–வது எதிரியிடம் இருந்து பணம் பறித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் நீதிமன்றத்தில் அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம்

அளித்துள்ளார்கள் என குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப்பட்டு வாதமும் முன்வைக்கபட்டுள்ளது. மேலும், 2–வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியம் அளித்தால் தங்களுக்கு வரவேண்டிய பணம் வந்துவிடும் என்று 1–வது எதிரி ஆசை வார்த்தை காட்டி அவர்களை சாட்சியமளிக்க வைத்துள்ளார் என்றும், 2–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப்பட்டு வாதமும் முன்வைக்கபட்டுள்ளது.

5) பரிசீலணைக்கான தீர்வுகள்:

மேற்கண்ட சாட்சியங்களில் இருந்து 1–வது எதிரியும், 2–வது எதிரியும் ஒன்றாக கூட்டு சேர்ந்து அவர்களுக்கு தெரிந்த ஒவ்வொரு நபர்களையும், அவரவர்கள் பார்த்து வந்த வேலைக்கு ஏற்றவாறும், அவர்கள் படித்த படிப்புக்கு ஏற்றவாறும், நீதிமன்றத்தில் OA வேலை, நீதிமன்றத்தில் கம்யூட்டர் சம்பந்தமான வேலை, நீதிமன்றத்தில் கட்டு எடுத்துக் கொடுக்கும் வேலை, இளநிலை உதவியாளராக வேலை மற்றும் நீதிமன்றத்தில் ஓட்டுநர் வேலை என அரசு வேலை வாய்ப்பு இருக்கிறது என சொல்லி அவர்களை நம்ப வைத்து அவர்களிடமிருந்து வேலைக்கு ரூ.2,50,000/– என ஒருசில நபர்களிடமும், ரூ.2,00,000/– என ஒரு சில நபர்களிடமும், அ.சா.52 யிடம் வேலைக்கு ரூ.3,00,000/– என சொல்லியும் பணத்தை கொடுத்தால் வேலை உறுதி என்று சொல்லி ஒவ்வொரு நபரிடமிருந்து முன்பணமாக ரூ.1,00,000/–த்தை ரொக்கமாக பெற்றுக் கொண்டும் வேலை கிடைத்த பிறகு மீதத்தொகையை தருமாறும் கூறியுள்ளார்கள்.

பெரும்பான்மையாக 1–வது எதிரி தனக்கு தெரிந்த நபர்கள், அவரது கடையான இயற்கை அங்காடிக்கு பொருட்கள் வாங்க வரும் நபர்கள், 1–வது எதிரியின் உறவினர்கள் மற்றும் 1–வது எதிரியின் சமூகத்தை சேர்ந்தவர்கள், படித்து விட்டு தனியார் வேலையில் இருப்பவர்கள், வெளிமாநிலங்களில் வேலை பார்ப்பவர்கள்(அ.சா.52 தினேஷ் மும்பையில் வேலை பார்த்த நபர்) என

ஒவ்வொருவரையும் தனித்தனியே அணுகி அவர்களுக்கும் அவர்களுக்கு தெரிந்த நபர்களுக்கும் தனக்கு தெரிந்த நபர் அதாவது 2–வது எதிரி நீதிமன்றத்தில் வேலை பார்க்கிறார், அவர் தன்னுடைய வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார் என 2–வது எதிரியை அறிமுகப்படுத்தியும், சென்னை, திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம், கும்பகோணம், நீடாமங்கலம் ஆகிய நீதிமன்றத்தில் அரசு வேலை என்று ஆசையை காட்டி வேலை இருப்பதாக சொல்லி ரூ.1,00,000/–த்தை முன்பணமாக 1–வது எதிரி வாங்கியுள்ளார்.

2–வது எதிரியும் அவருக்கு தெரிந்த நபர்களான அ.சா.16 லதா, அ.சா.17 சண்முகசுந்தரம், அ.சா.22 சண்முகபிரியா, ஆகியோர்களிடமிருந்து நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக சொல்லி ரூ.1,00,000/–த்தை முன்பணமாகவும், வேலை கிடைத்த பிறகு மீத ரூ.1,00,000/– த்தை தரலாம் என சொல்லி பணத்தை வாங்கியுள்ளார். மேலும், இதற்கு முன்னதாக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளிடம் 1–வது எதிரி பணத்தை பெறும் போது சாட்சிகளை நம்ப வைக்கும் விதமாக 1–வது எதிரியும், 2–வது எதிரியும் சேர்ந்து பணத்தை பெற்றத்தற்கு ரூ.20/– பத்திரத்தை எழுதி கொடுத்து உள்ளார்கள்.

நீதிமன்றத்தில் 2–வது எதிரி வேலை செய்வதை பயன்படுத்திக் கொண்டு பொது மக்களை நம்ப வைத்து அவர்களிடமிருந்து பணத்தை பெற்று பின்னர் 1–வது எதிரி 2–வது எதிரியிடம் பணத்தை கொடுத்து வைத்திருப்பதாகவும், அதற்கு நாங்கள் பொறுப்பு அப்படி இல்லை என்றால் பணத்தை வட்டியுடன் திருப்பி தந்து விடுகிறோம் என உறுதியளித்தும் பின்னர் வேலை வாங்கி தராமலும், பணத்தை திருப்பி தராமலும் 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரி இருவரும் கூட்டு சதி (Criminal Conspiracy) செய்து, மோசடி (Cheating) செய்து மற்றும் குற்றமுறு நம்பிக்கை மீறல் (Criminal Breach of Trust) குற்றத்தை செய்துள்ளார்கள்.

மேலும், **அரசு தரப்பு வாதங்கள் மற்றும் எதிரிகள் தரப்பு வாதங்கள் மற்றும் குறுக்கு விசாரணை கேள்விகளிலிருந்து பரிசீலணை செய்யப்பட வேண்டியவை:–**

(1) போலீசார் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும், நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும் முரண்பட்ட சங்கதிகளா என்பதை பரிசீலணை செய்தல்.

(2) அரசு தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ள பத்திரத்தில் உள்ள 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரியின் கையொப்பம் குறித்து பரிசீலணை செய்தல்.

(3) 1–வது மற்றும் 2–வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை குறித்து பரிசீலணை செய்தல்.

(4) 1–வது மற்றும் 2–வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட தடயங்கள் குறித்து பரிசீலணை செய்தல்.

(5) 1–வது எதிரியும், 2–வது எதிரியும் செய்த செயல்கள் இ.த.ச பிரிவு 120–B ன் கீழ் கூட்டு சதி என்ற குற்றத்தை புரிந்துள்ளார்களா என்ற வாதத்தினை பரிசீலணை செய்தல்.

(6)1–வது எதிரியும், 2–வது எதிரியும் செய்த செயல்கள் இ.த.ச பிரிவு 420–ன் கீழ் மோசடி என்ற குற்றத்தை புரிந்துள்ளார்களா என்ற வாதத்தினை பரிசீலணை செய்தல்.

(7) 1–வது எதிரியும், 2–வது எதிரியும் செய்த செயலானது இ.த.ச 406–ன் கீழ் குற்றமுறு நம்பிக்கை மோசடி குற்றத்தை புரிந்துள்ளார்களா என்ற வாதத்தை பரிசீலணை செய்தல்.

மேற்கண்ட வாதங்களுக்கான தீர்வாக,

கீழ்கண்ட உயர்நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் மேற்கண்ட வாதங்களுக்கான இறுதி தீர்வுகளை கண்டறிவதற்கு மேற்கொள்களாக அமைகிறது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. அவை இவ்வழக்கிற்கு

பொருந்துவதாக உள்ளதால் அவற்றை இவ்வழக்கின் தீர்வுக்குறிய பிரச்சனைக்கு பரிசீலனையில் மேற்கோள்களாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(1) போலீசார் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும், நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும் முரண்பட்ட சங்கதிகள் என்பதை பரிசீலணை செய்கையில்,

Tahsildar Singh And Another vs The State Of Uttar Pradesh 1959 AIR 1012 என்ற வழக்கில் " An accused is entitled to cross -examine the witness under the first part of s.145 with respect to the police statement. Relevant and material omissions amount to vital contradictions which can be established by cross examination and confronting the witness with his previous statement to the police. In the circumstances of the present case even if the defence had been allowed to put questions concerning the omissions, it would not have affected the crdibility of the witnesses and no prejudice was caused to appellants by the disallowance of the questions". **என குறிப்பிடப்பட்டுள்ளது.**

V.K.Mishra & Anr vs State Of Uttarakhand & Anr(2015 (3) MLJ (Cri)727) என்ற வழக்கில் "Court cannot suo moto make use of statements to police not proved and ask question with reference to them which are inconsistent with the testimony of the witness in the court. The words in Section 162 Cr.P.C. "if duly proved" clearly show that the record of the statement of witnesses cannot be admitted in evidence straightway nor can be looked into but they must be duly proved for the purpose of contradiction by eliciting admission from the witness during cross-examination and also during the cross-examination of the investigating officer. Statement before the investigating officer can be used for contradiction but only after strict compliance with Section 145 of Evidence Act that is by drawing attention to the parts intended for contradiction."

"Under Section 145 of the Evidence Act when it is intended to contradict the witness by his previous statement reduced into writing, the attention of such witness must be called to those parts of it which are to be used for the purpose of contradicting him, before the writing can be used. While recording the deposition of a witness, it becomes the duty of the trial court to ensure that the part of the police statement with which it is intended to contradict the witness is brought to the notice of the witness in his cross-examination. The attention of witness is drawn to that part and this must reflect in his cross-examination by reproducing it. If the witness admits the part intended to contradict him, it stands proved and there is no need to further proof of contradiction and it will be read while appreciating the evidence. If he denies having made that part of the statement, his attention must be drawn to that statement and must be mentioned in the deposition. By this process the contradiction is merely brought on record, but it is yet to be proved. Thereafter when investigating officer is examined in the court, his attention should be drawn to the passage marked for the purpose of contradiction, it will then be proved in the deposition of the investigating officer who again by referring to the police statement will depose about the witness having made that statement. The process again involves referring to the police statement and culling out that part with which the maker of the statement was intended to be contradicted. If the witness was not confronted with that part of the statement with which the defence wanted to contradict him, then the court

cannot suo moto make use of statements to police not proved in compliance with Section 145 of Evidence Act that is, by drawing attention to the parts intended for contradiction".

மேற்கண்ட தீர்ப்புகளின் படி இந்நீதிமன்றம் கருத்தில் கொள்வது யாதெனில், அரசு தரப்பு சாட்சியங்கள் போலிசார் விசாரணையில் அதாவது கு.வி.மு.ச. பிரிவு 161(3) வாக்குமூலத்தில் சொல்லப்படாத சங்கதிகளை இந்நீதிமன்றத்தின் முதல் விசாரணையின் போது முதன் முறையாக புதிய சங்கதிகளை சொல்லியுள்ளார்கள் என எதிரிகள் தரப்பு வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. இதில் அ.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்ட அன்று 1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. அ.சா.1–ன் முதல் விசாரணை நீதிமன்றத்தில் 03.11.2020 அன்று எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் 04.05.2023ம் தேதி அ.சா.1 இறந்து விட்டதாக இறப்பு சான்றிதழ் நகலுடன் அரசு தரப்பில் 01.06.2023 அன்று மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. 2–வது எதிரி தரப்பில் மட்டுமே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மற்ற அரசு தரப்பி சாட்சிகளை 1–வது மற்றும் 2–வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சங்கதிகள் முற்றிலும் முரண்பட்ட சங்கதிகள் அல்ல. ஏனெனில் சம்பவம் குறித்து குற்ற சம்பவத்திற்கான முழுமையான சாராம்சம் மற்றும் வழக்கின் சம்பவம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் சூழல் சாட்சியங்களுடன் ஒத்தேற்புடன் உள்ளதா மற்றும் சாட்சியின் நம்பகத்தன்மையை (Credibility of witnessess) பார்க்க வேண்டுமே தவிர மற்றும் கண்டிப்பாக சொல்லவேண்டிய சங்கதிகளை (Relevant and material omissions) தவிர சாட்சிகள் சொல்லாமல் விடுபட்ட இதர சங்கதிகளை (Miscelleaneous omissions) முரண்பட்ட சங்கதிகள் (facts in contradiction) என எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையிலிருந்து வைத்துக் கொண்டு போலீசார் பதிவு செய்த வாக்குமூலத்திற்கும் (Previous statement) முதல் விசாரணையில் சாட்சிகள்

சொன்ன வாக்குமூலத்திற்கும் முரண்பாடு இருப்பதாக நீதிமன்றம் கருதக் கூடாது என்றும், நீதிமன்றம் தன்னுடைய நீதியின் நலனுக்கான பார்வையை கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

அந்த வகையில் சாட்சிகள் விடுபட்ட சங்கதிகள் என எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் எதுவும் சொல்லப்படவில்லை. புதிய சங்கதிகள் என்று எதிரிகளை தற்காத்துக் கொள்ள பரிந்துரைகளாக கேட்கப்பட்ட கேள்விகள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அதாவது அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, அ.சா.7 ஆகிய சாட்சிகள் அனைவரும் தாங்கள் 1-வது எதிரி தங்களுக்கு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சொல்லி ரூ.2,50,000/- செலவாகும் என்றும், முன்பணமாக ஒவ்வொருக்கும் தலா ரூ.1,00,000/- பெற்றுக் கொண்டு மொத்தம் ரூ.7,00,000/-த்தை பெற்றுக் கொண்டதாகவும், மீத தொகையை வேலைக்கான உத்தரவு வந்த பிறகு கொடுக்குமாறு சொல்லி அவர்களிடமிருந்து தலா ரூ.1,00,000/-த்தை பெற்று சாட்சிகள் வேலைக்கான உத்தரவு இன்னும் வரவில்லை என்று சுமார் 6 மாதங்கள் தொடர்ந்து கேட்டு வந்த போது 1-வது எதிரி சக்கிவேல் தன்னுடைய வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் நீதிமன்றத்தில் பணிபுரியும் கோவிந்தலெட்சுமி என்ற நபரை நேரில் அறிமுகப்படுத்தி அவரிடம் போனில் சாட்சிகளை பேச வைத்து அந்த 2-வது எதிரியான கோவிந்தலெட்சுமி உங்களுடைய பணம் என்னிடம் தான் உள்ளது கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்துவிட்டேன், பணத்திற்கும் வேலைக்கும் நான் உறுதியளிக்கிறேன் என்றும், அவ்வாறு இல்லை என்றால் உங்களுடைய பணத்தை நான் வட்டியுடன் சேர்த்து திருப்பி தருகிறேன் என்று சொல்லியுள்ளார் என்றும், அதன்படி எதிரிகள் இருவரும் சேர்ந்து அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளுக்கு ஒன்றாக சேர்த்து முதலில் 04.02.2019ம் தேதி 2%வட்டியுடன் சேர்த்து தலா ரூ.1,00,000/-த்தை 04.03.2019ம் தேதிக்குள் திருப்பி தந்துவிடுவதாக ரூ.20/-பத்திரத்தில் எழுதி எதிரிகள் இருவரும் கையொப்பம்

போட்டுக் கொடுத்ததாகவும், 1-வது எதிரி அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளுக்கு தனித்தனியாக ரூ.20/- பத்திரத்தில் உத்தரவாதம் எழுதி கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், பணத்தை குறித்து 1-வது எதிரியிடம் கேட்க சென்ற போது அவர் 2-வது எதிரியிடம் பணத்தை கொடுத்து தான் ஏமாந்து விட்டதாக சொன்னதால் சாட்சிகள் அனைவரும் 2-வது எதிரியிடம் ஏமாற்றிய பணம் குறித்து கேட்க திருவாரூர் நீதிமன்றத்திற்கு சென்று அவரை பார்க்க இயலாமல் காத்திருந்து திரும்பி வந்து விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மறுநாள் 2-வது எதிரி கோவிந்தலெட்சுமி திருவாரூர் நீதிமன்றத்தில் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள மற்ற சாட்சிகளும் தங்களுக்கு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக 1-வது எதிரி சக்திவேல் தங்களிடம் சொன்னதாகவும், அதற்கு ரூ.2,00,000/- செலவாகும், முன்பணமாக ரூ.1,00,000/-த்தை தாருங்கள் என சொல்லி 2-வது எதிரி மூலமாக தான் வேலை வாங்கி தரப்போவதாக சொல்லியுள்ளார் என சாட்சிகள் ஒவ்வொருவரும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்கள். சாட்சிகள் ஒவ்வொருவரிடமும் பத்திரங்கள் எழுதி கொடுக்கப்படவில்லை என்றும், 2-வது எதிரியை நேரில் பார்த்ததில்லை என்றும் கேட்கபட்ட கேள்விகளுக்கு சாட்சிகள் மறுத்து பதில் அளித்துள்ளார்கள். அ.சா.69, அ.சா.70 புலன் விசாரணை அதிகாரிகளை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அவர்களும் தங்களது விசாரணையில் சாட்சிகள் சொன்ன விபரங்கள் உண்மையென நீதிமன்றத்தில் பதில் அளித்துள்ளார்கள். அதனால் போலிசார் பதிவு செய்த கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்திற்கும் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் முரண்பாடு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவில்லை. ஆகவே சாட்சிகளின் நீதிமன்றத்தின் முன் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் வழக்கிற்கு மதிப்பு மிகுந்த சாட்சியங்களாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மேலும், 1–வது எதிரி தான் சாட்சிகளிடம் பணம் வாங்கவில்லை என்று மறுக்கவில்லை. 1–வது எதிரி பணத்தை வாங்கி 2–வது எதிரியிடம் கொடுத்து விட்டதாகவே கேள்விகள் சாட்சிகளிடம் கேட்கப்பட்டுள்ளது. சாட்சிகள் அனைவரும் திருவாரூர் துர்காலாய ரோட்டில் அமைந்துள்ள 1–வது எதிரியின் வீட்டில் வைத்து 1–வது எதிரியின் குடும்பத்தார்கள் முன்னிலையில் 1–வது எதிரி பணத்தை பெற்றுக் கொண்டதையும் 1–வது எதிரி மறுக்கவில்லை. இதிலிருந்து **பணம் ஏமாற்றி வாங்கிய விஷயத்தை 1–வது எதிரி மறைமுகமாக ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், வெளிப்படையாக ஒவ்வொரு நபரிடமும் மறுக்கவில்லை என இந்நீதிமன்றத்தால் தெளிவாக அறிய முடிகிறது. அது இந்திய சாட்சிய சட்டம் 58ன் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகள் நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற வரையறைக்குள் வருவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.**

(2) அரசு தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ள பத்திரத்தில் உள்ள 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரியின் கையொப்பம் குறித்து பரிசீலணை செய்கையில்,

Ramesh Chandra Agrawal vs Regency Hospital Ltd. & Ors., (AIR 2010 SCC 806) என்ற வழக்கில் "Expert evidence to be admissible, it must first be deemed necessary. The necessity arises when the subject matter is beyond the understanding of an ordinary person". **என தீர்மானிக்கப்பட்டுள்ளது**.

Malay Kumar Ganguly Vs. Dr.Sukumar Mukherjee and others [AIR 2010 SUPREME COURT 1162] என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில், "An expert is not a witness of fact and his evidence is really of an advisory character. The duty of an expert witness is to furnish the Judge with the necessary scientific criteria for testing the accuracy of the conclusions so as to enable the Judge to form his independent judgment by the application of these criteria to the facts proved by the evidence of the case. The scientific opinion evidence, if intelligible, convincing and tested becomes a factor and often an important factor for consideration along with other evidence of the case. The credibility of such a witness depends on the reasons stated in support of his conclusions and the data and material furnished which form the basis of his conclusions".

S.Gopal Reddy vs State Of Andhra Pradesh (1996 SCC (4) 596) என்ற வழக்கில் "The

expert evidence consitutes opinion rather than direct substantial evidence and it must not replace substantive evidence. Procedurally, expert testimony necessitates corrobaration which can be achieved through the clear direct or circumstantial evidence. Depending soly on expert tesitomy withough seeking indipendent dependable confirmation is considered unrelible." **என குறிப்பிடப்பட்டுள்ளது.**

மேற்கண்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பிலிருந்து கையொப்பம் அல்லது கையெழுத்து குறித்து நிபுணரின் கருத்துரை என்பது உறுதியான சாட்சியம் என ஏற்க இயலாது. அதை வைத்து மட்டும் வழக்கினை தீர்வு காண இயலாது. நிபுணரின் கருத்துரை வழக்கில் உள்ள மற்ற சம்பவம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் சூழல் சாட்சியங்களுடன் ஒத்து பார்த்து அதன் அடிப்படையில் வழக்கின் தீர்வினை காண வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. மேலும், நீதிமன்மன்றத்திற்கு கையொப்பம் அல்லது கையெழுத்தை குறித்து சந்தேகம் எழும்பட்சத்தில் தான் அதை நிபுணரின் கருத்துரை பெற அனுப்ப வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. நிபுணர் அவருடைய தனிப்பட்ட சிறப்பு அறிவு கூர்மையை பொறுத்து ஆராய்ந்து கருத்துரை வழங்க வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

அதே போன்று இந்த வழக்கினை பொறுத்த வரை இந்நீதிமன்றத்திற்கு பத்திரத்தில் கண்டுள்ள எதிரிகளின் கையொப்பம் குறித்து எந்த சந்தேகமும் எழவில்லை. ஏனெனில் அதை 1-வது மற்றும் 2-வது எதிரிகள் அவரவர் வீட்டிலிருந்து அவர்களே தனிச்சையாக எடுத்துக் கொடுத்த ஆவணங்கள் ஆகும். அந்த ஆவணங்கள் அரசு தரப்பு சாட்சியங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பத்திரங்கள் அ.சா.8, அ.சா.15, அ.சா.64, அ.சா.67, ஆகிய மகஜர் சாட்சிகளின் முன்னிலையில் தன்னிச்சையாக எதிரிகளால் எடுத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. **பத்திரத்தில் உள்ள கையொப்பம் நீதிமன்றத்தின் முன் குற்றபத்திரிக்கை நகல் பெறும் கையொப்பம், கு.வி.மு.ச பிரிவு 281 ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து கேட்கப்படும் கேள்வியில் உள்ள 1–வது மற்றும் 2–வது எதிரிகளின் கையொப்பம், கு.வி.மு.ச பிரிவு 313(பி)(ஆ) ன் கீழ் கேட்கப்படும்**

கேள்விகளுகளில் உள்ள 1–வது மற்றும் 2–வது எதிரிகளின் கையொப்பம் ஆகியவை ஒத்து போவதாகவே உள்ளது. **ஆகவே** நீதிமன்றத்திற்கு தடய ஆவணங்களான **பத்திரங்களில் உள்ள கையொப்பங்கள் எதிரிகளுடையது அல்ல என்ற சந்தேகத்திற்கு வாய்ப்பில்லை என்று கருதி அதை நிபுணரின் கருத்துரைக்கு அனுப்பவில்லை என்று முடிவு செய்கின்றது**. **மேலும்**, **வழக்கின் மற்ற சம்பவம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் சூழல் (facts and circumstances of the case) ஆகியவை வழக்கின் தீர்வுக்கு வழிவகுக்கும் வகையில் உள்ளதாலும்**, **நிபுணரின் கருத்துரையை பெற்றாலும் வழக்கின் சம்பவம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் சூழலுடன் ஒப்பிட்டு பார்த்து தான் முடிவு செய்ய வேண்டும்**. **ஆதலால் 1-வது மற்றும் 2-வது எதிரியின் கையொப்பம் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் பத்திரங்கள் முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.16, அ.சா.ஆ.23 ஆகியவற்றில் உள்ள கையொப்பம் எதிரிகளுடையது தான் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது**. **மேலும்**, **1-வது மற்றும் 2-வது எதிரிகள் அந்த கையொப்பம் தங்களுடையது அல்ல என ஒரு மறுப்பு கேள்வியை கேட்டுள்ளார்கள்**. **ஆனால் அது தங்களுடையது அல்ல என்று நிரூபிக்க எந்தவொரு நடவடிக்கையும் எதிரிகள் எடுக்கவில்லை**. **எதிரிகள் தங்களுடைய கையொப்பம் இல்லை என நிரூபிக்க வேண்டிய சுமை இந்திய சாட்சிய சட்டம் 102 ன் கீழ் எதிரிகளை சார்ந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது**. அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.3, அ.சா.4, அ.சா.7, அ.சா.66, அ.சா.67 ஆகியோர் எதிரிகள் எங்கள் முன்னிலையில் தான் அந்த பத்திரங்களில் கையொப்பம் செய்தார்கள் என உறுதி செய்துள்ளார்கள்.

(3) 1–வது மற்றும் 2–வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை குறித்து பரிசீலணை செய்கையில்,

Murugesan Versus State By the Inspector of Police, Palladam Police Station 2025 4 MLJ (Crl) 462 – என்ற வழக்கில்.... "The accused was charged with murder of his wife. After

conducting a detailed trial and hearing the arguments, the Trial Court found the accused guilty of the offence under Section 302 of IPC, convicted and sentenced him to undergo rigorous imprisonment for life and to pay a fine of Rs. 2000/-, in default, to undergo rigorous imprisonment for one year. Challenging the said conviction and sentence, the present appeal has been filed. In appeal, the accused contended that his confession given before the police can be considered in his favour to establish that the act was committed under sudden provocation. He further contended that, what is prohibited under law is the use of the confession only against the accused, and not in favour of the accused. Dismissing the appeal, it was held that:

Ratio Decidendi:

- The above judgment makes it clear that the confession made before the Police is not admissible and even if such statement is a mere admission in the course of investigation by the Police officer, still it will not be admissible, as the use of any statement made to a police officer under Section 161 Cr. PC/Section 180 BNSS is prohibited under Section 162 Cr.PC/Section 181 BNSS except for the purpose which is mentioned therein. Therefore, from a reading of the above judgment, it is clear that, as regards use of confession recorded by the Police under Section 161 Cr.PC./Section 180 BNSS, the provisions contained in the Code of Criminal Procedure will prevail over the provisions under the Indian Evidence Act in this regard.

- Further, in Ganesan's case, the Division Bench was of the view that the Privy Council. in Pakala Narayana Swamy v. King Emperor reported in AIR 1939 PC 47, has held that Sections 24 to 27 of the Evidence Act have to be a special law within the meaning of Section 2) of the Code of Criminal Procedure 1, 1898 and the same will prevail over Section 162 Cr.P.C. However, we are respecifully unable to persuade ourselves. In fact, in Pakala Narayana Swamy's case, the Privy Council has held that Section 27 of the Evidence Act alone has to be special law within the meaning of Section 1(2) of Code of Criminal Procedure, 1898, and not the other sections. Section 27 makes a statement admissible in evidence particularly with regard to discovery of fact. Therefore, only that is held to be special law. Whereas, on the contrary, the entire confession recorded by the Police including the incriminating statements, cannot be held to be brought under the special law to say that Evidence Act will prevail over Section 162 Cr.P.C. Further, the judgment in Ganesan's case is contrary to the view taken by the Hon'ble Supreme Court in Dipakbhai Jagdishchandra Patel's case. Therefore, in the light of the judgment of the Apex Court in Dipakbhai Jagdishchandra Patel's case, we respectfully disagree with the view of the Division Bench of this Court in Ganesan's case.

- In the light of the above legal position, as there is total bar for use of confession of the accused in favour of the accused, as discussed above, we are not in a position to accept the submission made by the learned counsel for the appellantlaccused. In the given case, the fact that the accused and deceased were together in the house has been clearly established. The accused has run away from the house immediately after the occurrence with blood-stained knife which has been clearly proved by the prosecution. Though it is urged before this Court

as if such occurrence was due to sudden provocation, it is relevant to note that it is for the accused to explain as to what had transpired inside the house. Only for the purpose of explaining the circumstances under which the incriminating materials have come against him, an opportunity is given to the accused under Section 313 Cr. P.C. However, the accused had been a mute spectator during the questioning under Section 313 Cr. P.C. and had not offered any explanation. The burden of proving the fact is on the accused. When the accused has not discharged his burden to explain the facts which are only within his knowledge, in the absence of any explanation, the presumption under Section 106 of Evidence Act has to be applied as against the accused.

மேற்கண்ட வழக்கின் தீரப்புகளிலிருந்து ஒரு எதிரியிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது போலீஸ் அதிகாரியால் பெறப்பட்டு அதன் மூலம் புதிதாக ஒரு சங்கதி கண்டறிப்பட்டு இருந்தால் அந்த புதிதாக கண்டெடுக்கப்பட்ட சங்கதியை மட்டும் எதிரிக்கு எதிராக ஏற்றுக் கொள்ள இயலுமே தவிர ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் எதிரிக்கு எதிராக ஏற்க இயலாது என்றும், எதிரியிடம் அவருக்கு எதிராக அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவண்களை பொறுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) ன் கீழ் ஒரு வாய்ப்பு அளிக்கும் போது எதிரி உண்மையாக என்ன நடந்தது என்றோ அல்லது அந்த சாட்சிய சான்றாவணங்களை குறிப்பாக மறுக்கும் விதத்திலோ தன்னுடைய பதிலை நீதிமன்றத்தின் முன் தெளிவாக தன்னிச்சையாக சமர்ப்பித்து இருக்கலாம். அவ்வாறு செய்யாமல் எதிரி அமைதியாக இருந்து விட்டால் அவருக்கு எதிராக இந்திய சாட்சிய சட்டம் 106 ன் கீழ் அனுமானம் ஏற்றுக் கொள்ளப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கினை பொறுத்த வரை 1-வது எதிரி மற்றும் 2-வது எதிரியின் வீட்டிலிருந்து பத்திரங்கள், பெயர் பட்டியல்கள், ரெசியும்கள், குறிப்பு எழுதிய டையரி, ஆகியவை புதியதாக கண்டெடுக்கப்பட்ட சங்கதிகள் அ.சா.ஆ.13, அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.ஆ.19 (கைப்பற்றுதல் மகசர்கள் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி) இந்த வழக்கின்

பொருண்மைகளுடன் பொருந்துவதாக உள்ளது. மேலும் அது வாய்மொழி சாட்சியங்களுடன் ஒத்துபோவதாகவே உள்ளது. அதனால் இந்திய சாட்சிய சட்டம் 27ன் கீழ் எதிரிகளின் வீட்டிலிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கண்டெடுக்கப்பட்ட அந்த சான்றாவணங்கள் எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்தலாம் என்றும், அவை அரசு தரப்பு வழக்கை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமைந்துள்ளதாகவே கருதி எதிரிகளின் மோசடி செய்யும் குற்ற எண்ணம் நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(4) 1–வது மற்றும் 2–வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட தடயங்கள் குறித்து பரிசீலணை செய்கையில்,

Balu Vs. State of Kerala held on 26th August 2021 என்ற தீர்ப்பில்.... " No confession made to a Police Officer is admissible" is firmly ingrained in Section 25 of the Evidence Act. But, there are certain exceptions to it. If it is made in the presence of a Magistrate, it can be relied on (see section 26 of the Evidence Act). Further, a limited exception to this aspect is also made in Section 27 of the Evidence Act. By way of a proviso to the proceeding sections prohibiting the admissibility of confession made to Police, Section 27 provides limited exception to the embargo in Section 25 of the Evidence Act. What is permitted in Section 27 is 'so much of information' in the Confessional statement of the Accused ' leading to the discovery or recovery of a fact' and nothing more than that (See Pullukuri Kottaiya v. King-Emperor, AIR 1947 PC 67. Such recovery consequent upon such information is commonly known as 'Section 27 Evidence Act Recovery' or 'Recovery Evidence'. So much of information that led to the discovery of a fact although it was made to police while the Accused was in their custody is admissible. It can be relied on to convict the marker".

Gulab Chand V. State of M.P, 1995 (3) SCC 574, என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில் "In a case of murder for gain under Sections 302, 394, and 397 IPC while dealing with the question of raising presumption under section 114 of the Evidence Act, the Hon'ble Apex Court held as under: "It is true that simply on the recovery of the stolen articles, no inference can be drawn that a person in possession of the stolen articles is guilty of the offence of murder and robbery. But culpability for the aforesaid offence will depend on the facts and circumstances of the case and the nature of evidence adduced."

Tulsiram Kanu V. State, AIR 1954 SC 1 என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில் "Dealing with the question of presumption under section 114 of Evidence Act, when the ornaments of the deceased were found from the possession of the Accused, soon after the murder, the Hon'ble Apex Court held as under: "In the facts of this case, it appears to us that murder and robbery have been proved to have been integral parts of the same transaction and therefore the presumption arising under illustration (a) of section 114 of the Evidence Act is that not only the Appellant committed the murder of the deceased but also committed robbery of her ornaments".

Earabhdrappa Alias Krishnappa V. State of Karnataka, 1983(2) SCC 330, என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில் " presumption was raised that the Accused who pointed out the place from where the ornaments were seized has committed robbery and murder. The Hon'ble Apex Court came to such a conclusion since apart from the recovery evidence quite a number of additional circumstances were established".

Thus, a survey of the above cases and the scope of section 114 of the Evidence Act as illustrated by Illustration (a) to it, so far as the charge of murder and theft or robbery or dacoity is concerned based on the only incriminating circumstance, namely, recovery of articles of the deceased from the possession of the Accused based on his Confessional Statement a conviction for murder under Section 302 IPC cannot be recorded unless there were additional incriminating circumstances pointing out to the fact that the Accused is concerned with the murder of the victim.

Limbaji and others v. State of Maharastra 2001(10) SCC 340, **என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில் "**Clarified that incriminating parts of confession cannot be used against accused; non-incriminating parts leading to recovery are admissible".

"The presumption under section 114 Illustration (a) could be safely drawn and the circumstance of recovery of the incriminating articles within a reasonable time after the incident at the places shown by the accuse unerringly points to the involvement of the accused. Be it noted that the appellants who were in a position to explain as to how they could lay their hands on the stolen articles or how they had the knowledge of concealment of the stolen property, did nothing to explain; on the other hand, they denied knowledge of recoveries which in the light of the evidence adduced by the prosecution must be considered to be false. By omitting to explain, it must be inferred that either they intended to suppress the truth or invited the risk of presumption being drawn. Thus, the presumption as to the commission of offence envisaged by Illustration (a) of section 113 is the minimum that could be drawn and that is what the trail court did".

மேற்கண்ட வழக்கின் தீர்ப்பிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தடயமானது எதிரியின் உடைமையிலிருந்து எடுக்கப்பட்டிருந்தால் அந்த பொருள் அவரிடமிருந்துதான் எடுக்கப்பட்டது என்று அர்த்தம். அந்த பொருளுக்கும் அவருக்கும் சம்பந்தம் இருப்பதாகவே அவருடைய அறிவுக்கு எட்டிய வகையில் இருந்தது என்று அனுமானிக்க வேண்டும் என்று தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், அந்த கண்டுப்பிடிக்கப்பட்ட ஆவணங்களானது வழக்கின் மற்ற சாட்சியங்களுடன் ஒத்து போவதாக அல்லது ஒன்றுக்கொன்று ஒத்திசைவாக இருக்கும் பட்சத்தில் அது எதிரியின் குற்ற எண்ணத்திற்கு மேலும் வலுவூட்டுகிறது என தீர்வு காணப்பட்டுள்ளது. அதன் படி இந்த வழக்கிலும்

பத்திரங்கள், ரெசியும்கள், பெயர் பட்டியல், குறிப்பு எழுதப்பட்ட டையரி ஆகியவை எதிரிகளின் வசத்திலிருந்து எடுக்கப்பட்டதால் அது அவர்களுக்கு சம்பந்தப்பட்டது என்றும், அது வழக்கின் மற்ற சங்கதிகளுடன் பொருந்தியிருப்பதால் எதிரிகளின் குற்ற எண்ணமானது வலுவூட்டப்படுகிறது என்ற அனுமானத்தை இந்திய சாட்சிய சட்டம் 114ன் கீழ் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(5) 1–வது எதிரியும், 2–வது எதிரியும் செய்த செயல்கள் இ.த.ச பிரிவு 120–B ன் கீழ் கூட்டு சதி என்ற குற்றத்தை புரிந்துள்ளார்களா என்ற வாதத்தினை பரிசீலணை செய்கையில்,

The State (NCT) of Delhi Versus Khimji Bhai Jadeja (2026) 1 MLJ (Crl) 330 (SC) என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில், "The end result of the investigation undertaken is that an offence under Section 120B IPC has been alleged, i.e., a criminal conspiracy. Therefore, as a conspiracy is alleged, leading to multiple acts of cheating against different individuals, the course adopted by the Delhi Police in registering one FIR and treating the complaints received from 1851 other complainants as statements under Section 161 CrPC, was the correct course of action to have been adopted at that stage. The inference to be drawn from the chargesheets, as filed, is left to the Magistrate concerned to consider, so as to ascertain whether the various acts of cheating attributed to the accused persons constitute part of the 'same transaction', thereby bringing them within the ambit of Section ection 220(1) CrPC and Section 223 (a) & (d) CrPC."

Ajay Aggarwal Vs. Union of India and others (1993 (3) SCC 609) என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில், " Section 120-A of the IPC defines 'conspiracy' to mean that when two or more persons agree to do, or cause to be done an illegal act, or an act which is not illegal by illegal means, such an agreement is designated as "criminal conspiracy". No agreement except an agreement to commit an offence shall amount to a criminal conspiracy, unless some act besides the agreement is done by one or more parties to such agreement in furtherance thereof. Section 120-B of the IPC prescribes punishment for criminal conspiracy. It is not necessary that each conspirator must know all the details of the scheme nor be a participant at every stage. It is necessary that they should agree for design or object of the conspiracy. Conspiracy is conceived as having three elements : (1) agreement (2) between two or more persons by whom the agreement is effected; and (3) a criminal object, which may be either the ultimate aim of the agreement, or may constitute the means, or one of the means by which that aim is to be accomplished. It is immaterial whether this is found in the ultimate objects".

Shivnarayan Laxminarayan Joshi and others vs. State of Marashtra (1980 (2) SCC 465) என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில், "this Court said that it was manifest "that a conspiracy is always hatched in secrecy and it is impossible to adduce direct evidence of the same. The offence can be only proved largely from the inference drawn from acts or illegal omission committed by the conspirators in pursuance of a common design."

Mohammad Usman Mohammad Hussain Maniyar and others Vs. State of Maharastra (1981 (2) SCC 443) என்ற **உச்ச நீதிமன்ற தீர்ப்பில்,** "It is true that there is no evidence of any express agreement between the appellants to do or cause to be done the illegal act. For an offence under Section 120-B, the prosecution need not necessarily prove that the perpetrators expressly agreed to do or cause to be done the illegal act; the agreement may be proved by necessary implication."

State of Himachal Pradesh Vs. Kishan Lal Pardhan and others (1987 (2) SCC 17) என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில், "The Court said that everyone of the conspirators need not have taken active part in the commission of each and every one of the conspiratorial acts for the offence of conspiracy to be made out. The offence of criminal conspiracy consists in a meeting of minds of two or more persons for agreeing to do or causing to be done an illegal act or an act by illegal means, and the performance of an act in terms thereof. If pursuant to the criminal conspiracy the conspirators commit several offences, then all of them will be liable for the offences even if some of them had not actively participated in the commission of the offences."

Kehar Singh and others Vs. State (Delhi Administration) (1988 (3) SCC 609) என்ற **உச்ச நீதிமன்ற தீர்ப்பில், "**the Court said that the most important ingredient of the offence of conspiracy is agreement between two or more persons to do an illegal act. The illegal act may or may not be done in pursuance of agreement, but the very agreement is an offence and is punishable".

மேற்கண்ட உச்ச நீதிமன்ற தீர்ப்புகளில் இ.த.ச 120–A மற்றும் 120–B கூட்டு சதி மற்றும் கூட்டு சதிக்கான தண்டணைக்கான அத்தியாவசியமான கூறுகள் குறித்து பரிசீலணை செய்திருப்பது இவ்வழக்கின் சங்கதிகளுடன் பொறுந்துவதாகவே உள்ளது. இந்த வழக்கானது 1–வது மற்றும் 2–வது எதிரியின் செயல்களான ஒவ்வொரு நபரிடமிருந்து தனித்தனியாக வெவ்வேறு தேதிகளில் அவர்களிடம் பேசி அவர்களது மனநிலைக்கு ஏற்றவாறு தொடர்ச்சியாக பணத்தை பெறும் கூட்டுசதியை செய்துள்ளார்கள். **அ.சா.1 முதல் அ.சா.7, அ.சா.10 முதல் அ.சா.59 வரை மற்றும் அ.சா.62, அ.சா.65, அ.சா.66 ஆகிய ஒவ்வொரு சாட்சியும் 1–வது எதிரி சக்திவேலிடம் கொடுத்திருப்பதாகவும், அவர் 2–வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்திருப்பதாகவும், அ.சா.16 லதா தனது மகனுக்கு வேலை வாங்குவதற்காக 2–வது எதிரியான கோவிந்தலெட்சுமி பணம் கேட்டதால் கொடுத்துள்ளதாகவும், லதா உன் அக்கா தானே அவரும் தான் பணம்**

கொடுத்துள்ளார் என அ.சா.17 ஐ 2–வது எதிரி போனில் பேசி மேற்கொண்டு வேலைக்கான நம்பகத்தன்மையை ஏற்படுத்தியுள்ளார். அ.சா.22 சண்முகப்பிரியா தனது அண்ணனுக்கும், 1–வது எதிரிக்கும் நல்ல பழக்கம், தனக்கும் 2–வது எதிரிக்கும் நல்ல பழக்கம் 2–வது எதிரி நீதிமன்றத்தில் பணிபுரிகிறார் என ஊர்ஜிதம் செய்த பிறகு தான் அ.சா.22க்கும் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தந்து விடுவேன் என 2–வது எதிரி உறுதியளித்தார் பின்புதான் பணத்தினை 1–வது எதிரியிடம் கொடுத்ததாகவும், அ.சா.26 ஆனந்தநாயகியிடம் 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் போது நீதிமன்ற கேள்விகளாக 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரியை எங்கு எப்போது பார்த்தீர்கள் கோவிந்தலெட்சுமியை காண்பித்து 1–வது எதிரி என்ன கூறினார் என கேட்டதற்கு 1–வது எதிரியின் வீட்டின் பின்னாடி குடியிருக்கும் கோவிந்தலெட்சுமியை 1–வது எதிரி அழைத்து வந்து இவரிடம் தான் பணம் கொடுத்துள்ளேன் நானும், இவரும் சேர்ந்து தான் வேலை வாங்கி தருகிறேன் என்று கூறியுள்ளார்.

அதை அனுசரிக்கும் வகையில் 1வது எதிரி பணத்தை பெற்ற பிறகு 2–வது எதிரி வேலை குறித்து கேட்க வரும் நபரிகளிடம் பணத்திற்கும், வேலைக்கும் நான் உறுதியளிக்கிறேன் என்று 2–வது எதிரி சொல்வதும், உங்கள் பணத்தை கொடுக்க வேண்டியவர்களிடம் கொடுத்துவிட்டேன் என்றும், அவர்கள் இன்று சென்னை கிளம்புகிறார்கள் அல்லது லீவில் இருக்கிறார்கள் அவர்கள் வந்தவுடன் வேலை கன்பார்ம் ஆகிவிடும் என்று 2–வது எதிரி சொல்வதுமாக இருந்துள்ளார். மேலும் 1–வது மற்றும் 2–வது எதிரி சேர்ந்து சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள பணம் கொடுத்தவர்களிடம் ரூ.20/– பத்திரங்களில் தனித்தனியாகவும், ரூ.20/– பத்திரத்தில் 7 நபர்களுக்கு ஒருமுறையும், ரூ.50/– பத்திரத்தில் 15 நபர்களுக்கு சேர்த்து ஒரு முறையும், பணத்திற்கு நாங்கள் கேரண்டி அப்படி இல்லை என்றால் உங்களுடைய பணத்தை வட்டியுடன் திருப்பி தந்து விடுகிறோம் என பத்திரங்களை எழுதி

சாட்சிகளை நம்ப வைத்து கூட்டு சதி செய்து பணத்தை பெற்றுள்ளார்கள் என சாட்சியங்களிலிருந்து உறுதி செய்யப்படுகிறது.

மேலும், இ.த.ச.பிரிவு 120–B கூட்டு சதி என்பதை பொறுத்த வரை 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரி ஒன்றாக சேர்ந்து மற்றவர்களிடமிருந்து பணத்தை பெற்று இலாபம் அடைய வேண்டும் என்ற குற்ற எண்ணத்தில் ஒன்றாக திட்டமிட்டு சாட்சிகளை ஏமாற்றி பணத்தை நம்பி கொடுக்க வைக்கும் குற்றத்தை புரிந்துள்ளார்கள் என தீர்மானிக்க முடிகிறது. 2–வது எதிரி சாட்சிகளை ஏமாற்றியும், 1–வது எதிரியின் செயல்களுக்கு முழுவதும் உறுதுணையாக இருந்துள்ளார். பின்னர் 1–வது எதிரி தானும், 2–வது எதிரியிடம் பணத்தை கொடுத்து ஏமாந்து விட்டது போல் சாட்சிகளிடம் ஒரு நாடகத்தை நடத்தி போலீஸில் புகார் அளித்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால் 1–வது எதிரி தரப்பில் அதை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு ஆதாரமும் நீதிமன்றத்தின் முன் சாட்சியமாக சமர்பிக்கப்படவில்லை. 2–வது எதிரி தனக்கு எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை 1–வது எதிரியே அனைத்திற்கும் பொறுப்பு என்று சொல்லி இந்த குற்றங்களிலிருந்து தன்னை விடுவிக்க நாடகத்தை நடத்தியுள்ளார். ஆகவே இ.த.ச பிரிவு 120–B ன் கீழ் எதிரிகள் இருவரும் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(6) 1–வது எதிரியும், 2–வது எதிரியும் செய்த செயல்கள் இ.த.ச பிரிவு 420–ன் கீழ் மோசடி என்ற குற்றத்தை புரிந்துள்ளார்களா என்ற வாதத்தினை பரிசீலணை செய்கையில்,

இ.த.ச பிரிவு 420ன் கீழ் வரும் குற்றத்திற்கான அவசியமான உட்கூறுகள் இந்த வழக்கில் நிறைந்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதாவது, எதிரிகள் இருவரும் பணத்தை கொடுத்தால் நீதிமன்றங்களில் அரசு வேலையை வாங்கி தருவது உறுதி என பல்வேறு காரணங்கள் சொல்லி அவரவர்களது படிப்புக்கு ஏற்றவாறு சாட்சிகளை நம்ப வைத்து (Dishonest Inducement)

அவர்களிடமிருந்து பணத்தை பெற்று அவர்களுக்கு பண இழப்பு (causing loss) ஏற்படுத்தியுள்ளார்கள். எதிரிகள் இருவரும் பணத்தை சாட்சிகளிடமிருந்து பெற்றதன் மூலம் சட்டமுரண்பட்ட லாபம் (wrongfull gain) அடைய வேண்டுமென்ற எண்ணத்தில் சரியான காரணம் அல்லாமல் அல்லது சட்டரீதியான நடவடிக்கை அல்லாத செயலை (Illegal Act) செய்ய தவறான உள்நோக்கத்துடன் (Intentionally) சாட்சிகளை நம்ப வைத்து பணத்தை கூட்டு சதி செய்து கொடுக்க வைத்துள்ளார்கள் என சாட்சியங்களிலிருந்து உறுதி செய்யப்படுகிறது.

மேலும், சாட்சியங்களின் சாராம்சத்திலிருந்து கீழ்கண்ட சங்கதிகள் மூலம் எதிரிகள் மோசடி செய்துள்ளார்கள் என ஊர்ஜிதம் செய்யப்படுகின்றது. 1–வது மற்றும் 2–வது எதிரிகள் ஒவ்வொரு நபரிடமிருந்து தனித்தனியாக வெவ்வேறு தேதிகளில் அவர்களிடம் பேசி அவர்களது மனநிலைக்கு ஏற்றவாறு தொடர்ச்சியாக பணத்தை பெற்ற செயல் எதிரிகள் இருவரும் கூட்டுச் சதி உடன் கூடிய மோசடியை செய்துள்ளார்கள் என உறுதி செய்யப்படுகிறது. அதாவது அ.சா.1 முதல் அ.சா.7, அ.சா.10 முதல் அ.சா.59, அ.சா.62, அ.சா.65, அ.சா.66 ஆகிய ஒவ்வொருவரிடமும் நீதிமன்றத்தில் வேலை என பணத்தை ஏமாற்றி பெற்றதிலிருந்தும், அ.சா.26 ஆனந்தநாயகி என்பவரிடம் காது கேட்காத தனது மகனுக்கு உடல் ஊனமுற்ற கோட்டாவில் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாகவும், அ.சா.23 அசோக்ராஜிடம் 10வது வரை படித்துள்ளதால் நீதிமன்றத்தில் கட்டு எடுத்துக் கொடுக்கும் வேலை வாங்கி தருவதாகவும், அ.சா.39 அர்ஜுனனிடம் இரண்டு வேலை தான் உள்ளது, நாளை காலை 8.30 மணிக்குள் பணம் கொடுத்தால் வேலை கன்பார்ம் என்றும், படிப்புக்கு ஏற்றவேலை இருக்காது உதவியாளர் வேலைக்கு சென்று விடு என்றும், அ.சா.43 புஷ்பவள்ளி என்பவரிடம் அவர் மூலிகை பொடி வியாபாரம் செய்து வந்ததால் அவர் கடவுள் நம்பிக்கையில் அதிகம் இருப்பார் என்ற அர்த்தத்தில் அவர் கொடுத்த ரூ.1,00,000/–த்தை வாங்கி சாமி படத்தின் முன் வைத்து

ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பணத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டு சென்றும், அ.சா.45 ராமசந்திரன் என்பவரிடம் நீதிமன்றத்தில் ஆபிஸ் அசிஸ்டன்ட் வேலை வருகிறது என்று சொல்லி அவரிடமிருந்து ரூ.1,00,000/– மற்றும் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டு அவர் பணத்தை திருப்பி கேட்ட போது தேதி போடாமல் HDFC வங்கி காசோலையை ரூ.1,00,000/–த்திற்கு எழுதி கொடுத்து வசூலுக்கு போகும் போது தேதி போட்டுக் கொள்ளுங்கள் என 1–வது எதிரி சொல்லியுள்ளார். இந்த மாதிரியான செயல்கள் அனைத்தும் ஏமாற்றுதல் மற்றும் மோசடி செய்யும் செயல்களை எதிரிகள் செய்துள்ளார்கள் என்பது உறுதி செய்யப்படுகின்றது.

1–வது எதிரியை பார்த்து பணத்தை கொடுக்க வந்த நபர்களிடம் தான் சட்டப்படி சரியானதொரு காரியத்தை தான் செய்வது போல மாயத்தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில், தவறு ஏதும் செய்யவில்லை என பணம் கொடுக்க வரும் நபர்கள் நம்பும் வகையில் 1–வது எதிரி வீட்டில் 2வது எதிரி இருப்பது, 2–வது எதிரி சாட்சிகளிடம் பேசுவது, 2–வது எதிரியும் அதற்கு முழுவதும் செயல்பட்டு நீதிமன்றத்தில் வேலைக்கும் சாட்சிகள் கொடுத்த பணத்திற்கும் நான் உறுதி அளிக்கிறேன் என சொல்வதும், ரூ.20/– பத்திரத்தில் கையொப்பமிட்டு கொடுப்பதும், மேலும் 1–வது எதிரியின் அவருடைய மனைவி, அம்மா, அப்பா மற்றும் குழந்தைகள் ஆகியோர்களில் யாரேனும் இருவர் இருந்து 1–வது எதிரி பணம் கொடுக்க வந்த சாட்சிகளிடம் பணத்தை பெற்று உள்ளார்.

1–வது எதிரி அவரை சுற்றி இருந்த பொதுமக்களில் அவர் பழகும் நபர்களில் அவர் அவரவர்களது படிப்பு, வேலை அதாவது பள்ளி படிப்பு முதல் பட்டப்படிப்பு வரை முடித்த நபர்கள் அல்லது தனியார் வேலையில் இருப்பவர்கள் குடும்ப பெண்மணிகள் ஆகியோர்களை குறிவைத்து அவர்களுக்கு ஏற்றவாறு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர், இளநிலை பணியாளர், அட்டண்டர்,

கணினி வேலை, டைப்பிஸ்டு, ஓட்டுநர் வேலை ஆகியவற்றை வாங்கி தருவதாக சொல்லி அவர்களை நம்ப வைத்து பணத்தை பெற்றுள்ளார்.

1–வது எதிரி மன்னார்குடியில் ஸ்டூடியோ வைத்திருக்கும் ரமேஷ், அண்ணாதுரை, செல்வம், சுரேஷ், தீபக், பன்னீர்செல்வம், தினேஷ், இளவழகன், செந்தில்குமார், ஐயப்பன் போன்ற நபர்களை வினையூக்கிகளாக பயன்படுத்தி அவர்கள் மூலம் அவர்களுக்கு தெரிந்த நபர்களை தன்னுடைய வலையில் விழ வைக்க வேண்டும் என்று ரமேஷ் போன்றோரை நம்ப வைத்து அவர்கள் மூலமாக வேலை உறுதி என சொல்ல வைத்து பணத்தை பெற்றுள்ளார். ஆனால் இந்த நபர்களுக்கு கூட 1–வது எதிரியின் உண்மையான திட்டம் என்ன என அறியாமலேயே இருந்துள்ளார்கள். அ.சா.66 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள ரமேஷ் என்பவரின் சாட்சியத்திலிருந்து அவர் நல் எண்ணத்திலேயே செயல்பட்டுள்ளார் என அறிய முடிகிறது. 1–வது எதிரி பயன்படுத்திய இந்த ஆட்களுக்கு கூட 1–வது எதிரி உண்மையாக அரசு வேலைக்கு தான் உதவி செய்கிறார் என நினைத்து அவர்கள் அவர்களை சார்ந்த நபர்களுக்கு 1–வது எதிரியை பற்றி பரிந்துரை செய்துள்ளார்கள். ஆனால் 1–வது எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை கேள்விகளில் 1–வது எதிரிக்கும், அவர் பயன்படுத்திய இந்த வினையூக்கி நபர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றவாறு பணத்தை 1–வது எதிரி நேரடியாக பெறவில்லை என்றும், ரமேஷ் போன்ற நபர்களிடம் தான் பணத்தை கொடுத்தார்கள் மோசடியில் அவர்களும் தான் ஈடுபட்டுள்ளார்கள் என வழக்கை திசை திருப்புவதற்காக கேட்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நீதிமன்றம் மேற்கண்ட கேள்விகளுக்கு சாட்சிகள் அளித்த பதிலிருந்து இந்த நபர்கள் மீது குற்ற வழக்கு முகாந்திரம் ஏதுவும் இல்லை என முடிவு செய்கிறது. மேலும், அனைவரது பதில்களுமே 1–வது எதிரியை வந்து சேர்ந்ததாகவே உள்ளது.

பணம் கொடுத்த நபர்கள் அனைவரும் பிப்ரவரி அல்லது மார்ச் ஆகிய மாதங்களில் கொடுத்துள்ளார்கள். ஆரம்பத்தில் ஒரு நபர்களை குறி வைத்த 1–

வது எதிரி மார்ச் மாதத்திற்கு மேலாக ஒரு குடும்பத்தில் இரண்டு நபர்களை குறி வைத்துள்ளார் அல்லது அவர்களது நண்பர்களையும் சேர்த்து குறி வைத்து தலா ரூ.1,00,000/– என மூன்று நபர்களுக்கு அல்லது நான்கு நபர்களுக்கு சேர்த்து பணத்தை வாங்கி மோசடி செய்துள்ளார்.

2–வது எதிரியை சாட்சிகள் அணுகும் போது பணத்திற்கு நான் உறுதி வேலை கண்டிப்பாக வேலை கிடைத்துவிடும் இல்லை என்றால் பணத்தை திருப்பி கொடுத்து விடுவோம் என சொல்லியும், பின்பு பணத்தை 1–வது எதிரியிடம் தானே கொடுத்தீர்கள் நீங்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும் என்று சொல்லியும் வந்துள்ளார். 2–வது எதிரிக்கும் 1–வது எதிரி பணம் வாங்கி விஷயத்திற்கும் சம்பந்தம் இல்லையென்றால் பணம் கொடுத்த சாட்சிகள் நீதிமன்றத்திற்கு 2–வது எதிரியை பார்த்து கேட்க வரும்போது 2–வது எதிரி தன்மீது மண்ணெண்ணெய்யை ஊற்றிக் கொண்டு நாடகத்தை நடத்தியுள்ளார். அதாவது பணம் குறித்து யாரும் தன்னிடம் வந்து கேட்டுவிடகூடாது என்ற எண்ணத்தில் தான் பணிபுரியும் நீதிமன்றத்திலேயே மண்ணெண்ணெய்யை ஊற்றிக் கொண்டு 1–வது எதிரி தன்னை டார்ச்சர் செய்வதாக சொல்லியுள்ளார். மேலும் மண்ணெண்ணெய்யை 2–வது எதிரி ஊற்றி கொண்டு நேரடியாக முதன்மை மாவட்ட நீதிபதியை பார்க்க வேண்டும் என வந்ததை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அ.சா.60 ராஜா விசாரணை செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், 2–வது எதிரி 1–வது எதிரி தன்னை டார்சர் செய்து வருகிறார் என்றும், எந்த வகையில் டார்சர் செய்து வருகிறார் என்றும், இதுநாள் வரையிலும் புகார் ஏதும் 2–வது எதிரி கொடுக்கவில்லை. 2–வது எதிரி பக்கம் எந்த தவறும் இல்லை என்றால் அவர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அல்லது காவல் நிலையத்தை அணுகி இருக்கலாம். அதை விடுத்து சாட்சிகளிடம் முன்னுக்கு பின் முரணாக பேசி வந்துள்ளார். 2–வது எதிரியின் இந்த நடவடிக்கையும் சதி மற்றும் மோசடி குற்றத்தில் அடங்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும், 2–வது எதிரி 1–வது எதிரியின்

அனைத்து செயல்களுக்கும் பின்புலத்திலிருந்து கூட்டு சதி செய்து மோசடி குற்றத்தை புரிந்துள்ளார் என்பது இதற்கு முன்பாகவே பரிசீலணை செய்யப்பட்டுள்ளதில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரி சேர்ந்து இ.த.ச பிரிவு 420ன் கீழ் மோசடி குற்றத்தை புரிந்துள்ளார்கள் என முடிவு செய்யப்படுகின்றது.

(7) 1–வது எதிரியும், 2–வது எதிரியும் செய்த செயலானது இ.த.ச 406–ன் கீழ் குற்றமுறு நம்பிக்கை மோசடி குற்றத்தை புரிந்துள்ளார்களா என்ற வாதத்தை பரிசீலணை செய்கையில்,

இவ்வழக்கின் சாட்சிகளின் சாராம்சத்திலிருந்து சாட்சிகள் 1–வது மற்றும் 2–வது எதிரியிடம் தங்களுடைய பணத்தை சாட்சிகளுக்கு வேலை கிடைத்து விடும் என்ற அவநம்பிக்கையில் 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரிகள் சொன்ன வார்த்தைகளை நம்பி 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரியிடம் ஒவ்வொருவரும் தலா ரூ.1,00,000/–த்தை மொத்தம் 83 நபர்கள் கொடுத்து வைத்து நீதிமன்றத்தில் அரசு வேலை கிடைத்து விடும் என்ற கனவில் எதிர்பார்த்து எதிரிகளை நம்பி இருந்துள்ளார்கள். ஆனால் எதிரிகள் அந்த பணத்தை தங்களுடைய நோக்கதிற்காக சாட்சிகளிடமிருந்து பெற்று சட்டப்படியான ஒரு காரியத்தை செய்வது போல் பிம்பத்தை ஏற்படுத்தி அந்த பணத்தை தங்களுடைய சொந்த சுய லாபத்திற்காக பயன்படுத்தியுள்ளார்கள் என அறிய முடிகிறது. ஏனெனில் நீதிமன்றத்தில் அரசு வேலை என்ற ஒரு பொய்யான விளம்பரத்தை சாட்சிகளிடம் ஏற்படுத்தி சட்ட முரண்பட்ட காரியத்தை செய்துள்ளார்கள். எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் வேலை வாங்கி கொடுக்க இயலாது வேலை கிடைத்தால் அது தாங்கள் வாங்கி கொடுத்ததாக பணம் கொடுத்தவர் நினைத்து கொள்ளட்டுமே என நினைத்து செயல்பட்டுள்ளார்கள். அது வரை பணம் பெருபவர்களிடம் பெற்று தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம் அதிக லாபம் அடையலாம் என்ற எண்ணத்தில்

செயல்பட்டுள்ளார்கள். இதற்கு ஆதாரமாக **அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளுக்கு பத்திரங்களை எழுதி கொடுத்து நம்பிக்கையை ஏற்படுத்தி அதனை மீறி உள்ளார்கள். அதாவது வேலை கிடைக்கவில்லை என்றால் வட்டியுடன் பணத்தை நாங்கள் திருப்பி தந்து விடுகிறோம் என தனித்தனியாகவும், ஒன்றாகவும் எழுதி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள்.** **(Entrustment of property by witness and criminally breach of trust by accused U/s.406 IPC) அதற்கு சாட்சியாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.16, அ.சா.ஆ.23 ஆகிய பத்திரங்கள் குறியீடு செய்யப்பட்டும் அதை ஒத்து சாட்சிகளும் சாட்சியம் அளித்துள்ளார்கள்**. மேலும் அ.சா.16யிடம் பணத்தை பெற்று, அ.சா.17யிடம் அ.சா.16ம் தான் பணத்தை கொடுத்துள்ளார், நீங்களும் கொடுக்கலாம் என்று கூறி நம்பிக்கையை ஏற்படுத்தி அதனை 2–வது எதிரி மீறியுள்ளார். அ.சா.39 அர்ஜுனன் என்பவரிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் நாளை திருத்துறைப்பூண்டியை சேர்ந்தவர்கள் 1–வது எதிரி சக்திவேலிடம் பணம் கொடுக்கிறார்கள் என்று அ.சா.66 ரமேஷ் மூலம் சொல்ல வைத்து அ.சா.39 1–வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு வந்த போது 20 ரெசியும் பேப்பர்களை எடுத்து காண்பித்து இரண்டு வேளை தான் உள்ளது, படிப்புக்கு ஏற்ற வேலை இருக்காது உதவியாளர் வேலைக்கு சென்று விடு என்று 1–வது எதிரி சொல்லி நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார். அ.சா.53 சிவதியாகராஜன் என்பவரிடம் அவர்கள் குடும்பத்தை சார்ந்த மூன்று நபர்கள் தலா ரூ.3,00,000/– வாங்கி நம்பிக்கையை ஏற்படுத்தி ஏமாற்றியுள்ளார்கள். அ.சா.45 ராமசந்திரனிடம் பெற்ற தொகைக்கா HDFC காசோலையை தேதி போடாமல் ரூ.1,00,000/–க்கு கொடுத்து 1–வது எதிரி ஏற்படுத்தியுள்ளார். அ.சா.58 ராஜேஷ் என்பவரிடம் பணம் தயார் செய்வதற்கு காலதாமதம் ஆனதால் திருவாரூர் கோர்ட்டிற்கு பணம் வாங்கி விட்டதாகவும், பக்கத்து கோர்ட்டில் இதே போன்று வேலை இருப்பதாகவும், அங்கு வாங்கி தருவதாகவும் எதிரிகள் கூறி நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார்கள். **அ.சா.61 புகேழந்திரன் என்பவர் தனக்கு பணம்**

தேவைப்படுவதாக சொன்னதால் 1–வது எதிரி சக்திவேல் ரூ.5,00,000/–த்தை 1–வது எதிரி மோடி ஸ்கீம் மூலம் அவருக்கு லோன் கிடைத்ததாக சொல்லி புகழேந்திரனுக்கு கடனாக கொடுத்து 1–வது சுய லாபம் அடைந்துள்ளார். (Dishonestly misappropriation of property or converting that property to his own use) மேலும் அ.சா.61 புகழேந்திரனுக்கு 2–வது எதிரி கோவிந்தலெட்சுமி அ.சா.63 சாந்தி என்பவர் மூலம் ரூ.6,50,000/– கடனாக கொடுத்து 2–வது எதிரி சுய லாபம் அடைந்துள்ளார். அ.சா.63 சாந்தி தனக்கும் 2–வது எதிரிக்கும் வெகு நாட்களாக பழக்கம் என்றும், 2–வது எதிரி தன்னிடம் ரூ.2,00,000/– 2015–2016 வாக்கில் கேட்டதாகவும், அ.சா.63 சாட்சி புகழேந்திரன் என்பவரிடம் வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னதாகவும் அதிலிருந்து 2–வது எதிரி புகழேந்திரனும் அறிமுகமாகி புகழேந்திரனுக்கு 2–வது எதிரியின் உறவினர் ராஜசேகர் மூலமாக பணம் கொடுத்து வந்ததாக புகழேந்திரன் சொன்னதாக அ.சா.63 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.63 தனக்கும் 2–வது எதிரிக்கும் 2 வருட காலமாக எந்த பேச்சு வார்த்தையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட பரிசீலணையிலிருந்து 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரி சாட்சிகளை நம்ப வைத்து பத்திரங்களை எழுதி கொடுத்து அதனை மீறியும் புகழேந்திரன் என்பவருக்கு தங்களுடைய சுய லாபத்திற்காக அதிக லாபம் ஈட்டலாம் என்ற எண்ணத்தில் கடன் தொகை வழங்கி அதில் லாபம் பெறலாம் என்று குற்ற எண்ணத்தில் சாட்சிகளிடம் பணம் பெற்றுள்ளார்கள் என முடிவு செய்து இ.த.ச பிரிவு 406 ன் குற்றமுறு பண மோசடி குற்றத்தை செய்துள்ளார்கள் என முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக,

1–வது எதிரி மற்றும் 2–வது எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 120-B,

420, 406–ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரிகள் இக்குற்றத்தை செய்துள்ளார்கள் என அரசு தரப்பில் சந்தேகத்திக்கு இடமின்றி தெளிவாக நிரூபணம் செய்யப்படுள்ளது என மேற்கண்ட பரிசீலணையிருந்து தீர்மானிக்கப்படுகின்றது. பொதுவாக அரசு வேலைகள் விற்கப்படுவது இல்லை, அதுவும் நீதிமன்றத்தில் எழுத்து தேர்வு மூலமாகவும், நேர்முக தேர்வு மூலமாகவும் தான் பணி நியமணங்கள் செய்யப்படுகின்றன. 1–வது எதிரி மற்றும்2–வது எதிரி சாட்சிகளின் அறியாமையை பயன்படுத்தி மேற்கண்ட குற்றங்களை செய்து நீதிமன்றத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளார்கள் என கருதுகின்றது.

எதிரிகளுக்கு விதிக்கப்படும் தண்டனையின் விபரம்:

எதிரிகள் மீதான இ.த.ச சட்டப்பிரிவுகள் 120(பி), 420, 406–ன் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச.பிரிவு 248(2)–ன் கீழ் முடிவு செய்து,

1. எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 120(பி) ன் கீழ் 6 மாதங்கள் மெய்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.10,000/–மும் விதித்தும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 30 நாட்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுப்பவிக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகின்றது.

2. எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 420–ன் கீழ் 3 வருட மெய்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.10,000/–மும் விதித்தும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 30 நாட்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுப்பவிக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகின்றது.

3. எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 406 ன் கீழ் கீழ் 3 வருட மெய்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.10,000/– மும் விதித்தும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 30 நாட்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுப்பவிக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகின்றது.

4. எதிரிகள் தங்களுக்கு ஆறு மாதங்கள் மற்றும் 3 வருடங்கள் மற்றும் 3 வருடங்கள் என விதிக்கப்பட்ட மெய்க்காவல் சிறைதண்டனைகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து அனுபவிக்க வேண்டுமென கு.வி.மு.ச பிரிவு 31–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5. 1–வது எதிரி மற்றும் 2–வது எதிரிகள் தனித்தனியாக முறையே நீதிமன்ற காவலில் இருந்த 08.04.2019 முதல் 11.06.2019 வரையிலான மொத்தம் 64 நாட்களை கு.வி.மு.ச பிரிவு 428 ன் கீழ் கழிக்க உத்தரவிடப்படுகின்றது.

6.எதிரி வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி ரத்து செய்யப்படுகிறது. இந்த வழக்கில் தடயப் பொருட்கள் ஏதும் நீதிமன்ற பொருட்களாக தாக்கல் செய்யப்படவில்லை.

மொத்த அபராதம் ரூ.60,000/–

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து– தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு இன்று 20.04.2026ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–ஞா.லிசி)

நீதித்துறை

நடுவர்,

திருவாரூர்.

அரசுத் தரப்பு சாட்சிகள்

வரிசை எண்.	அரசு தரப்பு சாட்சிகள்	பெயர்
1.	அ.சா.1	சுரேஷ்
2.	அ.சா.2	தாசன்
3.	அ.சா.3	அழகர்
4.	அ.சா.4	தர்மராஜ்
5.	அ.சா.5	சுரேஷ்
6.	அ.சா.6	சக்திவேல்
7.	அ.சா.7	தினேஷ்
8.	அ.சா.8	ராஜேந்திரன்
9.	அ.சா.9	முருகதாஸ்
10.	அ.சா.10	இளவழகன்
11.	அ.சா.11	தேவி பாலா

12.	அ.சா.12	ஜெயகீதா
13.	அ.சா.13	நகுலன்
14.	அ.சா.14	காமாட்சி
15.	அ.சா.15	கலையரசன்
16.	அ.சா.16	லதா
17.	அ.சா.17	சண்முகசுந்தரம்
18.	அ.சா.18	சாய் விக்னேஷ்
19.	அ.சா.19	ஐயப்பன்
20.	அ.சா.20	குமரப்பன்
21.	அ.சா.21	கலியமூர்த்தி
22.	அ.சா.22	சண்முகபிரியா
23.	அ.சா.23	அசோக்ராஜ்
24.	அ.சா.24	குணசீலன்
25.	அ.சா.25	யோகலெட்சுமி
26.	அ.சா.26	அனந்தநாயகி
27.	அ.சா.27	பாலசந்தர்
28.	அ.சா.28	ஆர்.முகில்
29.	அ.சா.29	ஐஸ்வர்யா
30.	அ.சா.30	ராதிகா
31.	அ.சா.31	அய்யப்பன்
32.	அ.சா.32	உமாமகேஸ்வரி
33.	அ.சா.33	அப்பாஸ்
34.	அ.சா.34	முத்துப்பாண்டி
35.	அ.சா.35	சிவரஞ்ஜனி
36.	அ.சா.36	ஜெயசங்கர்
37.	அ.சா.37	வீரராஜன்
38.	அ.சா.38	ஜாய்மார்ட்டின்
39.	அ.சா.39	அர்ஜுனன்

40.	அ.சா.40	ஆனந்த்பாபு
41.	அ.சா.41	சுகபிரம்மம்
42.	அ.சா.42	வேல்முருகன்
43.	அ.சா.43	புஷ்பவள்ளி
44.	அ.சா.44	பிரேம்குமார்
45.	அ.சா.45	ராமசந்திரன்
46.	அ.சா.46	மார்கிரேட் சாந்தி
47.	அ.சா.47	ராஜன்
48.	அ.சா.48	சங்கீதா
49.	அ.சா.49	ராகினி
50.	அ.சா.50	பக்கரிசாமி
51.	அ.சா.51	மகேஸ்வரி
52.	அ.சா.52	தினேஷ்
53	அ.சா.53	சிவதியாகராஜன்
54.	அ.சா.54	செந்தில்
55.	அ.சா.55	அகிலரசன்
56.	அ.சா.56	பாலகுமார்
57.	அ.சா.57	பரமேஸ்வரி
58.	அ.சா.58	ராஜேஸ்குமார்
59	அ.சா.59	சுவாமிநாதன்
60	அ.சா.60	திரு.ராஜா
61	அ.சா.61	புகழேந்திரன்
62	அ.சா.62	சசி
63	அ.சா.63	சாந்தி
64	அ.சா.64	ரமேஷ்
65	அ.சா.65	அரவிந்த்குமார்
66	அ.சா.66	ரமேஷ்
67	அ.சா.67	மகாலெட்சுமி

68	அ.சா.68	கார்த்திகா
69	அ.சா.69	துர்கா
70	அ.சா.70	திருமதி.ராணி

அரசுத்தரப்பு சான்றாவணங்கள்

Judicial Form No.68

SL. No	Description to the exhibit and its date	Date, when the exhibit was filed in the case	How Marked	By whom filed	Remarks
1	புகார் மனு	03.11.2020	அ.சா.ஆ. 1	அ.சா.1	அசல்
2.	01.03.20219 தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்– பி.சுரேஷ்	03.11.2020	அ.சா.ஆ.2	அ.சா.1	அசல்
3.	04.02.20219 தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்– பி.சுரேஷ்	03.11.2020	அ.சா.ஆ.3	அ.சா.1	அசல்
4.	01.03.20219 தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்– பி.அழகர்	03.11.2020	அ.சா.ஆ.4	அ.சா.3	அசல்
5.	01.03.20219 தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்– பி.தர்மராஜ்	04.11.2020	அ.சா.ஆ.5	அ.சா.4	அசல்
6	01.03.20219 தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்– தினேஷ்	10.12.2020	அ.சா.ஆ.6	அ.சா.7	அசல்
7	ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.8ன் கையொப்பம்	10.12.2020	அ.சா.ஆ.7	அ.சா.8	அசல்
8	கைப்பற்றுதல் மகசரில் அ.சா.8ன் கையொப்பம்	10.12.2020	அ.சா.ஆ.8	அ.சா.8	அசல்
9	ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.15ன் கையொப்பம்	29.12.2020	அ.சா.ஆ.9	அ.சா.15	அசல்
10	கைப்பற்றுதல் மகசரில் அ.சா.15ன் கையொப்பம்	29.12.2020	அ.சா.ஆ.10	அ.சா.15	அசல்

11	கைப்பற்றுதல் மகசர் தொடர்ச்சியில் அ.சா.15ன் கையொப்பம்	27.09.2020	அ.சா.ஆ.11	அ.சா.15	அசல்
12	ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.64 ன் கையொப்பம்	27.09.2022	அ.சா.ஆ.12	அ.சா.64	அசல்
13	கைப்பற்றுதல் மகசர்	27.09.2022	அ.சா.ஆ.13	அ.சா.64	அசல்
14	Name list மற்றும் Resume–7 நபர்கள்	27.09.2022	அ.சா.ஆ.14	அ.சா.64	நகல்
15	2017 டையரி	27.09.2022	அ.சா.ஆ.15	அ.சா.64	அசல்
16	09.03.20219 தேதியிட்ட ரூ.50/–ற்கான பத்திரம்–ரமேஷ்	27.02.2023	அ.சா.ஆ.16	அ.சா.66	அசல்
17	முதல் தகவல் அறிக்கை	10.07.2023	அ.சா.ஆ.17	அ.சா.67	அசல்
18	ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி	10.07.2023	அ.சா.ஆ.18	அ.சா.67	அசல்
19	கைப்பற்றுதல் மகசர்	10.07.2023	அ.சா.ஆ.19	அ.சா.67	அசல்
20	01.03.2019ம் தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்–தினேஷ்	10.07.2023	அ.சா.ஆ.20	அ.சா.67	நகல்
21	01.03.2019ம் தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்–பி.சுரேஷ்	10.07.2023	அ.சா.ஆ.21	அ.சா.67	நகல்
22	01.03.2023ம் தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்–பி.அழகர்	10.07.2023	அ.சா.ஆ.22	அ.சா.67	நகல்
23	01.03.2019ம் தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்–தாசன்	10.07.2023	அ.சா.ஆ.23	அ.சா.67	நகல்
24	01.03.2019ம் தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்–தர்மராஜ்	10.07.2023	அ.சா.ஆ.24	அ.சா.67	நகல்
25	09.03.2019 ம் தேதியிட்ட ரூ.20/–ற்கான பத்திரம்–என்.ரமேஷ்	10.07.2023	அ.சா.ஆ.25	அ.சா.67	நகல்
26	நான்கு பக்கங்களை	10.07.2023	அ.சா.ஆ.26	அ.சா.67	நகல்

	கொண்ட விபரங்கள் அடங்கிய தாள்களின் நகல்				

அரசு தரப்பு சான்று பொருட்கள் : இல்லை
எதிரி தரப்பு சாட்சிகள் : இல்லை
எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

LISI G Digitally signed by LISI G Date: 2026.04.20 19:28:46 +0530

நீகிக்கமை நடுவர்,
திருவாரூர்.

குறிப்பு :

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு எதிரிகளுக்கும்/காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்புரை நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர், அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.